
கல்கி
சிறப்புச் சிறுகதை
KALKI
25.7.1965
35 காசு

கல்கி

பொருளடக்கம்

விசுவாவசு ஆடி 10 ★ ஜுலை 25

"கல்கி"யில் வெளிவரும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.





யாருக்கு அடி?
பாதுகாப்புச் சட்டம்
இந்திய மக்கள்
சீனா
ருஷியா
சீனா
மாவ்-சே-துங்கின் 'சகோதரர்'
இந்தியாவின் ராணுவ உதவிக்குக்
கையொப்பமிடுகிறார்!
PK



மலர் 24 ★ இதழ் 52

அசூயை பிடித்த அரசாங்கம்

வியாபாரிகள் தங்களது மகாநாடுகளுக்குக் காங்கிரஸ் ஜமீன்தார்களை அழைக்கிற பழக்கத்தை இன்னும் ஏன் விடவில்லை என்பது புரியவில்லை. தொழில் பிரச்னைகளில் வியாபாரிகளின் பிரதிநிதிகளைக் கலந்தாலோசித்து அவர்களின் யோசனையைப் பெற அரசாங்கம் தயாராக இல்லாதபோது, வியாபாரிகள் அரசாங்கத்தினரை அழைத்துத் தங்களுக்கு தர்மோபதேசம் செய்யச் சொல்வது என்னத்திற்கு? இவ்வாண்டும் அகில இந்திய உணவு தானிய வியாபாரிகளின் வருஷாந்திரக் கூட்டத்துக்குக் காங்கிரஸ் யஜமானர்கள் அழைக்கப்பட்டிருந்தார்கள். அப்படி அழைத்ததற்குப் பலனாக அந்த விருந்தாளிகள் வியாபாரிகளை ஆதாரமின்றிச் சாடினார்கள்.

வியாபாரிகளின் சூழ்ச்சியாலுல்தான் தானியங்களில் செயற்கையான தட்டுப்பாடு உண்டாகி விலைவாசிகள் உயர்கின்றன என்பது சர்க்காரின் வாதம். ஒரு பெரிய உபகண்டத்திலுள்ள ஆயிரக்கணக்கான வியாபாரிகள் பரஸ்பரம் போட்டியிடும் சுதந்திர வியாபாரம் அமையும்போது அவர்கள் ஒன்று சேர்ந்து சதிசெய்ய முடியாது என்பதையும், தங்கள் பண்டம் சீக்கிரம் விற்பனையாக வேண்டும் என்பதே ஒவ்வொரு வியாபாரியின் இலட்சியம் என்பதையும் அரசாங்கத்தினர் உணரத் தவறுவது தேசத்தின் துர்ப்பாக்கியம். சர்க்காரின் சலுகை ஆட்சியால்தான், ஆட்சியாளர்களுக்கு அநுகூலமாயிருக்கும் சிலர் ஏகபோக்கியங்கள் பெற்றுக் கொள்ளை லாபம் அடிக்க இயலுகிறது.

வியாபாரிகளைக் காங்கிரஸ் அரசாங்கம் தாக்கி வருவதன் காரணம் என்ன? தங்களைத் தவிர பிறர் யாரேனும் செல்வச் செழிப்புடன் விளங்கினால் காங்கிரஸ்காரர்களுக்கு வயிற்றெரிச்சலும், அசூயையும் உண்டாகிறது. ஏழைகளுக்கு நன்மை செய்வதைவிட இந்தப் பொறாமை சித்தாந்தத்தைக் கொண்டே நல்ல வோட்டு சாகுபடியும் செய்ய முடிகிறது. உணவு தானிய மகாநாட்டில் ஸ்ரீ மொரார்ஜி பேசியபேச்சு காங்கிரஸின் அசூயை மனப்பான்மைக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு: 'உற்பத்தியாளருக்கு ஊக்கம் அளிக்க வேண்டியது அவசியம்தான்; ஆனாலும் சிறிய விவசாயிகள் தங்கள் விளைச்சலைத் தாங்களே பயன்படுத்திக் கொண்டு விடுகிறார்கள். எனவே பெரிய விவசாயிகளுக்குத்தானே ஊக்கமளிக்க வேண்டியிருக்கும்?' என்றுகூறி, அப்படிச்செய்வது ஏதோ பெரும் அக்கிரமம் என்பது போலப் பேசியிருக்கிறார். மொரார்ஜி அவர்களே ஒப்புக் கொள்வதுபோல் நாட்டுக்கு உணவு படைக்கும் திறன் பெரிய விவசாயிகளுக்குத்தான் இருக்கிறதெனில், இத்தகைய சேவை செய்யும் அவர்களுக்கு ஊக்கம் அளிப்பதில் தவறு என்ன? உற்பத்தி பெருகுவதற்கும் பட்டணக்கரைக்கு நிறைய தானியம் வந்து சேருவதற்கும் அதுதானே வழி? 'உற்பத்தி பெருகாமல் மக்கள் அவதிப்பட்டாலும் சரி, உற்பத்தியாளருக்கு ஊக்கமளிக்க மாட்டோம்' என்பது வெறும் அசூயை மனப்பான்மையே அல்லவா?

சர்க்காரின் கொள்கையால் பெரிய விவசாயி மட்டுமின்றிச் சிறிய விவசாயியும் பாதிக்கப்படுகிறான். ஏனெனில் பெரிய விவசாயிக்கு ஊக்கமளிக்காததால்தான் கடைக்கு வரும் தானியஉற்பத்தி பெருகவில்லை; தானியங்களின் விலைவாசியும் இறங்கவில்லை.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி — பாப்பா
— பாரதியார்

உணவு தானியத்தின் விலைவாசி உயர்வை ஒட்டி எல்லாப் பண்டங்களின் விலையும் உயருகின்றன. சிறிய விவசாயியும் தான் வாங்கும் பண்டங்களுக்கு இதனால் அதிக விலை கொடுத்து அவதியுற நேர்ந்திருக்கிறது.

பிரதேசப் பொறுமைப் பித்தின் அடிப்படையில் சர்க்கார் விதித்துள்ள போக்குவரத்துத் தடைகள் இன்றைய உணவுப் பிரச்னைக்கு முக்கியமான காரணம். 'கொள்கையளவில் உணவு மண்டலங்கள் என்ற பிரிவுகள் நாட்டில் இருக்கக் கூடாதெனினும் இன்றைய சூழ்நிலையில் இவற்றை நீக்குவது சாத்தியமாகத் தோன்றவில்லை' என்று மாயப் பேச்சுப் பேசுகிறார் மொரார்ஜி. இது வோட்டு வேட்டை பீதியில் பிறந்த சமாதானம். மக்களின் பிரதேசப் பித்துக்கு அடிபணியாமல், இந்த மண்டலக் கட்டுப்பாடுகளை அரசாங்கம் ரத்து செய்தால்தான் பிரச்னை ஓரளவுக்கேனும் தீரும்.

'சுய நன்மைகளுக்கு மேலாக நாட்டு நன்மையைக் கருத வேண்டும்' என்று ஸ்ரீ அசோக மேதா தானிய வியாபாரிகளுக்கு உபதேசித்திருக்கிறார். இந்த உபதேசம் காங்கிரஸ்காரர்களுக்குத்தான் மிகவும் அவசியம். மக்களிடம் அசூயை மனப் போக்கையும் வெறுப்புத் துவேஷங்களையும் கிண்டிவிட்டு, அதன்மூலம் தேர்தல் வெற்றி காண எண்ணும் காங்கிரஸுக்கு அதன் தலைவர்கள் அவசியமான நல்லுரைகள் தந்தபின், மற்றோருக்கு உபதேசிக்கலாம்.

அசூயை மனப்பான்மை உண்மை சோஷலிஸமாகாது: அதனால் ஏற்றத் தாழ்வுகளைச் சமன் செய்யவும் முடியாது. ஈரல் கோளாறினால் காமாலை ஏற்படுவது போல் சித்தக் கோளாறினால் ஏற்படும் ஒரு வியாதியே பொறாமையும் அசூயையும். இந்த வியாதியில் ஜனித்த கொள்கைகளால் நாடு நாசமாகுமுன் காங்கிரஸார் நோயை சொஸ்தம் செய்துகொள்ள வேண்டும். மூலதனச் சேமிப்பு, முதலீடு செய்வது, அதிலுள்ள இடுக்கண்களுக்கு ஈடாக நியாயமான லாபம் எதிர்பார்ப்பது, சுதந்திரமான தொழில் போட்டி, சர்க்காரின் செல்லப் பிள்ளைகளுக்கும் ஆளும் கட்சியின் நன்கொடையாளருக்கும் ஏகபோக்கியம் அளிக்காதிருப்பது — இவையே வளமான பொருளாதாரத்துக்கு உதவும் சுதந்திரத் தொழில் முறையின் அம்சங்கள். மூலதனமும், சேமிப்பும், லாபமும் கூடாது என்றால் பொருளாதாரமே பாழாகவேண்டியதுதான். 'மேகம் கொடுக்கும் மழையை ஆறும், ஏரியும் மட்டும் தேக்கி வைத்துக் கொள்வானேன்? நாடு முழுவதும் சமமாக நீர் பரவட்டும்' என்று கருதிக் கரையை வெட்டிவிடுவது போல், சிலரிடம் சேமிப்பு உயருவதைக் கண்டு அசூயையால் அதை அழித்து சம விநியோகம் செய்வதால் யாருக்கும் நன்மை இல்லை. உற்பத்தியாளரிடம் சேரும் செல்வம் வாய்க்கால்களாகப் பிரிந்து நாடு முழுவதற்கும் நன்மை பயக்கிறது. தொழிலதிபர்களும் விவசாயிகளும் வியாபாரிகளும் சுபிட்சமாயிருந்தால்தான் தொழிலாளர்களின் வேலை வாய்ப்புக்கள் பெருகி, அவர்களின் ஊதியமும் உயரும். ஆனால் சித்த வியாதியால் இந்த உண்மையை அரசாங்கம் உணருவதாக இல்லை. தமது அதிகாரத்தை நிலைநாட்டிக் கொள்வதற்கே அவர்கள் அசூயை சித்தாந்தத்தைப் பரப்புகிறார்கள் என்பதை மக்களும் உணரவில்லை.

இந்த உண்மைகளை உணர்த்தவே சுதந்திரக் கட்சி பாடுபடுகிறது. சுதந்திரக் கட்சியினர் அதிகாரத்தைக் கைப்பற்றும் ஆசைக்கு ஆட்பட்ட ஒரு கூட்டமல்ல. மக்களுக்குச் சுதந்திரத்தின் மாண்பை எடுத்துக் கூறி, சர்க்கார் சர்வாதிபத்தியத்தைத் தடுக்க முற்பட்டுள்ள ஓர் இயக்கமே சுதந்திரக் கட்சி. சர்க்காரின் ஆதிக்கத்தினின்று விடுபட்டுச் செல்வம் ஈட்டும் மக்கள் சமூகத்துக்குச் சேவை செய்ய அதிகமாகக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இவ்வாறு மக்கள் புதுப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு சர்க்கார் ஆதிபத்தியத்தை எதிர்க்கும் உணர்ச்சியைப் பெறவேண்டும் என்பதற்கே சுதந்திரக் கட்சி பாடுபடும்.

உலக நாடுகளில் மக்கள் சுதந்திரத்துக்காக உழைக்கும் எல்லாப் பெருமக்களுடனும் ஒன்றியுள்ள சுதந்திரக் கட்சியினர், ஆட்சி பீடத்தைக் கைப்பற்றுவதைவிட உயர்ந்த ஓர் இலட்சியம் தங்களுக்கு உண்டு என்கிற உணர்ச்சியுடன் செயலாற்றுவார்களாக.

என்ன சேதி?

இரட்டைத் தந்திரம்!

விவசாயிகள், சர்க்கார் கார்ப்பரேஷனுக்குத் தங்கள் தானியத்தைக் குறைந்த விலைக்குக் கட்டாயமாக விற்க வேண்டும் என்பதே அந்தக் கார்ப்பரேஷன் தலைவர் ஸ்ரீ பை விரும்பும் கட்டுப்பாட்டின் உட்பொருள். தனியாரின் சுதந்திர வியாபாரத்துக்கு மேம்பட்ட ஓர் அந்தஸ்தைச் சர்க்காரின் பலாத்கார வியாபாரத்துக்கு உண்டாக்கித் தரவேண்டும் என்பதே ஸ்ரீ பையின் திட்டம். சர்க்கார் வியாபாரம் செய்ய முற்பட்டால் வியாபார தந்திரத்தோடு அரசியல் தந்திரமும் சேர்ந்து விபரீதமாக வேண்டியதுதான்!

சபாஷ், கிருஷ்ண மேனன்!

இந்தியா ஒருபோதும் அணு ஆயுதத் தயாரிப்பில் ஈடுபடக் கூடாது என்று ஸ்ரீ வி. கே. கிருஷ்ண மேனன் அவர்கள் பேசியிருப்பதை வரவேற்கிறோம். சர்வ நாசகர அணு ஆயுதங்கள் தற்காப்புக்குப் பயன்படவே படாது. எதிரிமீது பிரயோகிக்கத்தான் பயன்படுத்த முடியும். அவ்வாறு அதைப் பிரயோகிப்பதற்கு உலகின் தார்மிக உணர்ச்சி எந்த நாட்டையும் அனுமதிக்காது. எனவே நம்முடைய பொருளாதார நிலைமையை நாசம் செய்து கொள்வது தவிர அணு ஆயுத உற்பத்தியால் எந்த விளைவும் ஏற்படாது.

ராஜாஜியின் கருத்துக்கள்

கோவைக் கல்லூரி மாணவர்களின் சமஷ்டி சங்கக் காரியதரிசியும், தமிழ் நாட்டு மாணவர்களின் ஹிந்தி எதிர்ப்புச் சங்கத்தின் அங்கத்தினருமான ஸ்ரீ ஏ. துரைக்கண்ணு பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருக்கிறார். மற்றும் பலரையும் கைது செய்திருக்கின்றனர். தமிழ் நாட்டின் முதன்மந்திரி போதிய அளவு 'உஷ்ணமாக' இல்லை என்று ஹிந்திப் பிரியர்கள் இனி குறைகூற முடியாது.

பாதுகாப்புச் சட்டம் என்ற சீன நெருக்கடிச் சட்டத்தைப் பிரயோகித்தே ஆங்கிலத்தின் இடத்தில் ஹிந்தியை அமர்த்திவிடுவது தான் சர்க்காரின் கொள்கை எனத் தோன்றுகிறது. ஆங்கிலத்தின் அந்தஸ்து இதுவரை இருந்தாற்போலவே நீடித்தால் தான் தேச ஐக்கியம் காக்கப்படும் என்று நாட்டின் அறிவாளிகள் யாவரும் கூறி வருகிறார்கள். இச்சமயத்தில் சீனப் பகைவர்களை உத்தேசித்துச் செய்யப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டு அடுத்த இந்தியத் தலைமுறையின் நம்பிக்கைக்கு உருவமான மாணவர்களை நாடு சிதறிப் போகும் ஒரு திட்டத்துக்கு அடிபணிய வைப்பது விதியின் விளையாட்டு என்றே சொல்ல வேண்டும். நாட்டை நல்ல முறையில் ஆட்சிபுரிவதற்கான வழி கல்வியறிவுள்ள இளைஞர்களை விரோதித்துக் கொள்வதல்ல.

ஃஃஃ

ஸ்ரீ வி. பி. மேனன் அவர்கள் மிகவும் உடல் நலம் குன்றியிருக்கிறார். சமீபத்தில் அவரை பெங்களூரில் பார்த்தபோது மிகவும் கலங்கினேன். எலும்பும் தோலுமாக இருக்கிறார். அவருக்கு லண்டனில் உள்ள ஆஸ்பத்திரி ஒன்றில் சிகிச்சை அளிப்பதற்கு மைசூர் ஸ்டேட் ஏற்பாடு செய்வதாகத் தெரிகிறது. இந்திய சர்க்கார் இதற்குத் தேவைப்படும் அந்நியச் செலாவணியைத் தந்து உதவுவதில் சிக்கல் ஏதுமிராது என நம்புகிறேன்.

இந்திய சுதந்திரத்துக்காகவும், சமஸ்தானங்களின் இணைப்புக்காகவும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சேவை செய்த ஓர் உத்தியோகஸ்தர் ஸ்ரீ மேனன். இந்தப் பணிக்காகவே அவர் ஒரிஸ்ஸாவின் கவர்னராக்கப்பட்டார். கம்யூனிஸ்ட் கூட்டாரின் சமாதான மகாநாட்டுப் பிரதிநிதிகளுக்கும், மற்றும் ஏராளமான காங்கிரஸ் மந்திரிகளுக்கும் அந்நியச் செலாவணி சுலபமாகக் கிடைக்கும்போது ஸ்ரீ மேனன் விஷயத்தில் கண்டிப்புக் காட்ட மாட்டார்கள் என்றே நம்புகிறேன்.

ஃஃஃ

காவலிலே வைக்கப்பட்டிருக்கும் ஷேக் அப்துல்லாவையும் அவர் நண்பர் பேக்கையும் வேறிடங்களுக்கு மாற்றக்கூடும் என்று பயந்து மிருதுலா ஸாராபாய் அடித்திருந்த தந்தி சென்ற இதழில் பிரசுரமாயிற்று. அவர் பயந்தது போலவே இவ்வாரம் ஷேக் அவர்களை பேக் சாகேபிடமிருந்து பிரித்துக் கோடைக்கானலில் காவல் வைத்திருக்கிறார்கள். வெளி உலகத் தொடர்பிலிருந்து இவ்விருவரையும் மேலும் ஒதுக்கி வைத்திருக்கும் கொடுமைக்கு என்ன காரணம் என்பது சாமான்ய மக்களுக்குப் புரியவில்லை.

குற்றம் செய்துவிட்டோமென்ற மனப்பான்மை அசாதாரணமான முறைகளில் செயலாற்றுகிறது. சர்க்கார் எதைக் குறித்து அஞ்சுகிறது என்பதை யாரும் அறிய முடியவில்லை. காச்மீரம் இந்தியாவின் ஒரு பகுதி என்பது மாற்ற முடியாத உண்மை என்று இந்திய சர்க்கார் கருதுமாயின் ஷேக் அப்துல்லாவும், அஃப்ஸல் பேக்கும் இந்தியப் பிரஜைகள்தான். எல்லா இந்தியப் பிரஜைகளைப் போலவே அவர்களையும் விசாரணை செய்து, குற்றம் நிரூபணமானால்தான் சிறை வைக்க வேண்டும் அல்லவா? அவ்வாறு ஏன் செய்யவில்லை?

ஃஃஃ

நகரப்புற நிலங்களின் மீது வரி விதிக்கும் போது அவற்றின் இன்றைய மார்க்கெட் விலை மதிப்பின் மீது வரித் தொகை நிர்ணயிக்கப்படுவதாகவும், கட்டடமுள்ள நிலப் பகுதிக்கும்கூட வரி விதிக்கப்படுவதாகவும் தெரிகிறது. எனவே இது உண்மையில் சொத்து வரியே (Wealth tax) ஆகும்.

நகரசபையின் எல்லைக்குட்பட்ட இனத்தில் ராஜ்ய சர்க்கார் அத்துமீறிப் பிரவேசித்திருக்கிறது. மேலும், மத்திய சர்க்கார்கூட நினைக்காத விதத்தில் புது அதிகாரங்களை ஏற்றுச் சொத்து வரி வசூலிக்க ராஜ்ய சர்க்கார் முற்பட்டிருக்கிறது. இந்தத் துராக்கிரகத்தை மத்திய சர்க்கார் ஆட்சேபிக்காது. ஆனால், அதிகார எல்லைகள் சீராக வகுக்கப்பட வேண்டுமென்பது மக்கள் உரிமை.

ஃஃஃ

பள்ளிக்கூடப் பிள்ளைகளும், கல்லூரி மாணவர்களும் தினந்தோறும் ஒரு பிரதிக்ஞை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று ஒரு புதிய சடங்கைச் சென்னை சர்க்கார் உத்தேசித்திருக்கிறது. இதைவிட முட்டாள்தனமான யோசனை இருக்க முடியாது. இதனால் விசுவாசமில்லாத மாணவர்களை வெளியேற்றிவிட எண்ணமாயின், இந்த நோக்கம் நடைமுறையில் வியர்த்தமேயாகும். மேற்படி திட்டத்தைக் கொண்டு, மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்படும்போது அவர்கள் கிளர்ச்சி செய்யாமல் தடை செய்ய முடியும் என்று நினைத்தால் அந்தக் கருத்தும் நடைமுறையில் தோல்வியே அடையும். நிர்ப்பந்தத்தின் கீழ் மந்திரத்தைச் சொல்லி வந்தால் ஒரு மாதத்துக்குள்ளாகவே அதன் சக்தி குறைந்து போகும். ஒவ்வொரு முறை படிக்கும் போதும் புதுப் புது முறையில் மாணவர்களை ஈர்க்கக்கூடிய இலக்கியத்தினால்தான் அவர்கள் மனத்தில் நல்ல கொள்கைகளைப் பதிவு செய்ய முடியும். ஆங்கிலத்திலும், இந்திய மொழிகளிலும் இத்தகைய இலக்கியத்துக்கு

ஏதும் பஞ்சமில்லை. அதை விட்டு, சர்க்காரின் பலாத்காரச் சடங்கு ஒன்றைப் பிரஜைகளும் அமுலாக்குவதால், விசுவாசப் பிரமாணத்தின் புனிதமான வார்த்தைகளே வலு விழந்துபோகும். சர்க்காரின் கொள்கைகளை எதிர்ப்போரைச் சமாளிக்க வேண்டுமாயின் அதற்கு வேறு வழி தேட வேண்டும். எத்தனையோ சட்டங்கள் நம் நாட்டில் அர்த்தமற்ற கூத்தாகிவிட்டதைக் கண்டு வருகிறோம். இந்நிலையில் புதிய சட்டங்கள் எதுவும் வேண்டாம். பிரிட்டிஷ் ஆட்சிக்குப் பெரும் எதிர்ப்பு இருந்த காலத்திலும் அந்நிய சர்க்கார்கூட நினைத்திராத ஒரு திட்டத்தை சுதேச சர்க்கார் அமுல் செய்வது துரதிருஷ்டமாகும்.

ஃஃஃ

பிரெஞ்சு மொழியில் வெளியாகியுள்ள ஒரு சுயசரிதையை விமரிசிக்கும் ஆர்தர் டரக் என்பவரின் கருத்து தமிழ் வாசகர்களுக்கும் சுவாரஸ்யமாக இருக்கும்.

''சுய சரிதை என்பதை இலக்கியத்தின் ஓர் இனம் என்றே சொல்வதற்கில்லை. தன்னுடைய செயல்கள் நியாயமானவை என்று வாதித்து அதை நிரூபிப்பதற்காக, கவனமாகத் தேர்ந்தெடுத்த ஒருசில சம்பவங்களையும் செயல்களையும் கூறுவதே சுயசரிதை எனப்படுகிறது. பொய்களை எழுதாவிட்டாலும், உண்மையிலுள்ள பாதகமான விஷயங்களை மறைப்பதே நாம் காணும் சுயசரிதைகள்.''

ஃஃஃ

புழலேரியிலிருந்து சென்னை நகரத்துக்குப் பெர்மிட் இல்லாமல் 39 மூட்டை அரிசி அனுப்பியதாக நாலு பேருக்குத் தலா 150 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது. மூட்டைகளை எடுத்து வந்த லாரி டிரைவருக்கும் தண்டனை அளிக்கப் பட்டிருக்கிறது. சென்னை நகரத்துக்குப் போதிய அரிசி கிடைப்பதற்கும், விலை இறங்குவதற்கும் சர்க்கார் எடுத்துள்ள இலட்சணமான நடவடிக்கை இதுவே. அருகேயுள்ள புழலேரியிலிருந்து அரிசிக்குத் தவிக்கும் சென்னை நகருக்குத் தானியம் இயற்கையாக வருவதற்கு இத்தனை இடர்ப்பாடு. பெர்மிட்—லைசென்ஸ்—ராஜ்யம் என்றால் என்ன என்று புரிந்து கொள்ளாதவர்களுக்கு இது ஒரு நல்ல உதாரணம்.

ஃஃஃ

கோடிக்கணக்கான ரூபாய் கொடுத்து அயல் நாடுகளிலிருந்து நமது ராணுவத்துக்காகக் கப்பல்கள் வாங்கப்படுகின்றன. ஆனால் விலை உயர்ந்த இந்தக் கப்பல்களை நல்ல முறையில் பராமரிப்பதில் போதிய அக்கறை காட்டப் படுவதில்லை எனத் தெரிய வருகிறது. கப்பலில் ரிப்பேர்கள் செய்ய வேண்டுமானாலும் மேலிடத்துக்கு எழுதி அனுமதியும் சாமான்களும் பெறுவதற்குள் பெருத்த கால தாமதம் ஏற்படுகிறது. போதிய நிதி வசதி இல்லாமலே நவீன தளவாடங்களைப் பெற நமது சர்க்கார் ஆசைப்படுகிறது. ஆனால் ஆசைக்கேற்ற ஆற்றலும் இருக்க வேண்டும். படாடோபமாக ராணுவத் திட்டங்களைத் தொடங்கி விட்டுப் போதிய கவனமில்லாததால் அவை பாழாவதற்கு விடுவது புத்திசாலித்தனமல்ல.

ஃஃஃ

'நியூயார்க் டைம்ஸி'ல் வெளியாகியுள்ள அடியிற் கண்ட குறிப்பு இந்திய அரசியல் உலகுக்கு மகிழ்ச்சியளிக்கும்:

பின்தங்கிய நாடுகளின் அபிவிருத்திக்காக வட்டியின்றியே கடன்கள் தரப்போவதாக பிரிட்டனின் தொழிற் கட்சி மந்திரி சபை அறிவித்துள்ளது. பெருத்த அந்நியக் கடன்களைச் சுமந்து வரும் நாடுகளின் பளுவைக் குறைக்க இது பெரிதும் உதவும்.

புதிய கடன்களில் ஒரு கணிசமான பகுதியைப் பழைய கடன்களை அடைப்பதற்காகவே செலவிட வேண்டிய நிலையில் பல பின்தங்கிய நாடுகள் உள்ளன. இதனால் புதிய கடன் தொகைகள் பழைய பாக்கியைத் தீர்ப்பதிலேயே பெரிதும் உபயோகமாகின்றன; அபிவிருத்தித் திட்டங்களுக்கு அவை உதவுவதில்லை. பிரிட்டனின் திட்டப்படி வட்டியில்லாமல் கடன் தரப்படுமாதலால், அபிவிருத்தித் திட்டத்திலேயே நிதியைச் செலவிடலாம்.

ஃஃஃ

கடன் வாய்தாக்களைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்குமாறு இந்திய உதவிக் குழுவை (Aid India consortium)க் கேட்டுக் கொள்வதெனச் சர்க்கார் உத்தேசித்திருக்கிறது. அடுத்த ஐந்தாண்டுகளில் நாம் திருப்பியாக வேண்டிய கடன் தொகை 1100 கோடி ரூபாய். உலக பாங்கிக்குத் திருப்பித் தர வேண்டிய கடன் தவணைகளை நிறுத்தி வைப்பதற்கில்லை என்றும், வேண்டுமானால் புதுக் கடன் வாங்கிப் பழைய கடனை அடைக்கலாமென்றும் சொல்லப்படுகிறது. சர்க்காரின் நிதிக் கொள்கை தோல்வியடைந்து திவாலா நிலைமையை நோக்கிச் செல்வதைத்தான் இந்தப் பொருளாதார பரிபாஷை மறைக்கப் பார்க்கிறது.

ஃஃஃ

கோவாவில் பொதுத் தேர்தல்கள் நடக்கு முன்பு ஸ்ரீ தயாநந்த பந்தோத்கர் அவர்களின் மந்திரி சபை ராஜிநாமாச் செய்யும் என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த யோசனை நடைமுறைக்கு வருமா, அல்லது மைசூர் காங்கிரஸின் எதிர்ப்பின் காரணமாக நிறுத்தி விடப்படுமா என்று சொல்வதற்கில்லை. அது எப்படியாயினும் இவ்வாறு யோசனை வெளியாகியிருப்பதே நான் போராடி வரும் ஒரு கருத்தின் வெற்றியாகும். பொதுத் தேர்தலுக்கு முன்னால் மந்திரிசபை ராஜிநாமாச் செய்து, ஆட்சிப் பொறுப்பைக் கட்சிச் சார்பற்ற நிருவாகத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்று நான் கூறி வருவது ஸ்ரீ லால் பகதூரின் எண்ணத்திலும் தோன்றியிருப்பதற்காக அவரை மனப்பூர்வமாக வாழ்த்துகிறேன்.

பிரிட்டனிலோ, அமெரிக்காவிலோ, மற்ற காமன்வெல்த் நாடுகளிலோ இந்த முறை பின்பற்றப்படுவதில்லையாயினும், நம் நாட்டின் பிரத்தியேகச் சூழ்நிலையை ஒட்டி இத்தகைய ஓர் ஏற்பாடு அவசியம்.

'சோ' எழுதும்

ஹாஸ்யத் தொடர் நாடகம்

சேவைக்காக வாழ்ந்து காட்டும் சகோதரி

சுப்புலக்ஷ்மியின்

வாழ்க்கை வரலாறு

கல்கி ஆகஸ்ட் 15 ஆரம்பம்

சேவைக்கு ஒரு சகோதரி

◆ ஆங்கிலம்: மோனிகா ஃபெல்டன்
◆ தமிழாக்கம்: அநுத்தமா

அடுத்த இதழ்

சிறுகதைச் சிறப்பு மலர்

சரித்திரக் கதை	—	அகிலன்
ஹாஸ்யக் கதை	—	தி. ஜானகிராமன்
பிரச்னைக் கதை	—	கு. அழகிரிசாமி
சோகக் கதை	—	சுந்தர ராமசாமி
காதல் கதை	—	ஆர். சூடாமணி
கவிதைக் கதை	—	சோமு
திருப்பக் கதை	—	மாயாவி
புராணக் கதை	—	பரசுராம்
மர்மக் கதை	—	துமிலன்
உருவகக் கதை	—	ஜ. சாமிநாதன்

இன்னும் பல கதைகள்

சிரஞ்சீவிக் கதைகள்...

5. மனு நீதிச் சோழன்




சோழ மன்னன் மனுவின் மைந்தன் வீதிவிடங்கன் தலைநகரின் வீதிகள் வழியே வழக்கம்போல் ரதத்தில் உலா வருகிறான்.



கன்று ஒன்று துள்ளி வந்து ரதச் சக்கரத்தில் சிக்கி மாய்கிறது.




துயரத்தால் துடிக்கும் தாய்ப்பசு அரண்மனை நோக்கி ஓடுகிறது.



அங்குள்ள ஆராய்ச்சி மணியை வாயால் பற்றி அடிக்கிறது.



மணி ஓசை கேட்ட மன்னன் மனு வெளியே வருகிறான். பசுவின் பரிதாபம் கண்டு விசாரணைக்கு உத்தரவிடுகிறான்.



விவரம் அறிந்ததும் வீதிவிடங்கன்மீது தேரேற்றத் தீர்ப்பு அளிக்கிறான்.



கி. ராஜேந்திரன்

அத்தியாயம் 19

"பட்டணத்துப் பட்டிக்காடு"

செல்லம் தன் உறவினள், தன் அத்தை மகள் என்பது தங்கப்பனுக்குத் தெரியாத ஒன்ரு அல்லது அவள் தன்னைக் காதலிக்கிருள் என்பது தான் அவன் உணராத விஷயமா? இருப்பினும் இந்த நினைவுகள் இதுவரை ஏற்படுத்தித் தராத ஒரு நெருக்கத்தை அன்று பிற்பகல் ஐயனர் கோயில் அருகே செல்லம் நடந்து கொண்ட விதம் — அவனது லட்சிய நோக்கங்களைத் தானும் புரிந்து கொள்வதாகக் கூறியதுடன் அவை நிறை வேறத் திருமணத்தை நிறுத்தி வைப்பதாஞலும் சரி என்று ஒப்புக் கொண்டு அவனுடன் ஒத்துழைக்கத் தீர்மானித்த அவளது மனேபாவம் - உருவாக்கியது. தங்கப்பனின் இதயத்தை உலுக்கி விட்டாள் அவள். இத்தனை நாட்களாக அவளிடம் அவன் கொண்டிருந்த பரிவு, பாசம் ஆகியவற்றுடன் புதியதாக ஓர் உணர்வும் அவன் உள்ளத்தில் புகுந்தது. 'காதல்தாஞ அது?' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான் தங்கப்பன். இதற்குப் பதில் கூறுவதேபோல் அவன் இருதயம் துரித கதியில் படபடத்துத் துடித்தது. செல்லத்தின் இமைகள் படபடத்துக் கண்ணீரைத் ததும்பி வழியச் செய்த போது.

'ஒரு வேளை இவள் கல்யாணம் வேண்டாம் என்று அதற்குள் பெற்ருேரிடம் கூறி விட்டு அதனுல் அவர்களது கோபத்துக்கு ஆளாகிக் கண்ணீர் வடிக்கிருளோ?' என்று நினைத்தான்.

'ஐயோ! இந்த வேதனையை இவளுக்கு அளிக்கும் நிலையில் நான் இல்லாமல் இருக்கக் கூடாதா?' என்று ஏங்கவும் செய்தான்.

''செல்லம்! செல்லம்! என்ன இது? எதற்காக அழுகிருய்?'' என்று பரபரப்புடன் கேட்டான் தங்கப்பன். வீட்டினுள்ளே பெரியவர்களுக்கு மத்தியில் சகஜமாக அவர்கள் பழகியவர்கள் தாஞகையால் அவள் மாடி ஏறித் தன்னைத் தனிமையில் காண வந்ததையோ, அப்படி வருகையில் ஒரு தம்ளரில் கண்டக் காய்ச்சிய மணம் மிகுந்த பாலைக் கொணர்ந்து அருகிலிருந்த ஒரு மூக்காலியின் மீது அவள் வைத்திருந்ததையோ, அவன் 'வழக்கமில்லாத புது ஏற்பாடாக இருக்கிறதே' என்று கருதிய போதிலும் தவருகவும் எடுத்துக் கொள்ளவில்லை; அது அவனுக்குத் தவிப்பையும் தரவில்லை. ஆனல் பால் நிறைந்த பாத்திரத்தை அங்கு வைத்துவிட்டு நிமிர்ந்த அவள் மென்னமாக அழுததுதான் அவன் இதயத்தைக் கசக்கிப் பிழிவதாய் அமைந்தது. குறிப்பாக, இப்போது, அவன் தன் அந்தரங்கங்களைப் பகிர்ந்து கொண்டு முன்னெப்போதையும் காட்டிலும் தனக்கு மிகவும் ஆத்மார்த்தமாக வேண்டியவளாகிவிட்ட பிறகு அவள் துயருறுவதைத் தன்ஞல் பொறுக்கவே முடியாதெனத் தோன்றியது அவனுக்கு.

''அத்தான்! நான் வெறும் பட்டிக்காடாக இருக்கிறேனில்லையா?'' என்று நாத் தழுதழுக்கக் கேட்டாள் செல்லம். ''உங்களுக்குப் பிடித்ததை வாய்க்கு ருசியாகச் செய்து போடக் கூடத் தெரியாத அசடாக இருக்கிறேன்!'' நெஞ்சின் ஆழத்திலிருந்து பீறிட்டுக் கொண்டு வந்த துக்கம் கேவலாக வெளிப்பட்டது.

அவள் அழுகைக்குத் தான் ரொம்பவும் கவலைப்பட வேண்டியதான பெரிய காரணமேதுமில்லை என்று கண்ட தங்கப்

பன் மெல்லச் சிரித்தான்: "செல்லம்! சாயந்திரம் நான் ஏதோ கிண்டலாகப் பேசிக் கொண்டிருந்தேன். அவ்வளவு தான். வெஜிடபிள் ஆம்லெட்டும், ஹாம்பர்கரும் யாருக்கு வேணும்? அவை யெல்லாம் ஹோட்டலில் போய்ச் சாப்பிட்டால் தான் ரசிக்கும். வீட்டிலே அபூர்வமாக நிகழும் விருந்து தினங்களைத் தவிர மற்ற நாட்களில் குடும்பப் பாங்காக அடக்கமான சமையலாக இருப்பதுதான் சரி. பீர்க்கங்காய் துவையலும் மிளகு ரசமும் எனக்கு ரொம்பப் பிடித்தமானவைதான்!"


"அதையும் எனக்கு ஒழுங்காகச் செய்யத் தெரியவில்லையே, அத்தான்! இல்லாவிட்டால் 'தங்கப்பன் அரை குறையாகத்தான் சாப்பிட்டிருக்கிறான்; இந்தப் பாலையாவது கொண்டு கொடுத்து விட்டு வா' என்று சொல்லி என்னை மாமி அனுப்பி வைப்பாங்களா?" இப்படிக் கேட்டு விட்டுச் செல்லம், அடக்கமாட்டாமல் கிளம்பும் தன் விம்மல் ஒலி கீழே இருப்பவர்களின் காதுகளில் விழுந்து விடப்போகிறதே என்ற பயத்தில் முந்தானையால் வாயைப் பொத்திக் கொண்டாள்.

"அடப் பைத்தியமே!" என்று அனுதாபப்பட்டான் தங்கப்பன். "மாருதி ஸார் உன் சமையலை நள பாகம் என்று சொல்லிப் பிரமாதமாகப் புகழ்ந்தாரே தெரியாதா உனக்கு?"

"அவர் பேச்சு உங்களுக்கு உசத்தியாக இருக்கலாம்; அதைக் கேட்டு நான் பூரித்துப் போக முடியுமா? எனக்கு உங்கள் அபிப்பிராயம்தானே முக்கியம்!"

"மாருதி ஒரு துக்கமான செய்தி சொன்னார் இன்றைக்கு — நான் சின்ன வயதிலிருந்து ரொம்பவும் மதிப்பும் மரியாதையும் வைத்து அந்நியோன்யமாகப் பழகி வந்த ஷண்முகம் வாத்தியார் காலமாகி விட்டதாக. அதுதான் எனக்கு ரொம்பவும் விசனமாக இருந்தது. சாப்பாடு இறங்கவில்லை. உன்னுடைய இந்தக் கைகளின் திறமையில் ஒரு குறையும் இல்லை!"

இவ்விதம் கூறியவாறே தங்கப்பன் அவளது இடது கரத்தைத் தனது உள்ளங் கையில் ஏந்தி மற்றொரு கரத்தால் புறங்கையை அன்புடன் தடவிக் கொடுத்தான். எங்கே இரண்டு தடவைகள் வருடியபின் அத்தான் தன் கரத்தை விட்டு விடுவாரோ என்று அஞ்சியவள் போல அவ்வாறு நடவாதிருக்குமாறு மற்றொரு கரத்தின் விரல்களால் அன்பு காட்டிய அத்தானின் விரல்களைப் பொத்திப் பற்றிக் கொண்டாள் செல்லம். நான்கு கரங்களும் ஒன்றன் மீது ஒன்றாகப் பதிந்து



ஒன்றிடம் ஒன்றாகச் சிறைப்பட்டுக் கிடந்தன. அவ்விதம் அடிமைப்பட்ட கரங்கள் விடுவித்துக் கொள்ள முயலவில்லை. அதற்கு மாறாக அந்நிலையை விரும்பி வரவேற்றன. மீளாத அடிமைத்தனத்திலேயே மூழ்கித் திளைக்க முற்பட்டன. ஒன்றிய மனங்கள் இரண்டு ஒன்றிடம் ஒன்றாக அடிமைப்பட்டுக் கிடப்பதிலேயும் அலாதியான, அளவற்ற ஓர் இன்பம் இருக்க முடியும் என்பதற்கான அறிகுறிகளைக் காண ஆரம்பித்தான் தங்கப்பன்!

ஏதோ ஒருவித பிரமை கலந்த மயக்க நிலையில் நின்ற அவனுக்குச் செல்லத்தின் கண்ணீர்த் துளிகள் அந்தக்



கரங்களின் குவியலின் மீது விழுந்த போதுதான் விழிப்பு ஏற்பட்டது.

''செல்லம்! என்ன இது, மறுபடியும்?'' என்று துணுக்குற்றுக் கேட்கத் தொடங்கியவன், ''ஓ, இதைத்தான் ஆனந்தக் கண்ணீர் என்பார்களோ?'' என்றான் மகிழ்ச்சியோடு.

''ஆகக்கூடி எப்படிப் பார்த்தாலும் நான் வெறும் பட்டிக்காடுதான் அத்தான்!'' என்றாள் செல்லம் துயரம் தோய்ந்த குரலில். ''நான் ஆனந்தக் கண்ணீர் பெருக்க வேண்டும் என்று நீங்கள் நினைக்கும்போது நான் நிஜமாகவே அழுகிறேன். உங்கள் உபாத்தியாயர் இறந்த செய்தி கேட்டு நீங்கள் மனச் சங்கடப்பட்டுக் கொண்டிருக்கையில் ஆறுதல்கூடக் கூறத் தெரியாத ஜடமாக இருக்கிறேன். அப்போதும் தற்குறியான என்னுடைய சமையல் உங்களுக்குப் பிடித்ததோ இல்லையோ என்று அதைப் பற்றியே நினைத்துக் கொண்டு தடுமாறித் தவிக்கிறேன். இப்படிப்பட்ட ஒரு பட்டிக்காட்டுப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ள உங்களுக்கு எப்படிச் சம்மதமாயிருக்கும்? அதனால்தான் கல்யாணம் வேண்டாம் என்கிறீர்கள், இல்லையா?'' கோணிக் குனிந்த தலை நிமிராமல் பேசினாள் செல்லம்.

''ஆமாம்'' என்று கேலிச் சிரிப்புடன் பதில் கூறினான் தங்கப்பன். ''பட்டணத்திலிருந்து வந்த பட்டிக்காடு நீ! சத்தியபுரி போன்ற ஒரு சிற்றூரில் — பட்டிக்காட்டில் — பிறந்து வளர்ந்தும் பட்டணத்து நாகரிகத்தில் மூழ்கித் திளைப்பவள் உஷா! உங்கள் இருவருக்குமிடையில்தான் எவ்வளவு வித்தியாசம்!''

நெருப்பைத் தீண்டி விட்டது போலத் தன் கரங்களை உதறி விடுவித்துப் பின்னுக்கிழுத்துக் கொண்டாள் செல்லம். போகிற போக்கில் உஷாவின் பெயரைப் பேச்சில் ஓர் உதாரணத்துக்காக இழுத்ததே செல்லத்தின் மேனியில் இத்தனை பெரியதோர் எதிர் இயக்கத்தைத் தோற்றுவிக்கும் என்று தங்கப்பன் சற்றும் எதிர்பார்க்கவில்லை. 'இந்தப் பெண்ணுக்கு உஷாவிடம்பொறாமையா? ஏன்? எதற்காக? ஊட்டியில் உஷாவைப் பார்த்தபோதும் அவளைப் பற்றிப் பேசிய போதும்கூட இந்த அளவுக்கு ஒரு பொறுமை இழந்த துடிப்பைச் செல்லத்திடம் காணவில்லையே நான்? அத்தானின் அந்தரங்கங்களைப் பகிர்ந்து கொண்ட உரிமையின் விளைவா இது?' விசித்திரமாக இருந்தது அவனுக்கு.

''அத்தான்! எனக்கு ஒரு விஷயம் தெளிவாகத் தெரிய வேண்டும்'' என்றாள் அவள். ''நமது கல்யாணத்தை நிறுத்தி வைக்க வேண்டும் என்று நீங்கள் கருதுவதற்கு உங்கள் லட்சியங்கள் நிறைவேற வேண்டும் என்கிற ஒரே காரணம்தானே?''

தங்கப்பனுக்கு அவள் மனப்போக்கு, அவள் கேள்வியின் உட்பொருள், எல்லாம் தெளிவாக எளிதில் விளங்கக் கூடியதாயிருந்தன. அவள் தேகத்தில் பரவியிருந்த படபடப்பும் குரலில் தென்பட்ட நடுக்கமும் அவள் இதயத்தைப் படிப்பதை இலகுவாக்கின.

எனினும், ''அதெப்படிச் சொல்ல முடியும்?'' என்று கேட்டான் தங்கப்பன். ''அந்த ஒரு காரணம்தான் என்று அடித்துக் கூறுவது சாத்தியமில்லையே!''

திடுக்கிட்டு நிமிர்ந்து மருட்சியுடன் அவனை நோக்கினாள் செல்லம்.

தங்கப்பன் தொடர்ந்தான்: ''உன் அப்பா உன்னை எனக்கு மணமுடித்துத் தருவதன் மூலம் எங்களுக்கு இருக்கும் சொத்தெல்லாம் நம்மிரு குடும்பத்தினுடையதுமான பொதுவுடைமையாகி விடும் என்று எதிர்பார்க்கிறார். நான் தொழிற்சாலை என்று ஆரம்பித்து லாபமடைந்தால் சரி, பெருமளவுக்கு நஷ்டப்பட்டால்? அப்போதும் அவர் இந்தச் சம்பந்தத்தை விரும்புவாரா என்று யோசிக்க வேண்டும். இன்னொரு பக்கம் என் தாய் மாமன் முருகேசன் வேறு இருக்கிறார். என் தகப்பனார் இறந்த பிறகு வருஷக் கணக்கில் எங்கள் நிலங்களையெல்லாம், ஆட்களை வைத்து வேலை வாங்கிப் பண்படுத்திப் பயிர் செய்து நிர்வகித்து வருபவர் அவர்தான். தமது மகளை அவர் எனக்குக் கட்டிக் கொடுத்து இத்தனை நாள் அநுபவ பாத்தியதையை நிரந்தரமாக்கிக் கொள்ள எண்ணுகிறார். ஆனால் என் அம்மாவுக்கு உன்னிடம்தான் பிரியம். தம் ஆசை ஈடேறாது என்றதும் முருகேசன் மாமாவுக்கு ஆத்திரம் பொங்கும். அத்துடன் அவர் இத்தனை வருஷங்களாக உயிரைக் கொடுத்துப் பயிர் வைத்து வந்த நிலங்களை நான் விற்கப் போகிறேன் என்றால் மீசையை முறுக்கித் தொடையைத் தட்டிக் கொண்டு மல்லுக்கு நிற்கப் போகிறார். இப்படியாக எத்தனையோ சிக்கல்களைச் சமாளிக்க வேண்டியிருப்பதால்தான் என் கல்யாணத்துக்கு இப்போது ஒன்றும் அவசரமில்லை என்கிறேன்.''


''அத்தான்! நான்தான் முன்னமேயே என்னைப் பட்டிக்காடு என்று வர்ணித்துக் கொண்டு விட்டேனே;

எப்பொழுதும் புத்துணர்ச்சியுடன் இருங்கள் நாள்முழுவதும் சுறுசுறுப்பாக இயங்குவதற்கான புத்துணர்ச்சிக்கு

புதிய கால்கேட் லோர்னே டால்க்

புதிய கால்கேட் லோர்னே டால்க்கின் புதுப்பிக்கும் நறுமணம் உங்களைக் குளுமையுடனும், புத்துணர்ச்சியுடனும் வைத்திருக்கிறது.... நாள் முழுவதும் அந்தத் துடிப்பான சுறுசுறுப்பைத் தருகிறது. இளமைத் துடிப்பும், சுறுசுறுப்பும், விளையாட்டுகளில் பிரியமுள்ளவர்கள் குறிப்பாக கால்கேட் லோர்னே டால்க் வியர்வையைத் துரிதமாக கிரகித்துக்கொண்டு தாங்கள், நாள் முழுவதும் உற்சாகமாக இருக்க உதவுவதை நன்கு அறிவார்கள்!

இது சிக்கனமானதும்கூட! உங்கள் குடும்பத்தினருக்கு கால்கேட் லோர்னே டால்க்கை வாங்குங்கள்—அது சுறுசுறுப்பான நாகரீக மக்களுக்கேற்ற புதியதொரு பரவசமூட்டும் நறுமணம் கொண்டது!







LIFEBUOY
for health

அதனால் எனக்குச் சரியாகக் கேட்கத் தெரியவில்லை. ஆனால் நான் உங்களிடமிருந்து என்ன பதிலை எதிர்பார்க்கிறேன் என்பது உங்களுக்கே வெகு நன்ருகத் தெரியும். இருந்தாலும் சுற்றி வளைத்து ஏதேதோ பேசி வேடிக்கை பார்க்கிறீர்கள். அத்தான்! இன்று மத்தியானத்துக்கு மேல் ஐயனுர் கோயிலருகே உங்கள் எதிர்காலத் திட்டங்களைப் பற்றிப் புரிந்துகொண்ட அந்தக் கணத்திலிருந்து எனக்கு ஒரே நோக்கம்தான். அது, இப்போது நான் நடந்து கொள்கிற விதத்தாலேயே உங்கள் மனைவியாக விளங்க நான் தகுதியுடையவள்தான் என்பதை நிரூபிக்க வேண்டும், உங்கள் முழு அன்பையும் பெற வேண்டும் என்பதுதான்.''

''அதை முன்னிட்டுத்தான் உடனடியாகச் சமையலறைக்குள் புகுந்து அத்தானுக்குப் பிடித்ததைப் பண்ணிப் போட முற்பட்டாயாக்கும்! எல்லா நல்ல விஷயங்களையும் ரசிப்பதுபோலவே நன்ருகச் சமைத்துப் போட்டாலும் ருசித்துச் சாப்பிடக் கூடியவன்தான் நான். ஆனால் கலியாணம் செய்து கொண்டு குடும்பம் நடத்துவதென்பது குழந்தைகள் விளையாடுவதுபோல் சமைத்துச் சாப்பிடுவதுடன் முடிந்து விடுகிற காரியமில்லையே, செல்லம்!''

தங்கப்பனின் சிரிப்பைச் செல்லம் இப்போது விரும்பவில்லை. ''அத்தான்! தயவுசெய்து பரிகாசத்துக்குக் கொஞ்சம் ஓய்வு கொடுங்கள். எனக்கு உண்மை தெரிய வேண்டும். உங்களுடைய கனவுகள் நிறைவாகும் வரை, வருஷக்கணக்கில், இல்லை, யுகம் யுகமாக வேணுமானுலும் நான் காத்திருப்பேன். ஆனால் கல்யாணத்தை ஒத்திப் போடுவதற்கு அது மட்டுமே தான் காரணம் என்று நீங்கள் எனக்குச் சத்தியம் செய்து தர வேண்டும்! பெண் பாவம் பொல்லாதது என்பார்கள். என்னை ஏமாற்றிய பாவம் உங்களைச் சேர வேண்டாம் அத்தான்; உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்!''

இளம் பெண்கள் மீன் வடிவத்தில் மைதீட்டிக் கொள்வதைக் கண்டிருக்கிருன் தங்கப்பன். அவன் எதிரே இருந்த செல்லத்தின் நயனங்கள் இயல்பாகவே அப்படி அமைந்திருந்தன. அவை இப்போது கண்ணீர் வெள்ளத்தில் மிதந்தும்கூடப் பயனில்லை; கரையில் எடுத்து விடப்பட்ட கயல்கள் சற்று நேரம் துடித்துப் பிறகு அதற்கான சக்தியையும் இழந்து

எப்படி முடியும்?

ஐயையோ! என் அப்பா கிணற்றில் விழுந்து விட்டாரே! - வரதன் கத்திக் கொண்டு வாசலுக்கு ஓடி வந்தான்.

கொல்லைக் கிணற்றில் விழப் போகிறதாக கடிதம் எழுதி வைச்சிருக்காரே! ஐயோ! நான் என்ன செய்வேன்? - வரதன் கதறினுன்.

ஊரே கூடி விட்டது. கிணற்றினுள் ஒருவன் குதித்தான். தேடித் தேடிப் பார்த்தான். ஊஹூம்! பிறகு.... அனைவருமாகச் சேர்ந்து கிணற்றுத் தண்ணீர் முழுவதையும் இறைத்துப் பார்த்து விட்டார்கள். மூச்!

ஒரு சாக்காய் குஞ்சைக்கூடக் காணவில்லை உள்ளே!

அதே சமயம்------

வரதனின் தந்தை வாசல் வழியாக வந்து கொண்டிருந்தார் சாவகாசமாக.

விஷயத்தைக் கேட்டு விட்டு அவர் விழுந்து விழுந்து சிரித்தார்.

அட ராமா! அதைத்தான் ஒரு கதைக்காகக் குறிப்பு எழுதி வைத்திருந்தேன்! ஐயோ, பாவம்!

வந்த கூட்டம் அகவாரியமாகக் கலைந்தது!

எப்படி வரதா, நம்ம பிளான்? உன் அம்மா ரொம்ப நாளா கிணற்றிலே தூர் எடுக்கணும், தூர் எடுக்கணும் என்ருளே ஒரு பைசா செலவில்லாமல் தூர் எடுத்தாச்சு. — அப்பாவும் பிள்ளையும் மகிழ்ச்சி பொங்கச் சிரித்தும் பத்து நிமிடம்கூட ஆகியிராது. வாசலில் ஒரு சிவப்புத் தலை அதிகாரக் குரல்: நீங்கதானே தற்கொலை செய்துக்கிறதாகக் கடிதம் எழுதி வைச்சது?

— எப்படி முடியும்?

சிந்திக்க. பிறகு 41-ம் பக்கம் பார்க்க.



ஏக்கத்துடன் நோக்குவது போல் செல்லத்தின் கண்களும் காட்சியளித்தன. அவனுடைய கொடி உடல் பக்கத்திலேயே கொழு கொம்பென அவன் நின்றும் அவனைத் தழுவ இயலாமல் துவண்டு, துளிர் விடுவது போன்ற தனது தளதளப்புத் தன்மையை இழந்து வாடியது. பழுத்த மாம்பழக் கதுப்புக்களாக விளங்க வேண்டிய கன்னங்கள், பறித்துச் சுவைக்கும் உரிமை பெற்றவன் கிட்டத்திலேயே இருந்தும் அவனுக்குப் பயன்படாது புழுதியில் கேட்பாரற்று

விழுந்து விடும் வெம்பல் மாங்காய்கள் போல் ஒளி குன்றித் தோன்றின. பெண்களின் தோள்களை மூங்கிலுக்கு ஒப்பிடுவார்கள். செல்லத்தினுடையவை மதயானை பாய்ந்து அழித்த மூங்கில் காட்டில் ஒடிந்து விழுந்த இரு மெலிந்த மூங்கில்களைப் போல் தொய்ந்து தளர்ந்து கிடந்தன.

எதிலும் அழகை ரசிக்கும் தன்மை படைத்த தங்கப்பன் இந்தச் சோக உருவத்திலும் ஓர் அற்புத எழிலைக் கண்டு அதிசயித்து அசையாது நின்று விட்டான்.

அந்தப் பேதைப் பெண்ணோ அத்தான் தனக்குச் சத்தியம் செய்து தரத் தான் தயங்குகிறார் என்பதாக எண்ணி மேலும் உருகி உருக்குலைந்தாள். ''அத்தான்! என்னைக் கைவிட்டு விடாதீர்கள்!'' என்று புலம்பி அழ ஆரம்பித்தாள்.

அடைக்கலம் என்று வந்த ஆற்று நீரை அலைக் கரங்கள் தழுவி அபயம் அளிப்பது எத்துணை அளவுக்கு இயற்கையோ அப்படித் தங்கப்பனுடைய நீண்ட கரங்கள் இயல்பாக அவளைச் சுற்றி வளைத்தன.

''நான் உன்னை ரொம்பவும் சோதித்து விட்டேன் செல்லம்!'' என்றான் அவன், கருணை குடிகொண்ட குரலில். ''ஊட்டியில் உஷாவைச் சந்தித்த தினத்திலிருந்தே உன் மனத்தில் ஒரு குறுகுறுப்பு, இனம் புரியாத ஒரு பீதி — இல்லையா? அதை நான் தெரிந்து கொண்டிருக்கிறேன். இதோ பார்; எனக்கு அந்த மாதிரியான 'அல்ட்ரா மாடர்ன்' சமாசாரமெல்லாம் கட்டி வராது. தொலைவிலிருந்து பார்த்து ரசிக்கத்தான் லாயக்கு. அவளுக்குப் பவுடர் வாங்கித் தரவே என் சொத்தெல்லாம் பாதிக்கு மேல் கரைந்து விடும்! அப்படியே அவளை நான் கல்யாணம் செய்துகொள்ள நினைக்கிறேன் என்றே வைத்துக்கொள். அதற்கு அம்மாதான் உடனே சம்மதித்து விடுவாளா, அல்லது மந்திரி தினதயாளுதான் என்னை ஒரு பொருட்டாக மதித்துப் பெண் கொடுத்து விடுவாரா? அதற்கெல்லாம் முன்பாக உஷாவே என்னைப் பரிகாசம் செய்து அவமானப்படுத்தி அனுப்பி விடுவாள். ஏதோ சிறு பிள்ளையாக இருந்த போது பழகிய தோஷம் எங்கேயாவது பார்த்தால் இரண்டு வார்த்தைகள் பேசச்சொல்கிறது; அவ்வளவுதான். இப்போது திருப்திதானே உனக்கு? எங்கே கண்ணீரைத் துடைத்துக் கொள்!'' என்ற தங்கப்பன், அவன் சொற்படி செய்ய அவள் முற்படுமுன் தானே முந்திக் கொண்டான்.

அவன் ஸ்பரிசம் பட்டதும் நீரை உறிஞ்சிப் பம்மும் கடற்பஞ்சு போல் புத்துயிர் பெற்று மெத்தென்று விளங்கி மிளிர்ந்த கன்னங்களில் இல்லாத கண்ணீரைத் தொடர்ந்து துடைத்துக் கொண்டிருந்தான் தங்கப்பன். அவ்விதம் அவன் விரல்கள் அவள் முகத்தின் மீது விளையாடியபோது எழுந்த இன்ப 'கீதம்' அவள் மேனியெங்கும் விறுவிறுப்பும் வெப்பமும் மிகுந்த ஓர் ஊடுருவலுடன் பாய்ந்து பரவியது. அடுத்துத் தன் தேகத்தின் ஒவ்வோர் அணுவும் தனக்குக் கட்டுப்படாமல் தன்னிச்சையாகத் தனித்தனியே பிய்த்துக் கொண்டு போய் அந்த இசைக்கு ஏற்ப நர்த்தனமாடிக் களித்து மகிழ்வதுபோல் ஒரு பிரமை அவளுக்கு. இந்த ஆனந்த பரவச நிலையை இனியும் தாங்கும் சக்தி தனக்கு இல்லை; சுருண்டு விழுந்து விடுவோம் என்று கருதியவள் போல, அவன் கரங்களை இறுகப் பற்றி இப்பால் இழுத்துக் குனிந்து அவற்றில் தன் முகத்தை அழுத்திப் பொத்திக் கொண்டாள்.

''செல்லம்!'' என்று கொஞ்சுதலாக அழைத்தான் அவன். ''நமது திருமணம் நீ நினைப்பதைக் காட்டிலும் சீக்கிரமாகவே நடக்கும், செல்லம்!'' என்றான் ஆர்வத் துடிப்போடு.

''வேண்டாம், அத்தான்! அவசரப்பட்டு நீங்கள் எதையும் எனக்காகச் செய்ய வேண்டாம்! என் கழுத்தில் நீங்கள் தாலி கட்டும்போது முழு மனத்துடன், கவலையற்ற நெஞ்சத்துடன் நீங்கள் அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும். 'இன்னும் கொஞ்ச நாட்கள் தாமதித்திருக்கலாமோ' என்று பின்னால் லவலேசமும் வருத்தப்படும்படியான நிலைக்கு இடம் தரக் கூடாது!''

கீழே முற்றத்தில் படிக்கட்டின் அடிவாரத்தில் நின்றவாறு தாமரை செல்லத்தை அழைக்கும் குரல் கேட்டது.

மின்னலெனப் பாய்ந்து மொட்டை மாடியின் திறந்த வெளியை அடைந்து அங்கிருந்தவாறு, ''இதோ, வந்துவிட்டேன், மாமி!'' என்று குரல் கொடுத்தாள் செல்லம். பிறகு, ''மொட்டை மாடியில் காற்று 'ஜிலுஜிலு'ன்னு ரொம்ப சுகமா இருக்கு'' என்று அவள் தாமதத்துக்கு விளக்கம் கூறுவதுபோல் யாரும் கேளாமலே சொன்னதும் தங்கப்பனுக்குக் கேட்டது.

பட்டின் மென்மை மாறாமல் இன்னமும் தன் விரல்களில் ஒட்டிக் கொண்டிருப்பதுபோல் அவனுக்குத் தென்பட, அந்த அதிர்ஷ்ட விரல்களைத் தன் அதரங்களிலே ஒற்றி எடுத்தான் தங்கப்பன். (தொடரும்)

கந்தன் கருணை

திருமுருக கிருபானந்தவாரியார்

38. ஆதவன் அஞ்சினான்!

போருக்குத் துடித்துக் கொண்டிருந்த பானுகோபன் அரியணையை விட்டு அவசரமாக இறங்கினான்; விரைவாகத் தேரில் புறப்பட்டான்.

பானுகோபனின் தேர் சூரபன்மனின் அரண்மனையை அடைந்தது. "தந்தையே! என்னை அழைத்த காரணம் யாது?" என்று பானுகோபன் சூரனை வினவினான்.

"மகனே! இலக்கத் தொன்பது வீரர்களுடனும் பூத சேனைகளுடனும் கந்தன் திருச்செந்தூரிலிருந்து நம் நகருக்கு வந்து வடக்கு வாயிலில் பாடி வீடமைத்துக் கொண்டு தங்கியிருக்கிறான். நமது வீரமகேந்திரம் இந்த வீரர்களும் பாலனும் வரக் கூடிய நகரமா? நம்மை எதிர்த்து வந்திருக்கும் பகைவர்களோ மிகச் சிறியவர்கள்; நானோ அண்டங்களை யெல்லாம் ஆளும் அரசர்க்கரசன். ஆகவே, நீ உன் சேனைகளுடன் சென்று அவர்களை வென்று வா" என்று சூரபன்மன் உத்தரவிட்டான்.

"போருக்குப் போ" என்று சூரபன்மன் கூறிய சொல்லைக் கேட்டதும் பானுகோபனின் தோள்கள் பூரித்தன. "அப்பா! அந்தச் சிறுவனையும் அவனுடன் வந்திருக்கும் படைகளையும் வென்று வருவது எனக்குப் பெரிய செயல் அன்று. அந்தப் பாலனை எதிர்த்துப் போருக்குச் செல்ல நான் முன்பிருந்தே துடித்திருக்கிறேன். இப்போது என் சேனைகளுடன் சென்று அந்தப் பாலனை வென்று வருவேன்" என்று கூறி விடைபெற்றுக் கொண்டான்.

பானுகோபன் ஆடை ஆபரணங்களைச் சிறப்பாயணிந்து கொண்டான்; வச்சிர கவசம் அணிந்து அம்பறாத் தூணியும் பாணங்களும் எடுத்துக் கொண்டான்; வாட்படையை மருங்கில் செருகிக் கொண்டான்; வீரக் கழல் அணிந்து கொண்டான்; நெற்றியில் பட்டங் கட்டிக் கொண்டு தும்பை மாலையணிந்தான்; பாணங்கள் தாக்காமல் இருப்பதற்காக உடும்புத் தோலால் செய்யப்பட்ட உறைகளைத் தரித்துக் கொண்டு, பல்வகை ஆயுதங்கள் ஏந்திய சதுரங்க சேனைகள் சூழ முப்பதினாயிரம் குதிரைகள் பூட்டப்பட்ட ஒரு தேரில் ஏறிப் போருக்குப் புறப்பட்டான்.

சதுரங்க சேனைகளுடன் பானுகோபன் போருக்குப் புறப்பட்டதைக் கண்ட நாரத முனிவர் ஏமகூடப் பாசறையை அடைந்து முருகக் கடவுளின் திருவடிகளை வணங்கினார். "சுவாமி! தேவரீர் இங்கு எழுந்தருளியிருப்பதை அறிந்த சூரபன்மன் தங்களோடு போர் செய்ய அவனது குமாரனாகிய பானுகோபனை அனுப்பியிருக்கிறான். பானுகோபன் எண்ணற்ற சேனைகளுடன் போர்க் கோலம் பூண்டு வருகிறான். அவனைத் தேவரீரும் சிவபெருமானுமன்றி வேறு எவரும் எதிர்க்க முடியாது. அவன் திருமாலையும், பிரம்மாவையும், இந்திரனையும் வென்றவன். மாயங்கள் பல கற்றவன். அவனுக்கு பிரம்மா தமது அஸ்திரங்களைக் கொடுத்திருக்கிறார். வருணனின் பாசத்தையும், இயமனின் சூலத்தையும் கவர்ந்தவன் அவன். ஆகவே, தாங்களே அவனைக் கொல்ல வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்.


நாரத முனிவர் கூறியவற்றைக் கேட்ட எம்பெருமான் புன்முறுவல் செய்தார்.

"வீரவாகு!" என்று அழைத்தார்.

வீரவாகுதேவர் வந்து முருகப் பெருமானின் காலில் விழுந்தார்.

"நம்முடன் போர் செய்ய சூரபன்மன் தனது மகனாகிய பானுகோபனை அனுப்பியிருக்கிறான். நீ இலக்கம் வீரர்களுடனும், உனது எட்டுத் தம்பிகளுடனும், ஆயிரம் வெள்ளம் பூத சேனைகளுடனும் போய் மகேந்திரபுரியைத் தாக்கிப் பானுகோபனை வென்று வருவாயாக" என்று ஆணையிட்டார். வீரவாகுதேவர் முருகப் பெருமானை வணங்கி விடைபெற்றுச் சென்றார்.

மேருகிரி போன்ற ஒரு வில்லையும் அம்பறாத் தூணியும் ஏந்தி ஒரு தேரில் ஏறிக் கொண்டார் வீரவாகு. ஆயுதங்கள் நிறைந்த தேர்கள் பல



அவரைச் சூழ்ந்து கொண்டன. ஆயிரம் வெள்ளம் பூதர்களும் இலக்கத்தெட்டு துணைவர்களும் போர்க்கோலம் புனைந்து சூழ்ந்தனர். வீரவாகுதேவரின் தேர் புறப்பட்டு மகேந்திரபுரியின் மதிற் பக்கத்தே வந்தது. அசுரர்கள் பானுகோபனிடம் ஓடி, வீரவாகுதேவர் போருக்கு வந்துள்ள செய்தியைத் தெரிவித்தார்கள். அதைக் கேட்ட பானுகோபன், கைகொட்டி, ''என்னை எதிர்த்து வந்திருக்கும் வீரர்களை அழிப்பேன்'' என்று ஆரவாரித்துப் போருக்குப் புறப்பட்டான்.

அசுர சேனைகளுக்கும் பூத சேனைகளுக்குமிடையே போர் தொடங்கிற்று. அசுர சேனைகள் அளவற்ற ஆயுதங்களை எறிந்து போர் புரிந்தனர். பூத சேனைகள் மரங்களையும் மலைகளையும் பெயர்த்து வீசி அசுரர்களை மாய்த்தனர். இப்படியாக இரண்டு பக்கங்களிலும் உள்ள சேனைகள் துவந்த யுத்தம் செய்தன. இரு திறத்திலும் பலர் இறந்ததால் உதிரம் கடல்போலப் பெருகியது. பூத சேனைகள் மிகுந்த ஆத்திரங் கொண்டு அசுர சேனைகளுடன் கடுமையாகப் போர் செய்தன. அசுரர்கள் அத்தாக்குதலைத் தாங்கவொணாது சிதறி ஓடினார்கள். அவர்கள் சிதறி ஓடுவதைக் கண்ட அசுரப் படைத் தலைவனான அனலி தன் கையிலிருந்த வில்லை வளைத்து நாணை மீட்டினான். அந்த ஒலியைக் கேட்டுத் தேவர்களும் அஞ்சினர். அவன் தீக்கணைகளால் பூத சேனைகளின் தோள்களைத் துளைத்தான். அனலியின் கடும் போரைக் கண்ட பூதசேனைத் தலைவன் சிங்கன், தன்கையிலிருந்த தண்டினால் அனலியின் தேரில் பூட்டப்பட்டிருந்த குதிரைகளை அடித்துக் கொன்றான். அனலியின் தேரில் பாய்ந்து வளைத்து வில்லைப் பிடுங்கி எறிந்தான் சிங்கன். அனலி தன் கையிலிருந்த தண்டினால் சிங்கனின் தலையில் அடித்தான். சிங்கன் அவனைப் பிடித்துச் சுழற்றித் தரையில் அடித்தான். அவ்வளவில் அனலி இறந்தான்.

அசுர சேனைகளின் மற்றொரு தலைவனான சண்டன் சிங்கனுடன் போருக்கு வந்தான். இறந்த அனலியின் கையிலிருந்த தண்டைப் பறித்துச் சண்டனின் தேரில் பாய்ந்த சிங்கன், அந்தத் தண்டினால் சண்டனின் தோளைத் தாக்கினான். அந்த நிலையில் சண்டன் தன்னுடைய கைத் தண்டினால் சிங்கனின் மார்பில் அடித்தான். இருவரும் பெரு

சேவைக்கு ஒரு சகோதரி

ஆகஸ்ட் 15ந்தேதி இதழில் ஆரம்பமாகிறது

மூச்சு விட்டு மயங்கித் தேரினின்றும் கீழே விழுந்தார்கள்.

அசுர சேனைகளின் இன்னொரு தலைவனான மாயன் என்பவன் சண்டன் மயங்கி விழுந்ததைக் கண்டான். உடனே தேரில் ஏறி அந்த இடத்துக்கு விரைந்தான். அப்போது, பூதசேனைகளின் தலைவனான நீலன் அவனை எதிர்த்துச் சென்று மார்பை நோக்கித் தண்டத்தை எறிந்தான். உடனே நீலன் மீது ஒரு சூலத்தையெறிந்தான் மாயன். அந்தச் சூலம் தாக்கியதால் நீலனின் மார்பிலிருந்து உதிரம் பெருக்கெடுத்தோடியது. சிறிது நேரம் மூர்ச்சித்திருந்த நீலன் அறிவு தெளிந்ததும் மாயனின் மார்பில் ஓங்கி அடித்தான்; அவனது தோள்களைக் கட்டிப் பிடித்துக் கழுத்தில் கடித்தான்; அவனது உடலில் உள்ள குருதியைக் குடித்தான். மாயன் மாண்டான்.

இதற்குள் போர் செய்து மூர்ச்சித்துத் தேரினின்றும் கீழே விழுந்த சண்டனும் சிங்கனும் அறிவு தெளிந்து எழுந்தனர். பழையபடி போர் தொடங்கினர். சிங்கன் தண்டத்தினால் சண்டனை அடித்து அவனது தோளை ஒடித்தான். தன்னுடைய ஒடிந்த தோளையே தண்டாக ஏந்திப் போர் செய்தான் சண்டன். இருவருக்கும் கடுமையாகப் போர் நடந்தது. இறுதியில் சிங்கன் சண்டனைக் கொன்றான்.

சண்டன் இறந்ததைக் கண்டதும் அசுர சேனைத் தலைவர்களில் மற்றொருவனான அசமுகன் ஒரு தேரில் ஏறிச் சிங்கனை நெருங்கினான். அந்த இருவருக்குமிடையே மது என்னும் பூத சேனைத் தலைவன் பாய்ந்தான். அசமுகன் மதுவின் மீது பாணங்களை ஏவினான். அந்தப் பாணங்களைச் சிறிதும் பொருட்படுத்தாத மது அருகிலிருந்த ஆலமரம் ஒன்றைப் பெயர்த்து அதனால் பாணங்களைத் தடுத்துக்கொண்டே அசமுகனின் தேரில் புகுந்தான். அப்போது அசமுகன் கையிலிருந்த வில்லும் பாணங்களும் கீழே நழுவி விழுந்தன. அதனைக் கண்ட மது, ''நீ போருக்கு ஏற்ற வீரன் அல்ல'' என்று கூறித் தேரை விட்டு இறங்கிச் சென்று விட்டான். அசமுகனுக்குச் சொல்ல முடியாத வெட்கம் ஏற்பட்டது. ஒருவாறாக மனம் தேறிய அவன், மதுவைத் தேடிச் சென்று போருக்கு அழைத்தான். ''வீரம் இல்லாத உன்னுடன் போர் செய்வது எனக்கு இழுக்காகும்'' என்று மது கூறினான். அசமுகன் விடவில்லை. மதுவின் மேல் பல பிறைமுகக் கணைகளை விடுத்தான். அப்போதும் மது ஆயுதம் எடுக்காமல் அக் கணைகளையெல்லாம் கையால் விலக்கித் தடுத்தான். உடனே அசமுகன், சூலம், வேல் முதலியவற்றை மதுவின் மீது எறிந்தான். அசமுகனின் தேரை எடுத்துக் கடலில் வீசியெறிந்தான் மது. அசமுகன் தேரிலிருந்து பாய்ந்து வந்து மதுவுடன் மற்போருக்கு வந்தான். மது ஓங்கி ஓர் உதை கொடுத்தான். அசமுகன் ஆகாயத்துக்குப் போய் அங்கிருந்து கீழே வந்து விழுந்தான். உடனே எழுந்து மதுவின் மார்பில் இடி முழக்கம் போன்று அடித்தான். பின்னர் மாயமாக விண்ணில் மறைந்து விஷ்ணுவின் சக்ராயுதத்தை மதுவின் மீது விடுத்தான். சக்ராயுதம் தரும ஸ்வரூபம். அது ஒரு காலும் அதருமப் போர் புரியாது. நிராயுதனாயிருந்த மதுவைச் சக்கரப் படை ஒன்றும் செய்யவில்லை. அது திரும்பிச் சென்று அசமுகனின் தலையையே அறுத்தது. அசமுகன் இறந்தான்.

அசமுகன் இறந்தபின் எஞ்சியிருந்த அசுரத் தலைவர்கள் நால்வகைச் சைன்யங்களுடனும் சென்று பூதப் படைகளுடன் கடுமையாகப் போர் செய்தார்கள். இதனால் பூத சேனைகள் புறங்கொடுத்து ஓடின. இலக்கம் வீரர்களில் ஒருவனான தண்டகன் அசுர சேனைகளின் மீது மழைபோல் பாணங்களை விடுத்தான். அந்தப் பாணங்களின்

தாக்குதலில் அசுரர்களின் நால்வகைச் சேனைகளும் சிக்கி அழிந்தன. உதிரம் பெருகி ஆறு போல் ஓடியது. உயிர் பிழைத்த அசுரர்கள் 'பிழைத்தால் போதும்' என்று திசை தெரிந்த பக்கம் சிதறியோடினார்கள்.

அசுர சேனைகள் சிதறி ஓடுவதைக் கண்டான் பானுகோபன். 'போரில் நானே முன்னணிக்குச் செல்லாமல் சைனியங்களை மட்டும் முன்னால் அனுப்பியதால்தான் இந்த நிலை ஏற்பட்டது. சரி! நடந்ததை நினைத்துப் பயனில்லை. இனி ஆக வேண்டியதைக் கவனிக்க வேண்டும்' என்று எண்ணிய மகாவீரனாகிய பானுகோபன் தானே போருக்குச் செல்வதென்று முடிவு செய்து பூத சேனைகளுக்கிடையே புகுந்தான். தனது வில்லை வளைத்துக் கணக்கற்ற பாணங்களைப் பூதர்கள் மீது ஏவினான். பூத வீரர்கள் மலைகளைப் பெயர்த்து பானுகோபன் மீது எறிந்தனர். அந்த மலைகளை யெல்லாம் பாணங்களினால் தகர்த்தான் பானுகோபன். ஆயிரங் கோடிப் பாணங்களைப் பூத சேனைகளின் மீது விடுத்தான். அதனால் பூத சேனையைச் சேர்ந்த வீரர்கள் பலர் இறந்தனர். உயிர் தப்பியவர்கள் வீரவாகுதேவரிடம் ஓடினார்கள்.

பூத வீரர்கள் சிதறி ஓடுவதைக் கண்ட பூதப் படைத் தலைவன் உக்கிரன் ஆரவாரத்துடன் ஒரு தண்டாயுதத்தை எடுத்துக்கொண்டு போய் பானுகோபனை எதிர்த்துப் போரிட்டான். பானுகோபன் பெரிய வில்லாளி.

மைக்கின்ற மேனி நெடும்பூதனை
வஞ்சன் வாளி
தைக்கின்றில வானுதி மாய்ந்து
தளர்ந்து வீழ்ந்த
மொய்க்கின்ற இன்பும் அறனும்
விளையாது வாளா
பொய்க்கின்ற வன்கைப் பொருள்
வல்லையில் போவதேபோல்

ஆயிரமாயிரம் பாணங்களை விடுத்தான் பானுகோபன். எடுக்கும் போது ஆயிரம், தொடுக்கும் போது இலட்சம், விடுக்கும் போது கோடியென்று பாணங்களைப் போட்டான். உக்கிரனிடம் வில்லை கிடையாது. அவன் தனது தோளை உலுக்கி விட்டான். 'மைக்கின்ற மேனி' என்று பாட்டு கூறுவதற்கு 'கரிய மேனி' என்று பொருள். பானுகோபன் விடுத்த பாணங்களில் ஒன்றுவது கரிய மேனியை உடைய உக்கிரனின் உடலைத் துளைக்கவில்லை. பானுகோபன் விடுத்த எல்லாப் பாணங்களும் அவனது உடலில் பட்டுக் கூர் மழுங்கி உதிர்ந்து விழுந்தன. பொய்யே பேசுகின்றவன் கையில் ஒரு காலத்தில் பொருள் சேர்கின்ற மாதிரி இருக்கும்; ஆனால் நிற்காது. எந்த வழியாகப் போயிற்று என்றே தெரியாமல் அது மறைந்து விடும். கடையர்களிடம் உள்ள பொருள் அறத்திற்கு உதவாது. அந்தப் பொருள் செல்லும் வழி கூடத் தெரியாமல் போகின்ற மாதிரி பானுகோபன் விடுத்த பாணங்கள் என்னவாயின என்றே அறியாதபடி அழிந்து விட்டனவாம்.

பானுகோபனுக்கும் உக்கிரனுக்கும் கடுமையாகப் போர் நடந்தது. பானுகோபனின் தேரில் பூட்டப்பட்டிருந்த குதிரைகளை யெல்லாம் உக்கிரன் அடித்துக் கொன்றான். பானுகோபன் வேறொரு தேரில் ஏறிக் கொண்டு பாணங்களை விடுத்து உக்கிரன் கையிலிருந்த தண்டத்தை ஒடித்தான். உக்கிரன், பானுகோபனின் தேரை அலக்காகத் தூக்கி ஆகாயத்தில் எறிந்தான். அது சூரிய மண்டலம் வரை சென்றது. பானுகோபன் தன்னை நோக்கி வருவதைக் கண்ட சூரியன் அஞ்சி யோடினான். முன்பு பானு கோபனால் துன்பமடைந்தவ னல்லவா சூரியன்? பானுவாகிய சூரியனிடம் கோபித்ததாலன்றோ அவனுக்குப் பானுகோபன் என்ற பெயரே உண்டாயிற்று? (தொடரும்

ஆவணி பிறந்தால் கல்யாண சீசனும் ஜாம்ஜா மென்று ஆரம்பமாகி விடும். சர்வாலங்கார பூஷிதையாக என்றேனுமே அந்த அலங்காரத்தை வாழ்நாளில் ஒரு முறைதான் திருமண தினத்தன்றுதான் சூடுகிறது. இந்த நாகரிக யுகத்தில். அன்று உற்றாரும் சுற்றமும் கண்குளிர மணப்பெண்ணைப் பார்த்து மகிழ்ந்து விட வேண்டியதுதான். மறுபடியும் அந்தச் சந்தர்ப்பம் கிடைப்பது அரிதல்லவா?

வலதுபுறம் குமாரி ராதா காஞ்சிபுரம் பட்டுப் புடவையை மடிக்கட்டாக அணிந்து பொலிகிறார். ஒன்பது , கெஜம் - மஞ்சள் சிவப்பு கலர்களில் சிறு கட்டங்கள் போடப் பெற்றது. கரை: பச்சை - இரண்டு பட்டை கெட்டிச் சரிகை டிசைன். நல்லியின் சொந்தத் தறிப் புடவையான இதற்குப் பாலும் பழமும் என்று பெயராம்!

இந்தப் பக்கத்தில் குமாரி மீனு உடலில் வரிவரியாகச் சரிகைக் கோடுகள் இழையோடும் செம்புக் கலர் கூரைப் புடவை புத்தி



மகிழ்கிறார். ஆறு கெஜம். பட்டையான, டிசைன்களுடன் கூடிய கெட்டிச் சரிகைக் கரை.

நகைகளின் பட்டியலை நாங்கள் கூறப் போவதில்லை. மொத்தம் பதினைந்து ரகங்கள் உள்ளன. அவை என்னென்ன என்று பெயர் சொல்லி எண்ணிப் பாருங்களேன்! புன்னகையை மறந்து விடாதீர்கள்!





இன்றைய நாகரிகம்

புடவைகள் :


நல்லி சின்னசாமி செட்டி, தி. நகர் சென்னை- 17
சிவராம் டெக்ஸ்டைல்ஸ், கமிசேரி பஜார், வேலூர்

படங்கள் :

ஸ்டுடியோ ஷோபிராம்

நகைகள் :

களஞ்சியம் பிரதர்ஸ், சென்னை-1



நீங்கள் பொலிவுடனிருக்க சார்மிஸ் உபயோகியுங்கள்!



புதுமை பெறுக...
இதம் பெறுக...
நளினமாய் இருங்கள்
நாள் முழுதும்!

இளமையையும், புத்துணர்ச்சியையும் அளிக்கும் சார்மிஸ் டால்கம் பவுடர் நீங்கள் நாள் முழுதும் நளினமாயிருக்க உதவுகிறது. உன்னத மனோரம்மிய மணம்கொண்ட சார்மிஸ் உங்களுக்கு சுகத்தையும் புத்துணர்ச்சியையும் அளித்து, உங்கள் அழகை நன்கு சோபிக்கச் செய்கிறது!

சார்மிஸ்

உன்னத, மனோரம்மிய மணத்துடன் கூடிய டால்கம் பவுடர்

NTP.G.B

(சென்ற வாரத் தொடர்ச்சி)

லோகசஞ்சாரம்

செஞ்சீன

மக்களைக் கடுமையாக உழைக்க வைக்கும் தலைவர்கள் அதேசமயத்தில் 'உலகின் வேறு எந்த நாட்டையும் விடச் செஞ்சீனா எந்த விதத்திலும் தாழ்ந்ததல்ல என்ற அளவுக்கு நம் நாட்டை உயர்த்த வேண்டும்' என்கிற ஓர் ஆவேச வெறியை மக்களிடையே ஊட்டி வளர்க்கிறார்கள். இதற்காக மக்கள் எந்தவிதமான தியாகத்தையும் புரியத் தயாராகிறார்கள். ஆளுக்கொரு கடப்பாறையையோ அல்லது மண் வெட்டியையோ தூக்கிக் கொண்டு மாபெரும் நீர்த் தேக்கத்தையோ பல மைல் நீளமுள்ள கால்வாயையோ அல்லது இன்ன பலவற்றையோ உருவாக்க உறுதியுடன் கிளம்பி விடுகிறார்கள். இறைவனுக்குப் பிரீதியாகக் கடுமையான விரதங்களை மேற்கொள்ளுவது போல் நாட்டு நலனுக்காக எளிமையான வாழ்வு, சத்தியம், ஒழுக்கம், நேர்மை, தன்னலமற்ற தியாகம், ஒற்றுமை போன்ற கடுமையான கட்டுப்பாடுகளை விதித்துக் கொண்டு அஞ்சாமல், தயங்காமல் உழைக்கிறார்கள்.

இதற்குப் பதிலாக அரசாங்கம் மக்களின் குறைந்தபட்சத் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. அத்துடன் தவறு செய்யக் கூடிய தலைமைதானெனினும் அப்பழுக்கற்ற,






★ சீன நாட்டிய நங்கை

★ திறந்தவெளியில்-முற்றத்தில் அமர்ந்து உணவருந்தும் பாட்டியும் பேரனும்

★ இரவில் பீகிங் நகரில் ஒரு காட்சி

★ படங்கள் : நேஷனல் ஜியோகிரபிக்



நேர்மையான, லஞ்ச ஊழல் ஏதும் எட்டிப் பாராத சர்க்கார் நிர்வாகத்தை அளிக்கும் தலைமை அது என்ற திருப்தியும் மக்களுக்கு உண்டு. சீனாவின் மிகப் பெரிய பலம் அதன் மக்கள் தொகைதான். அதைச் செஞ்சீனத் தலைவர்கள் மனத் தத்துவ ரீதியிலே சாமர்த்தியமாக அணுவி முழுமையாகப் பயன்படுத்திக்கொள்கிறார்கள்.

மா-லே-துங் மாதம் ஆயிரம் ரூபாய்தான் சம்பளம் பெறுகிறார். எளிமையான வீட்டில் வசிக்கிறார். பொதுவாகப் படித்தவருக்கும் தொழிலாளருக்கும் இடையில் மிகக் குறைவான சம்பள வித்தியாசமே உள்ளது. இது காரணமாய் இரு சாராரும் ஒற்றுமையாகவும் ஒருவரையொருவர் மதித்தும் வாழ்கின்றனர்.

ருஷ்யாவிடமிருந்து சீனா பெற்ற பொருளாதார உதவிக்கும் நாம் அமெரிக்கா போன்ற மேல் நாடுகளிலிருந்து பெறும் உதவிக்கும் முக்கியமான வித்தியாசம் உண்டு. நாம் பெறும் பொருளாதார உதவியில் ஒரு பகுதி திருப்பித் தரவேண்டிய அவசியமில்லாத கிராண்ட் (Grant) எனப்படும் வகையைச் சேர்ந்தது. அல்லது உள்நாட்டிலேயே செலவிடப்படும் ரூபாய்களாகவே திருப்பித் தரக் கூடியது. ஆனால் ருஷ்யாவிடமிருந்து மற்றொரு கம்யூனிஸ்ட் நாடாகிய சீனா பெற்ற கடனுதவியைப் பைசாவுக்குப் பைசா திருப்பித் தருவதுடன் அதற்குக் கணிசமான வட்டித் தொகையும் சீனா ஏற்றுமதிப் பொருளாகவும் தங்கமாகவும் மாற்றிக்கொள்ளக் கூடிய டாலர் பவுண்டு போன்ற அந்நியச் செலாவணியாகவும் கொடுத்து வருகிறது. அதுமட்டுமல்ல, ருஷ்யா தந்துதவும் இயந்திரங்களுக்காகவும் நிபுணர்களுடைய உழைப்பின் மதிப்புக்காகவும்கூட வட்டி தருகிறது செஞ்சீனா!

இடையில் ருஷ்யா தனது பொருளாதார உதவியையும் நிபுணர்களின் உதவியையும் வாபஸ் பெற்றுக் கொண்டதல்லவா? அதனை ஒரு பெரிய வரப்பிரசாதமாகவே கருதுகின்றனர் சீனத் தலைவர்கள். அது தன் கையே தனக்குதவி என்ற முறையில் சீன நிபுணர்கள் தாங்களாகவே சிந்தித்துச் செயல்பட்டு முன்னேற நல்லதொரு வாய்ப்பாக அமைந்ததெனக் கருதுகின்றனர்.

சீன மக்கள் நல்லவர்கள். சிநேகப் பான்மையிருந்தவர்கள், விருந்தினரை வரவேற்று உபசரிப்பதில் மகிழ்பவர்கள், அறிவிற் சிறந்தவர்கள், உழைப்பில் உலகின் முன்னணியில் நிற்கக் கூடியவர்கள். அப்படிப்பட்டவர்கள் இன்று பிரசார இயந்திரத்துக்கு அடிமையாகி விருக்கிறார்கள்.

'டா டா டான் டான்' என்ற 'போராடு போராடு பேசு பேசு' கொள்கையைத்தான் அந்த நாட்டுப் பெருந் தலைவர்கள் இன்னும் கடைப்பிடிக்கிறார்கள். மக்களைத் தங்கள் பொதுவுடைமைப் பாதையில் திருப்பப் போராடுகிறார்கள். அதில் ஏற்படும் ஏமாற்றங்களை மறைக்க எதிர்காலம் பற்றி இனிக்க இனிக்க அதே நேரத்தில் பிரசாரம் செய்து பேசித் தள்ளுகிறார்கள்.

ரயில், பஸ், டிராம், நகரம், கிராமம், சாலை எங்கு பார்த்தாலுமே வானொலியின் ஒலிபரப்பை ஒலிபெருக்கிகள் மூலம் நாள் முழுதும் மக்கள் செவிகளில் திணிக்கிறார்கள்.

அப்படி எதைத்தான் இரவும் பகலுமாக இந்த வானொலி பொழிகிறது? டாக்டர் சந்திர சேகர் விளக்குகிறார்: ''அரசாங்கம் அங்கீகரித்து மக்களுக்குத் தெரிவிக்க விரும்பும் அனைத்தையும்தான்! அரசாங்கச் 'செய்தி'யை மக்களுக்குத் தெரிவிப்பதற்கு இது தான் முக்கியமான சாதனம். நாட்டு முன்னேற்றம், கைத்தொழில் பெருக்கம் உள்நாட்டுத் தாதுப் பொருளை உருக்குவது எப்படி, அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளையும் யொங் கும்பலையும் தோல்வியுறச் செய்வது எப்படி? ஒரு நல்ல பொதுவுடைமைவாதியாயிருப்பது எப்படி? சர்க்கரைக் கிழங்கு சமைப்பது எப்படி? எங்கே துப்பக் கூடாது? — இவை போன்ற ஆயிரக்கணக்கான செய்திகளும், இடை இடையே காது செவிடுபடும்படியான ஜாலரா மணியோசையோடு கூடிய புராதன சீன இசை நாடகங்களும், போர் ஆர்வ மெழுப்பும் பாடல்களும் ஒலிபரப்பாகின்றன. இழுவண்டியில் செல்கையில் நான் நோயாளி போல் நடித்து ஒலிபெருக்கி இணைப்பை அகற்றச் செய்துள்ளேன் — சற்று நேரம் அமைதியை அனுபவிப்பதற்காக; மனத்துக்கு ஓய்வளிப்பதற்கோ, அல்லது தனது புதிய வாழ்க்கையைப் பற்றிச் சிந்திப்பதற்கோ மக்களுக்கு ஒரு நிமிட நேர அமைதிகூடக் கிடைப்பதில்லை.

''இந்த ஒலிபெருக்கிக்கான காரணம் உண்மையில் மிகவும் சாதாரணமானது. நெடுந்தூரம் சிதறிக் கிடக்கும் எழுபது கோடி மக்களைக் கொண்ட ஒரு நாட்டில் — கல்வியறிவு பரவாத, அதன் காரணமாக அச்சிட்ட வாசகங்கள் பலன் தர முடியாத ஒரு நாட்டில் வானொலி மூலம், விருப்பப்படி திருப்பவோ அல்லது நிறுத்திவிடவோ முடியாத ஒலிபெருக்கி மூலம்தான் மக்களை அணுக முடியும். ஒரு தடவை ரயிலில் பிரயாணம் செய்துகொண்டிருந்தபோது சீனப் பொதுவுடைமை வாலிபர் சங்கத்தின் தலைவர் பீகிங்கிலிருந்து நிறுத்தாமல் மூன்று மணி நேரம் பேசியதை நான் கேட்டேன். அவருடைய பேச்சின் பொருள் 'உண்மையான பொதுவுடைமைவாதியாக இருப்பது எப்படி?' என்பதுதான்.''

'டா டா டான் டான்' தத்துவம் இப்போது புரிகிறதல்லவா?

சீன பாஷையில் உபயோகப்படுத்தப்படுவது எழுத்து என்பதைவிடச் சித்திரம் என்றே சொல்லலாம். சீன அகராதியில் அப்படி நாற்பதாயிரம் தனிச் சித்திரங்கள் இருக்கின்றன. அவைகளின் ஒலியும் பொருளும் நிரந்தரமானதல்ல. சந்தர்ப்பத்துக்குத் தக்கவாறு மற்ற எழுத்துக்களுடன் சேர்ந்து வரும்போதெல்லாம் அவைகளின் குணம் மாறும். ஒலி பேதம் எப்படி அர்த்த பேதம் செய்யும் என்பதற்கு ஓர் உதாரணம் சொல்லலாம். 'கொடியை உயர்த்து' என்று சொல்வதற்கான வார்த்தைகளைச் சற்று ஏற்றியோ இறக்கியோ உச்சரித்தால் 'உன் மனைவியைத் தூக்கில் போடு' என்ற பொருளாகிவிடும்!

அந்த நாற்பதாயிரம் எழுத்துச் சித்திரங்களில் சாதாரண நடைமுறை உபயோகத்துக்கும் அன்றாட வாழ்க்கைப் போக்குக்கும் நாலாயிரம் எழுத்துக்களின் உபயோகம் தெரிந்தால் போதும். பாஷைப் பண்டிதர்களோ ஆறாயிரத்தோடு தங்கள் ஆசையை அடக்கிக் கொள்கிறார்கள்.

யேனன் நகரம் கம்யூனிஸ்ட் சீனாவில் ஒரு புண்ணிய க்ஷேத்திரம் போல! இதை ஒட்டி

யுள்ள மலைக் குகைகளில்தான் மாசே துங்கும் சூ என் லாய் போன்ற அவருடைய பிரதான சிஷ்ய கோடிகளும் பல காலம் பதுங்கி யிருந்தார்கள்.

1934ல் ஒன்பது லட்சம் பேர் கொண்ட சினுவின் தேசியப் படை, கம்யூனிஸ்ட் புரட்சிக் காரர்களை ஒடுக்கித் தெற்குக் கோடியில் உள்ள கியாங்ஸி பகுதியில் ஒதுக்கி விட்டது. அங்கிருந்து கம்யூனிஸ்டுகள் தலைமறைவாகக் கிளம்பி ஆறாயிரம் மைல்களுக்கப்பால் வடக்கே இருந்த யேனானை நோக்கிப் புறப்பட்டனர். இருபத்தி நான்கு பெரிய நதிகள், பதினெட்டு மலை வரிசைகள் இவைகளைக் கடந்து 1935ம் ஆண்டு அக்டோபரில் யேனானை அடைந்தார்கள். கியாங்ஸியை விட்டுப் புறப்பட்ட போது தொண்ணூறு ஆயிரமாக இருந்த கோஷ்டி யேனானை வந்தடைந்த போது இருபதினாயிரத்துக்கும் குறைந்து போய் விட்டது. எழுபதினாயிரம் பேர் இடைவழியே உயிரிழந்து விட்டார்கள். இன்று செஞ்சீன அரசாங்கத்தில் பெருந் தலைவர்களாயிருப்பவர்களெல்லாம் அன்றைய யேனான் யாத்திரையில் தப்பிப் பிழைத்தவர்கள்தான்.

அன்று யேனான் மலைக் குகை ஒன்றில் மா சே துங் உபயோகித்த மேஜையையும் பென்சிலையும் இதர சாதனங்களையும் இன்று கூட அதே குகையில் காட்சிப் பொருளாக வைத்துக் காப்பாற்றி வருகிறார்கள்.

சீனர்களுக்கு 'நாய்' என்ற சொல் கோபத்தைத் தோற்றுவிக்கக் கூடியதாக இருக்கிறது. அது முதலாளித்துவக் கோஷ்டியைச் சேர்ந்த வார்த்தையாம். சீனப் புரட்சிக்கு முன் ஷாங்காய் நகரம் வெள்ளையர்கள் நிர்வாகத்தில் இருந்தபோது அந்த நகரத்திலிருந்த பூங்கா வாயிலில் 'சீனர்களும் நாய்களும் உள்ளே அனுமதிக்கப்படுவதில்லை' என்ற அறிவிப்பு இருந்ததாக ஒரு வதந்தி உலாவிற்று. அப்படி அறிவிப்பே இருந்ததில்லை என்று ஒரு சாராரும், சியாங் கே ஷேக் தாம்தான் அந்த அறிவிப்பை அகற்ற நடவடிக்கை எடுத்ததாகப் பெருமை அடித்துக் கொள்ள இப்படி ஒரு கதை கட்டி விட்டார் என்று மற்றொரு சாராரும் கூறுகிறார்கள். செய்தியில் உண்மை இருக்கிறதோ என்னவோ, சீனர்களுக்கு 'நாய்' என்ற வார்த்தையே பிடிக்காமல் போய் விட்டது.

'உடலுறுதி போராட்டத்துக்கு மிக்க அவசியம்' என்று மாசே துங் கூறியிருக்கிறார். அதன் பிரகாரம் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் அனைவரும் ஷிப்டுகளுக்கு இடையே ஆயிரக் கணக்கில் திறந்த வெளியில் நின்று தேகாப்பியாசம் செய்கிறார்கள். மற்றும் பல நகரவாசிகள் காலை ஐந்து மணிக்கே மைதானத்தில் கூடி உடற்பயிற்சி செய்கிறார்கள். பெரிய ஹோட்டல்களில் இடையறாது உழைக்கும் பரிமாறுகிறவர்கள், வாடிக்கைக்காரர்கள் வராத நேரத்தில் இருந்த இடத்தில் இருந்தே கையைக் காலை வீசிப் பயிற்சி பெறுகிறார்களாம்!

மேலை நாடுகளில் காண்பது போல் காதலர்கள் ஜோடியாக உல்லாசத்துடன் போவதைச் செஞ்சீனாவில் காணமுடியாது. அவர்களுக்கு அப்படியெல்லாம் பொழுதுபோக்க அவகாசமெல்லாம் கிடையாது. உழைப்புக்கே அவர்களுக்கு நேரம் போதவில்லையே! அப்படியே சற்று அவகாசம் கிடைத்தாலும் பார்க்கு பெஞ்சுகளில் நிறைய இடைவெளி விட்டு உட்கார்ந்துதான் பேசுகிறார்கள்.

மாணவர்களெல்லாம் கட்டாயமாக இத்தனை மணி நேரம் உழைத்தாக வேண்டும் என்று நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். படிப்புக் காலம் முடிந்ததும் கல்வி அறிவு அளித்த அரசினருக்கு நன்றி செலுத்தும் வகையில் அவர்கள் அரசினர் குறிப்பிடும் இடத்துக்குப் பிடிக்குமோ, பிடிக்காதோ போய்த்தான் தீரவேண்டும். இவ்வாறாக ஸின்கியாங்குக்கும் உள் மங்கோலியாவுக்கும் கம்யூனிஸ சித்தாந்தத்திலேயே ஊறித் திளைத்த பல்லாயிரக் கணக்கான ஆண் பெண்கள் பள்ளிப் படிப்பு முடிந்ததும் அனுப்பி வைக்கப்படுகிறார்கள். அங்கு போய் இன விருத்தி செய்து மங்கோலிய மக்களிடையே சீன மக்களின் ஜனத்தொகை விகிதத்தை அதிகரிக்கச் செய்ய வேண்டும் என்பதே இதன் நோக்கம்.

ஜெயில்களில் நாற்பது சதவிகிதத்துக்கு, கம்யூனிஸத்தை எதிர்க்கும் அரசியல் கைதிகள் தான். ஜெயில்களில் காவல்காரர்கள் ரொம்பக் குறைவு! அதனால் கைதிகள் தப்ப முயற்சி செய்ய முடியுமா என்ன? ஜெயில் கள்

ஒருவர் குற்றவாளி என்று சந்தேகத்துக்கிடமின்றி நிரூபிக்கப்பட்டாலொழிய அவர் நிரபராதி எனக் கொள்வது நீதி முறை சித்தாந்தங்களில் முக்கியமான ஒன்று. ஆனால் சீன ஆட்சியில் சமுதாயக் கட்டுப்பாடு, சட்டரீதியான அடிப்படையில் இல்லாது போலீஸ் முறைக்கே முக்கியத்துவம் தந்து அமைக்கப்பட்டுள்ளது. நியாயஸ்தலங்கள் ஒரு சம்பிரதாயத்துக்காக நடக்கின்றன. 1956வரை 600 மிலியன் சீன மக்களுக்கு 2100 வழக்கறிஞர்களே இருந்தார்கள். இவர்களும் அரசினர் அளிக்கும் சம்பளத்தை நம்பி உள்ளவர்களே. 1972 ஜில்லாக்களும் 171 பெரிய நகரங்களும் கொண்டதான மாபெரும் தேசத்தில் சட்ட ஆலோசனைகள் வழங்கும் காரியாலயங்கள் 670தான் உள்ளன. நியாயஸ்தலத்தில் எவ்விதம் வழக்குகள் நடத்தப்பட வேண்டும் என்பதற்கான வழி முறைகள் ஏதும் செஞ்சீனாவில் வகுக்கப்படவில்லை. ஆகக்கூடி, தங்களது அரசியல் சித்தாந்தத்துக்கு ஒத்துவராத யாராயிருந்தாலும் அவர்களைச் சுட்டுத் தள்ளுவதோ அல்லது அவர்களது 'மனம் மாறும்' (மாற்றப்படும்)வரையில் கடுமையாக உழைக்கச் செய்வதோ சிறையிலடைப்பதோ ஆளும் கட்சித் தலைவர்களுக்கு எளிதாகிறது. 1955ல் மட்டும் 81,000 மக்கள் 'எதிர்ப் புரட்சியாளர்கள்' (Counter Revolutionaries) என்ற விதத்தில் தண்டிக்கப்பட்டார்கள். 1956-57ல் 190,000 பேர் அரசினிடம் சரணாகதி அடைந்தார்கள்!



(Problems of Communism 1965 March-April)

என்ன சம்பந்தம் ?

1.	திரு சத்யநாராயண்சின்ஹா	...	38686
2.	,, டி.டி. கிருஷ்ணமாச்சாரி	...	38500
3.	,, டி. சஞ்சீவய்யா	...	38389
4.	,, பி. என். சவான்	...	38182
5.	,, ஜி. எல். நந்தா	...	37458
6.	,, ஏ. கே. சென்	...	36913
7.	,, சி. சுப்பிரமணியம்	...	36208
8.	,, இந்திரா காந்தி	...	35129
9.	,, ஹுமாயூன் கபீர்	...	33922
10.	,, சுவரன் சிங்	...	33650
11.	,, எம். சி. சக்ளா	...	32982
12.	,, மஹாவீர் தியாகி	...	30317
13.	,, தினேஷ் சிங்	...	22422
14.	,, என். சஞ்சீவரெட்டி	...	20896
15.	,, ஆர். கே. மாளவியா /	...	11576
16.	ஸ்ரீமதி கவிதா நம்பார்	...	11377
17.	திரு எஸ். கே. பட்டீல்	...	7410

இவர்களுக்கும் இந்த எண்களுக்கும் என்ன சம்பந்தம்? ஒருவேளை இவர்கள் தேர்தலில் பெற்ற வாக்குகளாக இருக்குமோ?

(52-ம் பக்கம் பார்க்க)

களுக்கு மேலே கம்பி வேலி போட்டு மின் சாரத்தையல்லவா பாய்ச்சுகிறார்கள்!

இப்போதைய சர்க்கார் மக்களின் சுத்தத்தில் அதிக கவனம் எடுத்துக் கொள்கிறது. சீனாவில் ஈக்கள், எலிகள், நாய்கள், குருவிகள் எதுவுமில்லை. குருவிகள் ஒழிப்பு சுகாதாரத்தின் காரணத்தினால் அல்ல! தானியக் கதிர்களைத் தின்று விளைச்சலைப் பாதிக்கிறது என்ற ஒரே காரணத்துக்காகத்தான்! ஆனால் குருவிகளைக் கட்டுத் தள்ளியதும் ஏராளமாகப் பெருகி வளர்ந்த புழு பூச்சிகளைத் தின்று ஒழிக்கப் பறவைகள் இல்லாத காரணத்தால் அவையே பயிர்களை அழித்துக் கடும் பஞ்சம் உண்டாக்கினவாம்!. கிராமமோ நகரமோ நாளைக்கு இரண்டு தடவைகள் தெருக்களைப் பெருக்க வேண்டும்!


காண்டன் நகர ரயில்வே ஸ்டேஷன் பழமையானதுதான். ஆனால் அங்கு துப்புரவு பளபளக்கிறது. பணியாட்கள் ரயில் நிலையத்தையும் ரயில் பெட்டிகளையும் சதா சுத்தம் செய்துகொண்டிருக்கிறார்கள்.

காண்டன் நகரத்தில் 'மக்களின் அன்பு' (Love of the masses) என்ற ஹோட்டல் பிரம்மாண்டமானது. இரண்டாயிரம் படுக்கைகளைக் கொண்டது. எந்த அறைக்கும் பூட்டிக் கொண்டு போகச் சாவி கிடையாது. காரணம் அங்கு திருட்டுப் பயமே கிடையாது என்று சொல்கிறார்கள். விருந்தினரை உபசரிக்கும் போது செஞ்சீனர்கள் நிறைய மது பரிமாறுகிறார்கள். ஆனால் அவர்கள் கையில் எடுக்கும் முதல் குவளை அப்படியே அளவு குறையாமல் கடைசிவரை இருக்கிறது. காரணம் அவர்கள் மது அருந்துவதில்லை!

சீன மக்கள் பிறந்தது முதல் சாகும்வரை அவர்களது ஒவ்வொரு நடவடிக்கையும் சிந்தனையும் முன்கூட்டியே அரசினரால் வகுக்கப்பட்ட குறிப்பிட்ட திசையிலேயே செல்லுமாறு கவனித்துக் கொள்ளப்படுகிறது. ரஷ்யாவுக்கு இரும்புத் திரை என்று பெயர் வந்துவிட்டது போல் இன்றைய செஞ்சீனாவுக்கு மூங்கில் திரை என்று பெயர் வந்துவிட்டது. கடந்த பத்து வருஷங்களாகவே கம்யூனிஸ்டுகளல்லாத நாட்டுப் பிரஜைகள், எழுபது கோடி மக்கள் கொண்ட அந் நாட்டுக்குள் நுழையச் சுலபத்தில் அனுமதி கிடைப்பதில்லை. அதே போல் சீனர்களும் தாங்களாகவே ஏற்படுத்திக் கொண்ட திரைக் கப்பால் எட்டிப் பார்க்கவும் அனுமதிக்கப்படுவதில்லை. ஒவ்வொரு கல்லூரியிலும் பள்ளிக்கூடத்திலும் இளைஞர்களை வேண்டுமென்றே பரந்த மனப்பான்மையை இழக்கச் செய்து, விட்டுக் கொடுக்காத பிடிவாதத் தன்மையை அவர்களிடம் வளர்க்கிறார்கள். நில உடைமைக்காரர்கள், இன்றைய செஞ்சீனத் தலைமையில் அதிருப்தி கொண்ட சக சீனர்கள் ஆகியோரை உறுதியாக வெறுக்கக் கற்றுத் தருகிறார்கள். இதெல்லாவற்றையும் விட புராண காலத்து ஹிரண்யனுக்கு 'நாராயணு' என்ற நாமம் எப்படி 'அலர்ஜி'யாக இருந்ததோ அப்படி இன்றைய நவசீனர்களுக்கு அமெரிக்கா என்ற சொல்லே 'அலர்ஜி'யாக விளங்க ஆவன செய்து வருகிறார்கள்! அவர்கள் நோக்கில் இன்று அமெரிக்கா உலக முழுவதையும் தன் ஆதிக்கத்தின் கீழ் அடிமைப்படுத்த நினைக்கும் ஒரு பயங்கர பூதம்; உரிமைக் குரலெழுப்பும் மக்களை நசுக்கி வரும் ஓர் அரக்கன்! ஜனநாயக முறை பற்றி இன்று சீன மக்களுக்கு எதுவுமே தெரியாது! மேற்கத்திய நாடுகளில் சர்க்காரையே தங்கள் கைக்குள் போட்டுக் கொண்டு ஆட்டி வைக்கும் முதலாளி வர்க்கத்தினரிடம் மக்கள் அகப்பட்டுச் சுதந்திரமிழந்து அவதிப்படுகின்றனர் என்றுதான் சீன மக்கள் வாஸ்தவத்தில் நம்புகிறார்கள்!


மாணவர்களுக்கான பாடத் திட்டங்களில் கம்யூனிஸ சித்தாந்தத்தின் வெற்றியைக் காட்டச் சரித்திரமே இஷ்டப்படி மாற்றி அமைக்கப்படுகிறது. சுதந்திரப் பாதையில் செல்லும் பிற நாடுகளில் நிலவும் சூழ்நிலைகளும் அங்குள்ள மக்களின் பொருளாதார நிலையும் அவர்களுடைய லட்சியங்களும் வேண்டுமென்றே திரித்துக் கூறப்படுகின்றன. மார்க்ஸிஸம் — லெனினிஸம்—மாவோயிஸம் ஆகிய ஆட்சி முறைச் சித்தாந்தங்களை விடச் சிறந்ததாயில்லாவிடினும் அதற்கு ஒப்பாக வேனும் மக்களுக்கு நல்வாழ்வளிக்கும் வேறு வித ஆட்சி முறை நிலவ முடியும் என்று எந்தச் சீனனும் நம்ப இடமளிக்காத அளவுக்கு அவர்களின் மூளை கெட்டிப்படுத்தப் பட்டிருக்கின்றன. அப்படியே அரசினருக்கு எதிராக முணு முணுக்க யாரேனும் துணிந்தால் அவர்களின் 'சிந்தனை சீர்திருத்த' சித்திர வதைக்கொப்பான மிகக் கடுமையான உடல் உழைப்பை மேற்கொள்ளுமாறு நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்!

பொய்யும் புளுகும் கூறி மக்களை ஏமாற்றி ஜனநாயக நாடுகள்மீது அவர்களுக்கு வேண்டாத வெறுப்பை வளர்த்து, கம்யூனிஸம் அண்டை நாடுகளில் பரவ ஆக்கிரமிப்பு நடத்தவும் தயங்காத தலைவர்களைச் சீனா கொண்டிருக்கும் வரையில் உலக சமாதானத்துக்கு அதனால் ஆபத்துக்தான் விளையும்.




'அடேயப்பா! எவ்வளவு உயரத்துக்குப் பந்தை அடிக்கிறாய்?' என்று குப்புவை அப்பு பாராட்டினான். ஆனால் அடுத்த கணம் அவ்விருவருமே பயந்து நடுங்கினர். காரணம் குப்பு அடித்த பந்து சைக்கிளில் வேலை தேடிச் சென்ற ஒரு பெரியவர் தலையின் மீது தாக்கி, தொப்பியை நசுக்கியது.

அந்தப் பெரியவர் சைக்கிளில் அமர்ந்தபடியே




ர்க்கஸ் வித்தை




தொப்பியைச் சரிசெய்து கொண்டு சென்றது சர்க்கஸ் வித்தையை நினைவூட்டியது. அந்தப் பெரியவரது சைக்கிள் வித்தை அந்தப் பக்கமாக வந்த சர்க்கஸ் சொந்தக்காரரைக் கவர்ந்தது. இது நல்ல வேடிக்கை என்று மகிழ்ந்தார்.

அழுத்திய தொப்பியைப் பெரியவர் எடுக்கும் முயற்சியில் கீழே உருண்டார்.




பாப்பா மலர்



குப்புவும் அப்புவும் பெரியவருக்கு அருகில் சென்று, 'எங்களை மன்னியுங்கள்' என்று கெஞ்சினர். ஆனால் அந்தப் பெரியவரின் கோபத்தை மகிழ்ச்சியாக மாற்றி விட்டார் சர்க்கஸ்காரர்.


'உங்கள் மூவரையும் என் சர்க்கஸ் கம்பெனியில் வேலைக்கு அமர்த்திக் கொள்ள முடிவு செய்து விட்டேன். நீங்கள் இன்று செய்த வித்தையைச் சர்க்கஸ் கம்பெனியிலும் செய்து காட்ட வேண்டும்' என்று பணித்தார்.



'இதை எப்படித் தொடர்ந்து செய்ய முடியும்?' என்று அலறினான் குப்பு. 'பழகினால் தன்னால் வந்துவிடும்' என்று தைரியம் சொன்னார் சர்க்கஸ்காரர்.



நல்ல காலம்! முதல் நாள் நிகழ்ச்சியில் குப்பு உதைத்த பந்து சரியாகப் பெரியவரின் தலையில் விழப் பலரது பாராட்டுக்களைப் பெற்றான் அவன். குப்பு, அப்புவின் விளையாட்டு, வித்தையானது வித்தைதானே!



'கல்கி அவர்களின் மாபெரும் சரித்திர நவீனமான சிவகாமியின் சபதத்தை நாட்டிய நாடகமாக அமைக்கவாவது? வீண் முயற்சி!' என்று நினைத்துக் கொண்டே சென்ற பலருக்கு அதிர்ச்சி வைத்தியம் செய்தார் குமாரி சந்திரகாந்தா, அதனை அரங்கேற்ற முடியும், அதிலும் பெருமளவுக்கு வெற்றி காண முடியும் என்று நிரூபித்துக் காட்டியதன் மூலம்.

சிறப்பாக அமைந்ததற்கு முக்கிய காரணம் திரு பூத்தனேரி சுப்பிரமணியத்தின் மிக அருமையான பாடல்கள். வார்த்தைகளில் எளிமையும் கருத்தில் அழுத்தமும், கவிதை நயமும் மிகுந்து காட்சிக்குக் காட்சி பலே போடச் செய்கின்றன.

ஸ்ரீ தண்டாயுதபாணி அவர்களின் உழைப்புத் திறனை நன்கு உணர முடிகிறது. நடனம் மட்டுமின்றி இசை அமைப்பையும் தாமே ஏற்றுக் கொண்டு பழுதின்றிப் பொறுப்பை நன்கு நிறைவேற்றியுள்ளார்.

குமாரி சந்திரகாந்தா சிவகாமியாகத் தோன்றி பாவ பூர்வமாக அபிநயம் பிடித்தும் நிருத்தும் ஜதிகளின்போது தாளக்கட்டுடன் நர்த்தனமாடியும் சோபிக்கிறார். கதையில் வெகுவாக ஈடுபாடு கொண்டுள்ளவர் என்பது ஆங்காங்கே எதிர்பாராத விதமாகப் பளிச்சிடும் உணர்ச்சி பாவங்களிலிருந்து அறிய முடிகிறது.

தாம்பரம் லலிதா மகேந்திர பல்லவராகவும், சந்திரகலா புலிகேசியாகவும் அரங்கேறி சபாஷ் பெறுகிறார்கள்.

நாகநந்தி, பரஞ்சோதி, மாமல்லர், ஆயனர் ஆகியோருமே சோபிக்கவில்லை. ஆனால் நாட்டிய நாடக அமைப்பில் அவர்களுக்கு அதிகமான வேலையுமில்லை. மகேந்திரருக்கும் சிவகாமிக்கும் மட்டுமே பிரதான்யம் அளித்து நாவலில் வரும் முக்கியமான திருப்பக் கட்டங்களை மட்டும் - அரசவையில் அரங்கேற்றம், ரதி விதி தூது, வரம் கேட்கும் படலம், நாற்சந்தி நடனம் போன்றவை - விரிவாக ஆடிக் காட்டுகிறார்கள். அநேகமாக வீட்டுக்கு வீடு சிவகாமியின் சபதம் கதை தெரிந்திருக்குமாதலால் கதையைத் தொடர்புபடுத்திப் புரிந்துகொள்வது தமிழ் மக்களுக்குச் சிரமமாயிராது. மைக்கிலும் முன்கூட்டியே கதைக் கருத்தைக் கூறுகிறார்கள்.

காட்சி ஜோடனைகள் அடக்கமாக இருப்பதால் நடனத்தில் அதிகமான லயிப்பு உண்டாகிறது, ரசிகர்களுக்கு. உடை அலங்காரத்திலும் நாட்டிய அமைப்பிலும் ஓரளவு சினிமா பாணி புகுந்திருப்பதை ஜன ரஞ்சகத்தைக் கருதி மறந்துவிட முயலலாம்.

கர்நாடக சுத்தமான பின்னணி இசையினைத் திரு டி. கே. மணியனும், ஸ்ரீமதி கோமதி மோகனும் நன்றாகப் பாடுகிறார்கள்.

முன் பகுதி ரொம்ப நிதானம்; பின் பகுதி ஒரே ஓட்டம். இதை நன்கு நிரவிக் குறைந்த முக்கியத்துவமுடைய சில காட்சிகளை நீக்கி மூன்று மணி நேரத்துக்குள் முடித்துவிட்டால் நாட்டிய நாடகம் மிக நன்றாக இருக்கும்.



சிவகாமியின் சபதம்




அவள் எங்கே?
கதை: கௌசிகன்
சித்திரம்: ரமணி
16
நான் தான் கூறுகிறேன் இன்ஸ்பெக்டர் சார்.


நீதிபதியைச் சந்தேகிக்கலாமா? சந்தேகித்தாலும் தான் நீதி, நேர்மை, சட்டம் இவைகளைக் கட்டிக் காக்கும் உங்கள் இலாகா தான் நம்புமா?
சந்துரு சேகருடன் ஒரு குறிப்பிட்ட விஷயம் பற்றி விவாதிக்கிறான்.
சண்முகம் எனக்காக நீ ஒரு சிறு காரியம் செய்ய முடியுமா? அது பைத்தியக் காரத் தனமாகக் கூடத் தோன்றலாம் உனக்கு. ஆனாலும்... உங்கள் பொறுப்பிலுள்ள தலையைச் சவக்கிடங்கிலுள்ள உடலோடு ஒவ்வொரு இணைப்பும் சரியாகப் பொருந்துகிறதா என்று பார்க்கச் சொல்.
இதுக்கு நான் ஏதாச்சும் செய்யணுமா? இத்தனை நேரம் அவர்களே அதைச் செய்து பார்த்திருப் பார்களே.
அவர்கள் இன்னும் அந்தக் காரியத்தைச் செய்யவில்லை.
வேண்டாம் சண்முகம். ஆனால் இதை நீ செய்யாததற்காகப் பின்னால் என்றாவது வருத்தப் படப்போகிறாய் பார்.
எங்கள் இலாக்கா வுக்கு அதிருப்தி யைத் தரும் இம் மாதிரியான காரி யங்களை நான் செய்யமுடியாது.
மனிதர்கள் பொய் சொல்லலாம். மைக்ரோஸ்கோப் பொய் சொல்லாது. சோதனையில் குறிப்பிட்ட துப்பாக் கியின் குண்டு அகப்பட்டுள்ள தலையின் காயத்தில் பொருந்துமானால் அந்தத் தலை மாதவியினுடையது தான். ஆனால் சவக்கிடங்கிலுள்ள உடல் வேறொரு பெண்ணினு டையது. குமார் அந்த உடலுக்குரிய தலையை என்ன செய்தான் என்று தெரியாது. அதே போல இந்தத் தலை மாதவியினுடையது தானால் அந்த மர்ம மனிதன் இரண் டாவது தடவையாக மாதவியை உண்மையாகவே கொன்றிருக்க வேண்டும். அப்படியானால் அவன் மாதவி யின் உடலை என்ன செய்தான்? பிரச்னைக்குரிய விஷயம் இது. இந்தத் தலையும் அந்த உடலும் பொருந்துமா?
அதுதான் சண்முகத்தின் உள் ளத்திலே சலனத்தை உண்டாக்கி விட்டோமே. அவன் வெளிப் படையாக நம்மிடம் மறுத்தாலும் உள்ளூற அது வேலை செய்யும் என்றே நம்புகிறேன்.

தொடரும்..


ஜலதோஷத்தை எதிர்க்க

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

சிவப்பு லேபில்

சாப்பிடுங்கள்








சாதாரண ஜலதோஷம்கூட அபாயகரமானது தான். அது உடலைப் பலவீனப் படுத்தி, நோய்களை எதிர்க்கும் சக்தியைக் குறைத்து, நோய்கள் எளிதில் பீடிக்கும் நிலையை ஏற்படுத்துகிறது. வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் மூன்று விதங்களில் அளிக்கும் பலன் ஒப்பற்றது. அதிலுள்ள கிரியோஸோட் மற்றும் க்வயகால் ஜலதோஷத்தை குணப்படுத்துகிறது. இரும்பு சத்து, பலமளிக்கும் சத்துக்கள், மால்ட் மற்றும் ஸ்ப்ளீன் சாரங்கள், பசியைத் தூண்டுகின்றன, இழந்த சக்தியை ஈடு செய்கின்றன, குணமான நோய் மீண்டும் வராமல் தடுக்கும் சக்தியை யூட்டுகின்றன.

எல்லாக் கால நிலைகளிலும் நோய்களை எதிர்க்கும் சக்தி பெற சிவப்பு லேபிலுள்ள வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் சாப்பிடுங்கள்.



வாட்டர்பரீஸ் காம்பவுண்டில் கலந்துள்ள கிரியோஸோட் மற்றும் க்வயகால் சுவாசக் குழாய்களில் கிருமிகளால் அபாயம் ஏற்படாமல் பாதுகாக்கின்றன. கபத்தை இளக்கி வெளியேற்றி சுவாசப் பைகளை சுத்தமாக வைக்கின்றன. இருமல், ஜலதோஷம், சுவாசக் குழாய்களில் கபம் கட்டுதல், காச சம்பந்தமான உபாதைகள் முதலியவற்றை எதிர்க்கவும் வராமல் தடுக்கவும் உதவுகின்றன.

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

இருமல், ஜலதோஷம், சுவாசக் குழாய்களில் கபம் கட்டுதல், காச சம்பந்தமான உபாதைகள் முதலியவற்றை எதிர்க்கும் சக்தியை உடலுக்கு அளிக்கிறது

வார்னர் இந்துஸ்தான் லிமிடெட், பம்பாய்



தாயின் கருணை

விவாகமாகிப் பல ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு ஜமீன்தாரிணிக்குக் குழந்தை பிறக்கிறது. குழந்தையின் விகாரத் தோற்றத்தைக் கண்ட ஜமீன்தார் தம் மனைவிக்குத் தெரியாமல் அந்தக் குழந்தையைக் கொன்றுவிடத் தீர்மானிக்கிறார். நல்ல தருணத்தில் வேலைக்காரி குறுக்கிட்டு அந்தக் குழந்தையைத் தான் வளர்ப்பதாகக் கூறி எடுத்துச் செல்கிறாள். குழந்தை இறந்தே பிறந்ததாக மனைவியிடம் கூறி அவளைத் தேற்றுகிறார் ஜமீன்தார். பிறகு ஜமீன்தாரிணிக்கு ஓர் அழகான ஆண் குழந்தை பிறந்து அயோக்கியனாக வளர்ந்து பெற்ற தாயைக் கொல்ல முயல்கிறான். தன்னைக் கொல்ல வந்த தன் மகனை மன்னித்தது தாயின் கருணை தானே! என்ன கருணையோ, என்ன கஷ்டமோ!

கருணை காட்டும் தாயாக சினிமா உலகில் எம். வி. ராஜம்மாவாகத்தானே இருக்க முடியும்? அனுபவம் பெற்ற தாயான அவர் நடிப்புக்குக் கேட்க வேண்டுமா?

வேலைக்காரி வளர்த்த ஜமீன்தார் மகனாகக் கல்யாண குமார் வந்து களங்கமற்ற முகத்தோடு கண்ணீர் வடித்து நன்றாய் நடிக்கிறார். முத்துராமன் ஜமீன்தாரின் இரண்டாவது மகன். காதலியோடு கைகோத்து ஆடி, உல்லாசமாகத் திரிந்து கடைசியில் திருந்துகிறார். நடிப்பு சுமார்தான். புது முகம் வந்தனா இன்னும் நன்கு பயிற்சி பெற வேண்டும். கற்றுக்குட்டியாகவே இருக்கிறார்.

படத்தில் ஒரு திருப்பம், ஒரு புதுமை, விறுவிறுப்பு ஏதாவது இருக்க வேண்டுமே! ஒன்றும் கிடையாது. நாகேஷ் சிரிப்பு மூட்டப் பாடுபடுகிறார்.

தாயின் கருணை: அவலை நினைத்துக்கொண்டு உரலை இடித்திருக்கிறார்கள்.

மகாபாரதம் (வீர பீமசேனன் சரிதம்)

பாண்டவர்கள் ஐவருள் மகா பலசாலியும் மகா வீரனுமான பீமசேனனைப் பற்றிய கதையை ஹிந்தியில் படமாக்கி வெற்றி கண்டதை யொட்டி அதே படம் தமிழாக்கப்பட்டிருக்கிறது - அதாவது டப் செய்யப்பட்டிருக்கிறது. டப்பிங் சங்கடம் தருவதை மறந்துவிட்டுப் படம் பார்த்தால் ரசிக்கலாம்.

கதாநாயகன் பீமசேனனாக வரும் மல்யுத்த வீரர் தாராசிங்கின் வேஷப் பொருத்தமே படத்துக்குக் களை கட்டி விடுகிறது. பாட்டுப் பாடிப் பிராணனை வாங்காமல் பீமசேனன் காரியத்தில் கண்ணாயிருப்பது மிகவும் திருப்தியாயிருக்கிறது. இடும்பனோடும், பகாசுரனோடும், கீசகனோடும், துரியோதனனோடும் சண்டையிடும் காட்சிகளில் தாராசிங் தன்னிகரற்று விளங்குகிறார்.

இந்தப் படத்தில் சண்டைக் காட்சிகள்தான் பிரதானமானவை. மாமல்லர்கள் நடித்திருக்கும் படமாயிற்றே!

பீமன், துரியோதனன், சகுனி, அர்ஜுனன் முதலான பாத்திரங்களுக்குப் பொருத்தமான நடிகர்களைப் போட்டவர்கள் திரௌபதி விஷயத்தில் நம்மைப் பழிவாங்கி விட்டார்கள். பாண்டவர்களின் தேவியைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கிறது.

உத்தரைக்கும் அபிமன்யுவுக்கும் கொஞ்சம் சான்ஸ் கூடவே கிடைத்திருக்கிறது. அபிமன்யுவாக மதிபாலும், உத்தரையாக அநிதா குஹாவும் நடித்திருக்கின்றனர்.

படம் பிரமாதமோ இல்லையோ, கூட்டம் பிரமாதமாயிருக்கிறது. அது மகாபாரதத்தின் மகிமைதான். படத்தில் பல குறைபாடுகள் காணப்பட்டாலும் பாரத நாட்டு மகா புருஷர்களின் வீர வரலாறானதால் அலுப்புத் தட்டாமல் ஓடுகிறது.



'அந்தப் பெண்ணிடம் நான் ஊருக்குப் போவது பற்றிச் சொல்லவே யில்லையே!'—மகிழ்ச்சியால் மலர்ந்திருந்த சபேசனின் முகம் கூம்பிச் சிறுத்தது. பெரிய குற்றமொன்றைச் செய்து விட்டவன் போல் தலை குனிந்து நெற்றியை வருடியவாறு அப்படியே கூனிக் குறுகி உட்கார்ந்து கொண்டான்.

'இன்றோ நாளையோ இந்த விஷயத்தை நச்சியின் மூலம் அவள் அறிந்து கொள்ளும்போது என்னைப் பற்றி என்ன நினைப்பாள்?'


உட்கார்ந்தபடியே ரிப்பன் மாளிகையின் முகப்புக் கூடத்தை நிமிர்ந்து நோக்கினான் சபேசன். அங்கே யிருந்த ஸ்மித் துரையின் பளிங்குச் சிலை இப்போது தெரியவில்லை யென்றாலும், அன்றொரு நாள் அந்தச் சிலையருகில் வேதாவை முதன் முதலாகச் சந்தித்த காட்சி அப்படியே அவன் மனக் கண்ணில் தோன்றலாயிற்று. அதைத் தொடர்ந்து, அவள் அவனிடம் பேசிய பேச்சுக்கள், நடந்துகொண்ட நளின முறைகள், செய்த உதவிகள் எல்லாமே ஒன்றன்பின் ஒன்றாக நினைவில் மோதி நின்றன.

'இப்படிப்பட்ட ஓர், அன்புள்ளம் கொண்ட பெண்ணிடம் சொல்லிக்'

ஜீவகீதம்

அத்தியாயம் முப்பது

அன்புச் சுழல்



சொல்லாமல் புறப்பட்டு விட்டேனே! நேற்றிரவு நச்சியின் உடல் நிலை பற்றித் தெரிவிக்கச் சென்றபோது, வீட்டில் தனியாக இருந்த அவளிடம் ஒரு வார்த்தை சொல்லியிருக்கலாம். அதற்கு அப்போது சந்தர்ப்பம் சரி யில்லையென்றாலும், தன் மகளின் நிலை யறிந்த கன்னியம்மாள் அவனை அழைத்து வருவதற்காக ஓடியபிறகா வது அவளைப் போய்ப் பார்த்து இவ் விவரத்தைத் தெரிவித் திருக்கலாம். எல்லா விஷயங்களிலுமே நான் ஏன் இப்படி முன் யோசனையின்றி மூடனைப் போல் நடந்து கொள்கிறேன்?'

தன் மீதே வெறுப்படைந்தவனாய் முகத்தைச் சுளித்துக்கொண்ட அவன் சட்டென்று எழுந்து நின்றான். 'உடல் நலமின்றி இருக்கும் நச்சி இப்போது வீட்டில்தான் இருப்பாள்; அவளைப் பார்க்கப் போவது போல் போய், வேதாவிடம் சொல்லிக் கொண்டு வந்து விடலாமா?'

ரிப்பன் மாளிகைக் கடிகாரம் மணி ஆறே கால் என்பதை ஓர் இசைக் கலவையால் அறிவித்தது.

'கொச்சி எக்ஸ்பிரஸுக்கு நேரம் நெருங்கி விட்டதே! இதற்குள் நுங்கம் பாக்கத்துக்குப் போய்த் திரும்ப முடியுமா? பரவாயில்லை; அந்த வண்டி தவறிப் போனால், ஜனதாவுடன் எக்ஸ்பிரஸைப் பிடித்துக்கொள்ளலாம்.'

அவசரமாகப் புறப்படத் திரும்பிய சபேசனின் மனத்தில் மற்றொரு சந் தேகம் குறுக்கிட்டது. 'இந்த நேரத்தில் நச்சி தன் வீட்டில் இல்லாமலிருந்து, கன்னியம்மாளின் கண்ணில் அகப் பட்டுக் கொள்ள நேர்ந்தால்?—ஊருக்குப் போகும்போது வீணான தொல்லைகள், மனக் கஷ்டங்கள்—'

தயங்கி நின்ற அவன் நெஞ்சைத் தடவிக் கொண்டான்; ஜேபியிலிருந்த பேனா கையில் தட்டுப் படவே, அதை அவனுக்கு அன்பளிப்பாகக் கொடுத்த வேதாவின் எழில் வதனம் மீண்டும் அவனது மனச் சிலையில் ஜீவ ஓவிய மாக நிமிர்ந்தது.

'என்னைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?' — அன்றொரு நாள் இரவு அவன் வைக்கோற் போரின் மேல் சௌந்தரியத் தேவதையாகச் சாய்ந்துகொண்டு கேட்ட கேள்வியை இப்போது அவன் நினைத்துக் கொண் டான். அதற்குத் தான் அப்போது பதில் ஏதும் சொல்லாமல், பிறகு



ஆகஸ்டு வெளியீடு!



யோசித்துச் சொல்வதாக நழுவிக் கொண்டதையும் நினைவுகூர்ந்தான். அவனுக்குச் சிரிப்பு வந்து விட்டது.

'இந்தக் கேள்விக்கு அவள் என்னிடம் என்ன பதிலை எதிர்பார்த்திருப்பாள்? ''நீ என்னைக் காதலிக்கிறாய்; நானும் உன்னைக் காதலிக்கிறேன்.'' — இப்படி நான் சொல்வேன் என்றா?'

அவனுக்கு மேலும் சிரிப்புப் பொத்துக் கொண்டு வந்தது. 'நல்ல வேடிக்கைதான்! ஒரு பெண்ணை ஓர் ஆணோ, ஓர் ஆணை ஒரு பெண்ணோ எங்காவது சந்தித்து ஓரிரு வார்த்தைகள் பேசக் கூடிய சந்தர்ப்பமோ, அல்லது அற்பமான உதவிகள் ஏதேனும் செய்ய வேண்டிய அவசியமோ ஏற்பட்டு விட்டால் உடனே அவர்கள் ஒருவரையொருவர் காதலித்துவிட வேண்டியதுதானா? இதைத் தவிர அவர்கள் வேறு வகையில் நினைக்கவோ பழகவோ முடியாதா? காதல் என்பது பல்வேறு தூய உறவுப் பரிணாமங்களுக்குப் பிறகு சில தவிர்க்க முடியாத காரண காரியங்களை அடிப்படையாகக் கொண்டு தானாகவே தோன்றி மலர்வது. இப்படியின்றி முதல் சந்திப்பிலேயே — கண்ணொடு கண்ணிணை நோக்கின உடனேயே — காதல் உணர்வு தோன்றி விட்டதென்றால், அப்படித் தோன்றி விட்டதாக எண்ணி அதை அடையவோ உறுதிப் படுத்திக் கொள்ளவோ முயன்றால், உண்மையில் அதற்குக் காதல் என்று பெயர் அல்ல;. அது காதலும் அல்ல.'

யாரோ குறும்பாகச் சிரிப்பதுபோல் கேட்கவே பின்னால் திரும்பினான் சபேசன். அவனருகில் யாரும் இல்லை. அப்படியானால் சிரித்தது யார்? அவனே தான்! இந்த வித்தார வாதத்தைக் கேட்டு அவன் மனமே நகைத்தது. 'ஆமாம்; இது யாருக்குச் சொல்லும் போதனை? எனக்கா? எனக்குத்தான் என்றால் அந்தப் பெண்ணைப் பற்றி நான் ஏன் இவ்வளவு தூரம் எண்ணிக் குழம்ப வேண்டும்? இன்று மட்டும் தானா? எத்தனையோ இரவு நேரங்களில், பகல் போதுகளில் அவளைப் பற்றிய நினைவிலே ஆழ்ந்து இனிமை கண்டிருக்கிறேனே! அந்த இனிமை, அந்தச் சுகம்—அதற்கு என்ன பெயர்?'

வெட்கத்துடன் உடம்பை நெளித்துக்கொண்ட சபேசன் விரக்திப் புன்முறுவல் பூத்தான். 'என்னுடைய உள்ளத்தின் உணர்வுகளை எனக்கு நானே அந்தரங்கமாக அறிந்தும் உணர்ந்தும் கொள்ளக்கூட நான் ஏன் இப்படி அச்சப்பட்டுக் கோழை போல் பின்னடைகிறேன்? என்னையறியாமலேயே எனது உள் மனம் அந்தப் பெண்ணின்மீது ஏதோ ஒருவித லயிப்புக் கொண்டிருக்க, அதை என் புற மனம் ஏற்க மறுத்து எதிர்த்து வருவதே காரணமோ? அவ்வாறானால் அந்த எதிர்ப்பு உணர்ச்சி என் புறமனத்தில் ஏற்படுவானேன்? அவள் நச்சியின் தங்கையாகவும், கன்னியம்மாளின் மகளாகவும் இருக்கிறாள் என்பதனாலா? அவ்விருவர் மீதும் நான் கொண்டுள்ள பயமே என்னை அவளிடம் நெருங்க விடாமல் பின்னுக்கு இழுக்கிறதோ? அத்துடன், இப்போதைய எனது அநாதரவான நிலையும் அதற்கொரு காரணமோ? இவையெல்லாம் உண்மையானால் என்னைப் போன்ற ஒரு கோழை இந்த உலகத்தில் எங்குமே இருக்க மாட்டான்!'

செவிக்குச் சுவையான ஒரு நீண்ட இசைக் கோலத்துக்குப்பின் ஏழு முறை முழங்கி ஓய்ந்தது ரிப்பன் மாளிகைக் கடிகாரம்.

பரபரப்படைந்த சபேசன் சுற்று முற்றும் திரும்பிப் பார்த்தான்.

இப்படியும்

வரதனின் தகப்பனார் கெஞ்சிக் கூத்தாடிப் பார்த்து விட்டார். அதையெல்லாம் அந்தப் போலீஸ்காரர் நம்ப மறுத்து விட்டார்! கடையில் எப்படியோ நூறு ரூபாயை எடுத்துக் கொடுத்து அவரைத் திருப்பி அனுப்புவதற்குள் அவர்கள் பட்ட பாடு! நூறு ரூபாய் போனால் போகிறது. காசு இன்று வரும்; நாளை போகும்! நாளை பேப்பரில் திருடாக திருடனாகச் செய்தி வந்தால் வரதனின் தகப்பனாரின் மானம் என்னாவது? அதே சமயம், ரௌடி ரங்கையன் தன் சகாவிடம் சொல்லிச் சிரித்துக் கொண்டிருந்தான்.

ஒரு கஞ்சாப் பிடி இரண்டு ரூபாய் தந்து ஒரு எடுக்க யோசிச்சவன், தன் மானத்துக்காக நொடியிலே நூறு ரூபாய் நோட்டை அள்ளி விசிட்டானே!

அவன் கையில் ஒரு புத்தம் புது நூறு ரூபாய் நோட்டு சிரித்தது! -- விமலா ரமணி



விளக்குகள் ஏற்றப்பட்டு எங்கும் ஒளி மயமாகக் காட்சி யளித்தது. 'இப்போதைக்கு நான் அந்த ஒரு விஷயத்தில் மட்டும் கோழையாகவே இருப்பது நல்லது' என்று தனக்குள் முணுமுணுத்துக்கொண்ட அவன் தனது புதிய - கான்வாஸ் பையை எடுத்துக்கொண்டு அங்கிருந்து சென்ட்ரல் ஸ்டேஷனை நோக்கி நடந்தான்.

கொச்சி எக்ஸ்பிரஸ் புறப்பட இன்னும் பதினைந்து நிமிஷங்களே இருந்தன. அவசரமாக ஓடிப் போய்க் கோவைக்கு ஒரு டிக்கெட் வாங்கிக்கொண்டு உள்ளே விரைந்தான் சபேசன்.

''சார், கூலி!''

வண்டி கிளம்பி விடுமோ என்ற அவசர அங்கலாய்ப்பில், சற்றுக் கனமாயிருந்த பையைத் தூக்கிக்கொண்டு, வேகமாக நடக்க அவனால் முடியவில்லை. ''என்னய்யா, கூலி கேட்கிறே?'' என்று பின்னால் திரும்பாமல் வினவிக்கொண்டே நடந்த சபேசனின் பார்வை, கொச்சி எக்ஸ்பிரஸ் எந்தப் பிளாட்பாரத்தில் நிற்கிறது என்பதை அறிய அங்குமிங்குமாகப் பாய்ந்தது.

''நீ கொடுக்கிறதைக் கொடு, சார்! கொண்டா சார், இப்படிப் பையை!''

ரயில் வண்டிகள் புறப்படும் நேரமும், அவை நிற்கும் பிளாட்பாரங்களின் எண்களும் கொண்ட பெரிய அறிவிப்புப் பலகைக்கு எதிரே போய் நின்று அதை அண்ணாந்து பார்த்தவாறு கையிலிருந்த பையைக் கொடுத்தான் சபேசன்.

அரைக்கால் சட்டையும், சாண்டோ பனியனும், தலையில் முண்டாசுமாக இருந்த ஓர் ஆள் அந்தப் பையை வாங்கிக் கொண்டு முன்னால் வேகமாக நடந்தபடி, ''அங்கே இன்னா பார்த்துக்கிட்டுக் கெடக்கிறே? நாலாவது பிளாட்பாரத்திலே வண்டி நிக்குது. இன்னும் ஐஞ்சு நிமிசம்தான்; சீக்கிரமா வா, சார்!'' என்றான் கரகரத்த குரலில். வண்டியில் இடம் கிடைக்க வேண்டுமே என்ற ஒரே கவலையுடன் அரக்கப் பரக்க அவனைப் பின்தொடர்ந்து நடந்தான் சபேசன்.

ஒரு ரயில் பெட்டியில் தாவி ஏறிய அந்தக் கூலி ஆள், அங்கு ஏற்கனவே பெஞ்சு ஒன்றில் விரித்துப் போட்டிருந்த தன் சட்டைத் துணியை எடுத்துக்கொண்டு அவ்விடத்தில் பையை வைத்து விட்டு மறு பக்கமாகக் கீழே குதித்தான். அவசரமாக ஓடி வந்த சபேசனுக்கு இத்தனை சௌகரியமான இடம் கிடைத்து விட்டது பற்றிப் பரம சந்தோஷமாகிவிட்டது. பையைத் தூக்கி வந்த கூலி ஆள் எங்கே என்று அங்குமிங்குமாகத் திரும்பிப்பார்த்தான்.

''இன்னா சார், கூலி கொடுக்காம ஓடிப்பிடலாம்னு பார்க்கிறயா? வண்டி பொறப்படப் போவுது; சீக்கிரமா துட்டை எடு!''


கட்டை குட்டையான ஒரு முரட்டுக் கை சன்னல் வழியே நீண்டது. ஜேபியிலிருந்து எட்டணாக் காசை எடுத்துக்கொண்டு நிமிர்ந்த சபேசன், ஏதோ தீயை மிதித்து விட்டவன்போல் ஒரு துள்ளுத் துள்ளிப் பின்னால் நகர்ந்தான்.

''இன்னா பிரதர்! போயிட்டு வர்றியா? சந்தோஷமா போயிட்டு வா! நம்பளை மறந்துடாதே! குட் பை! சீரியோ!''— தன் வழக்கமான கோணல் சிரிப்புடன் கூலி ஆளாக அங்கு நின்றுகொண்டிருந்த நச்சிதான் இவ்வாறு கூறிக்கொண்டே வெடுக்கென்று கையை வெளியே இழுத்துத் தலைக்கு மேல் உயர்த்தி ஆட்டினான்.

விசில் சத்தத்துடன் வண்டியும் மெல்ல நகர்ந்தது. கூலி கொடுப்பதற்காக எடுத்த காசு கீழே நழுவி விழுந்ததுகூடத் தெரியாமல் இரு கரங்களையும் குவித்துக்கொண்டு, கலங்கிய கண்களுடன் அப்படியே மரம் போல் நின்றான் சபேசன்.

இரவு மணி பதினொன்று. தூக்கம் பிடிக்காமல் விளக்கடியில் உட்கார்ந்து படித்துக்கொண்டிருந்த வேதா, கதவு தட்டும் சத்தம் கேட்டு எழுந்து போய்த் திறந்தாள். சோர்வும் களைப்புமாக நச்சிதான் உள்ளே வந்தான். அவனைக் கண்ட அவளுக்கு மகிழ்ச்சியும் வியப்பும் ஒருசேரக் கிளர்ந்தன. அத்துடன் ஒருவித அச்சமும் தோன்றியது.

நேற்றிரவு கன்னியம்மாள் ஓடிப் போய் அந்த ரயில் பாலத்தடியிலே படுத்துக் கிடந்த நச்சியை ஒரு ரிக்ஷாவில் தூக்கிப் போட்டு வீட்டுக்குக் கொண்டு வந்து, ஏதேதோ கஷாயம் சூரணம் என்று செய்து கொடுத்துப் படுக்க வைத்தாள். பொழுது விடிந்து எழுந்து பார்த்தபோது அவனைக் காணோம். ''உடம்பு நல்லாயிடுச்சாக்கும்; அதான் ஊருக்கு முன்னாலே எய்ந்து ஓடிப்பிட்டிருக்குது. கய்தே! ஒரு நாளாச்சும் ஊட்லே சரியா தங்க மாட்டேங்கிறானே! பொறக்கும் போதே காலில் சக்கரத்தைக் கட்டிக் கிட்டுப் பொறந்தானே. இன்னா



மகிழ்ந்து விளையாடும் நேரம்— உட்வர்ட்ஸுக்கு நன்றி



மந்தம், புளிப்பு, உப்புசம் மற்றும் பல் முளைக்கும்போதுள்ள உபாதைகளிலிருந்து உடனடி நிவாரணம்பெற உட்வர்ட்ஸ் கிரைப் வாட்டர் உபயோகியுங்கள்.

இது 100 வருடங்களாக புத்திசாலிகளான தாய்மார்களால் உபயோகிக்கப் பட்டு வருகிறது

எயவோ!'' என்று இரைந்து திட்டிக் கொண்டே மாட்டை அவிழ்த்துக் கொண்டு பால் கறக்கப் போய் விட்டான் அவன்.

இந்நிலையில் நச்சி இன்றே வீட்டுக்குத் திரும்பியிருப்பதைக் கண்ட வேதா வியந்து மகிழ்ந்ததில் வியப்பில்லை தான். ஆனால் அவளுடைய அச்சத்துக்குக் காரணம், 'மறுபடியும் அவனுக்கு உடம்பு ஏதேனும் ஆகிவிட்டதோ' என்பது.

''இன்னா, தங்கச்சி! நீ இன்னும் தூங்கலியா?'' என்று கரகரத்த குரலில் கேட்டுக் கொண்டே கிழிந்த பாய் ஒன்றை எடுத்துச் சுவரோரம் போட்டு உட்கார்ந்தான் நச்சி.

''இல்லே, அண்ணா!....'' என்று இழுத்தவாறு அவன் முகத்தைக் கூர்ந்து நோக்கினாள் வேதா. அதில் எல்லையற்ற சோகம் கவிந்திருந்ததைக் காண அவளுக்கே ஆச்சரியமாகி விட்டது.

''அம்மா எங்கே, தங்கச்சி?''

''மாட்டுக்கு வைக்கோல் பிரிச்சுப் போடுது, அண்ணா!''

இந்தச்சமயம், ''ஏண்டி, பொண்ணே! அந்தப் பையனா வந்திருக்கிறான்?.... நல்ல வேளை, சோத்துப் பானையிலே தண்ணி ஊத்தலே. தட்டிலே ரெண்டு அகப்பை அள்ளிப் போட்டு மொளவு ரசம் ஊத்தி வை. துன்னுட்டுப் படுக்கட்டும்'' என்று மாட்டுக் கொட்டகைப் பக்கமிருந்து குரல் கொடுத்த கன்னியம்மாள், ''இஞ்சி புதினா தொவையலைப் பானை மேலே ஒட்டி வைச்சிருக்கிறேன்; அதையும் ரவ எடுத்துக் கொடு!'' என்றாள் சலிப்புடன்.

''எனக்கு ஒண்ணும் வேணாம், தங்கச்சி! நான் ஓட்டல்லே சாப்பிட்டுட்டேன். நீ போய்ப் படுத்துக்க'' என்று சொன்ன நச்சி, உட்கார்ந்தபடியே கால்களைச் சேர்த்துக் கட்டிக்கொண்டு சுவரில் சாய்ந்து கண்களை மூடினான்.

அவனையே சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்த வேதா தயக்கத்துடன் அருகில் வந்து, ''ஏன் அண்ணா, மறுபடியும் காய்ச்சல் எதனுச்சும் வந்துடுச்சா?'' என்றாள் கவலையோடு.

''அதெல்லாம் ஒண்ணுமில்லே!''

''பின்னே ஏன் ஒரு மாதிரியா இருக்கிறே? அம்மா மேலே கோபமா?''

இந்தக் கேள்வியைக் காதில் வாங்காதவன் போல் மௌனமாயிருந்த நச்சி, சற்று நேரங்கழித்துச் சட்டென்று நிமிர்ந்து அவளை ஒரு கணம் பார்த்து விட்டுப் பிறகு தன் வழக்கமான கோணல் சிரிப்புடன், ''ஆமாம்; என்னோட தோஸ்து சபேசன் ஊருக்குப் போயிட்டானே, தெரியுமா?'' என்றான்.

வேதாவின் பூவுடலுக்குள் ஒரு புயல் வீசியிருக்க வேண்டும்; அல்லது தலைச் சுற்றலாவது ஏற்பட்டிருக்க வேண்டும். ''அப்படியா?.... எனக்குத் தெரியாதே!....'' என்றாள் உள்ளடங்கிய நிலைக் குரலில்.

''இன்னிக்கு ராத்திரிதான் வண்டி ஏறினான். அவனை வழிகூட்டி அனுப்பிச்சுட்டுத்தான் இப்ப வர்றேன்'' என்று அலட்சியமாகச் சொன்னான் நச்சி.

''யாருடா போயிட்டான்? அந்தக் கஸ்மாலமா?'' என்று கேட்டுக் கொண்டே உள்ளே வந்த கன்னியம்மாள், ''ஒய்ஞ்சுப் போனானா? போவட்டும்! இனிமேலாவது நீ உருப்படறியா, பார்க்கிறேன்'' என்றவாறு புறக்கடைக் கதவைப் படீரெனச் சாத்தினாள். மெல்லத் தலைநிமிர்ந்த நச்சி அமைதியாக அவளை ஏறிட்டுப் பார்த்தான்.

''இன்னாடா, மொறைச்சுப் பார்க்கிறே? அந்தக் கயிலாத்துப் பையனாலே தான் நீ இப்படிக் கெட்டுக் கீரை வழியாப் போயிட்டே! அவன் இன்னா சொக்குப் பொடி போட்டானோ, இன்னா கர்மமோ! அவனுக்குப் பின்னால் நாக்குட்டி மாதிரிச் சுத்திக்கிட்டுக் கெடந்தியேடா! இப்ப அப்படிச் சுத்தறதுக்குத் தொல்லையில்லையேன்னு கவலைப் படறாப்பிலே இருக்குது!'' என்றாள்.

''ஓகோ! அவனோடு சேர்ந்த பிறகு தான் நான் கெட்டுப்பிட்டேன்: அதுக்கு முன்னாடி ரொம்ப நல்லவனாயிருந்தேன். இல்லையாம்மா?'' என்றான் நச்சி கேலிக் குரலில்.

''பின்னே இன்னாடா? ஆத்தாக்காரியாச்சேன்னு என் மேலே உனக்கு ஒரு மதிப்பு, மருவாதி இருக்குதா?'' என்று சீறினாள் கன்னியம்மாள்.

''உன்னை என்னோட அம்மான்னு என் மனசார நினைக்க வைச்சவனே அந்தப் பையன்தான். இதை மொதல்லே நீ தெரிஞ்சிக்கணும்.''

''அப்படீன்னா, இதுக்கு முன்னாடி என்னை இன்னான்னு நினைச்சுக்கிட்டு இருந்தேடா?''

''சித்தாத்தாக்காரின்னு!''

''இன்னாது?''

''பின்னே இன்னும்மா? உன் கதையெல்லாம் எனக்குத் தெரியாதுன்னு நினைச்சுக்கிட்டு இருக்கறியா? கேளு: பத்து மாசம் சுமந்து பெத்த என்னை வாணாம்னு அந்த ஏ. ஆர். பி. ஷெல்டர் கிட்டே போட்டுட்டுப் போனியே, அப்பவே நாய் நரி வந்து கடிச்சுத் துன்னிருந்தா இப்ப யாரை

'மவனே'ன்னு கூப்பிடுவே? என்னமோ என் தலீவிதி பண்ணின கமால்லே அந்தப் பயில்வான்கிட்டே ஆம்புட்டு உசிரு பொழைச்சேன்! அதுக்கப்புறம் நீ ஓடியாந்து, 'நான்தாண்டா, உன் அம்மாக்காரி'ன்னு அழுதே! நானும் ஏதோ பாவம் பரிதாவம் பார்த்துப் போனுப் போவட்டும்னு உன்கிட்டே பால் குடிச்சேன்! பால் ஊட்டிப்பிட்டா மட்டும் நீ எனக்கு அம்மாளாயிடு வியா? என்னே வேணும்னு எறிஞ்சப் பவே உனக்கும் எனக்கும் இருந்த உறவு அறுந்த மாதிரிதானே?''

''டேய், டேய்! ஏண்டா இப்படி என் நெஞ்சிலே நெருப்பை அள்ளிக் கொட்டுறே?'' என்று அலறினுள்.

''ஏம்மா, கூச்சல் போடுறே? இப்படி யெல்லாம் இத்தனே நாள் நினேச்சுக்கிட்டு இருந்த என்னே அந்தச் சபேசன்தான் மனசை மாத்தி, 'பெத்த தாய்' என்கிற பாசத்தை எனக்குச் சொல்லாமல் சொல்லி வைச்சான்!'' என்று அடைத்த குரலில் கூறிய நச்சி, தன்னே மீறிய ஓர் ஆவேசத்துடன் மேலும் சொன்னுன்: ''யம்மோவ்! நீ எனக்கு அம்மாதான்— என்னே வளர்த்து ஆளாக்கிறதுக்காகப் படாத பாடெல்லாம் பட்டிருக்கிறே— இல்லேன்னு சொல்லலே! ஆனுல் என் புத்தி வளர, என் மனசு ஒழுங்குபட, நீ இன்னு பண்ணியிருக்கிறே?......''

''ஏண்டா? ஐஞ்சு வயசிலேயே உன்னேக் காப்பரேசன் பள்ளிக்கோடத் திலே கொண்டு போய் அட்மிஸன் பண்ணி வைச்சேண்டா! நீ திருட்டுக் கொட்டு: வாத்தியார் கண்ணிலே பொடிப் போட்டுட்டு விளாந்தோப் பிலே போய்க் கில்லி வெள்ளாடுவே! அதுக்கு நான் இன்னு பண்ணுவேன்?''

''அய்ய......, அதைத்தான் சொல் றேம்மா! பள்ளிக்கோடம் போறதுக்கு என் கையிலே பொஸ்தகம் சிலேட்டா கொடுத்தே? சோத்துத் தட்டைப் பையிலே போட்டுத் தோளிலே மாட்டி அனுப்புவே. நான் போய் அங்கே கிளாஸில் தட்டைத் திருப்பிப் போட்டு மோளம் அடிச்சுக்கிட்டு இருப்பேன். என் கவனமெல்லாம் சோத்து வண்டி மேலேயே இருக்கும். அது வருதான்னு சன்னல் வழியா எட்டி எட்டிப் பார்ப்பேன். நான் மட்டுமா? எல்லாப் பசங்களும் அப் படித்தான். வண்டி வந்ததோ, இல் லேயோ; குபால்னு ஒருத்தன் மேலே ஒருத்தன் விழுந்தடிச்சு ஓடுவோம். சோறு வாங்கறதிலே எப்பவும் நான் தான் ஃபர்ஸ்ட்! அப்புறம் வாத்தியாரு தூங்கப் போயிடுவாரு; டீச்சரம்மா என்னேக் கூப்பிட்டுத் தனக்குப் பேன் பார்க்கச் சொல்லுவாங்க. அதுக்குள் ளாற மணியும் அடிச்சுடும். இது தாம்மா நான் படிச்ச படிப்பு! இதிலே எனக்கு இன்னு புத்தி வந் துடும்? அதான் ஊர் சுத்தப் போயிட் டேன்! அப்படிச் சுத்திக்கிட்டுக் கிடந்த என்னே அந்தப் பையன்தாம்மா மனுஷ னுக்கினுன். அவன் எனக்கு வாயாலே ஒண்ணும் புத்தி போதிக்கலே. அவ னேட நடத்தை, பேச்சு, குணம், லட்சியம் எல்லாமே ஒரு நல்ல பள்ளிக்கூடம் போல, ஓர் உசந்த காலேஜ் மாதிரி இருந்துச்சு. அதனுலே தான் அவன் பின்னுடி சுத்தி அதை யெல்லாம் நான் கொஞ்சங் கொஞ்சமாப் படிச்சுக்கிட்டு வந்தேன். முழுசாப் படிக்கிறதுக்குள்ளாற அவன் என்னே விட்டுட்டுப் போயிட்டான். அதுக்குத் தான் இப்ப கவலேப்பட்டுக்கிட்டு இருக் கிறேன்......'' என்று கம்மிய குரலில் கூறிய நச்சி, அதற்குமேல் பேச முடி யாதவன்போல் அப்படியே சுருண்டு படுத்துக்கொண்டான். (தொடரும்)



தன்னிகரில்லாச் சிறப்பு! கண்ணைப் பறிக்கும் வெளுப்பு! துப்புரவான தூய்மை! எல்லாம் ஸர்ப் செயல், எல்லைமீறிய வல்லமை, கரைகடந்த நுரைவளம், சலவையே வெகு எளிது. ஆம், சிறுவர் உடை முதல், சட்டை,, சேலைவரை எல்லாத் துணிகளையும் கைப்பட வீட்டிலேயே சலவை செய்துகொள்ளச் சாலச் சிறந்தது ஸர்ப்!

ஸர்ப் சலவை: வெள்ளைவெளேர் சலவை

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

SU: 45-140 TM



''என்னங்க, பலாப்பழம் கனிவாக இருக்கா, சடையாக இருக்கா?''
''உங்கப்பா கொண்டு வந்த பலாப்பழம் அவரைப் போலவே இருக்கு!''

வீடு விற்பனைக்கு!



சித்திரக் களஞ்சியம்

★ ''என்னய்யாது, பச்சை மிளகாயைத் தூக்கிக் கொண்டு வந்து கொடுக்கிறீரே, என்ன விஷயம்?''

★ ''என்மேலே தப்பு இல்லீங்க. இதுக்கு முன்னாடி ஒரு வக்கீல் ஐயாவுக்கு வெண்டைக்காயும் வாழைப்பழமும் கொண்டு போய்க் கொடுத்தேனுங்க. அவரு என்னடான்னா வள வளா, கொள கொளான்னு பேசி கேசைத் தோத்துப்புட்டாருங்க. நீங்களாவது காரமாப் பேசணும்தான்....''







எதிரிகளைக் குழப்பும் இரட்டையர்கள்

நாரம்பர்க் (டாட்) ''அல்டாரு-93'' என்ற நாரம்பர்க் கால்பந்தாட்ட அணியின் விளையாட்டு வீரர்கள், மைதானத்தில் இறங்கி விட்டால், எதிர் அணி விளையாட்டுக்காரர்களுக்கும் நடு நிலையாளருக்கும் ஒரே குழப்பம்; ஒரே மருட்சி. இதற்குக் காரணம், அந்த அணியில் ஒரே உருவ அமைப்புக் கொண்ட இரட்டையர்கள் இருப்பதே! எதிரிகளிடையே ஏற்படும் குழப்பத்தைப் பயன் படுத்திக் கொண்டு, இரட்டையர்கள் அணி வெற்றி வாகை சூடி வருகிறார்கள். இந்தச் செய்தி வெளியானதும், ஏராளமான இரட்டையர்கள், இக்குழுவில் சேர முன்வந்தனர். இப்போது மற்றொரு இரட்டையர் அணியும் உருவாகி வருகிறது. இரட்டையர்களில் ஒருவரை 'கோல்கீப்பராக'ப் போடமுடியாத காரணத்தால், ஒரே பிரசவத்தில் பிறந்த மூன்று சகோதரர்கள் இந்த அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.




''சார்! என்னுடன் துப்பறியும் நாயை அனுப்புகிறீர்களா?''

''எதற்கு?''

''டைரி எழுத வச்சிருந்த பென்சிலைக் காணோம்!''



''ஓ! சாமி! நீ கூலி கொடுக்க வேண்டாம். பெட்டிக்குள்ளேயும், ஹோல்டாலுக்குள்ளேயும் இருக்கிற அரிசியிலே நாலுபடி எடுத்துக் கொடுத்திடு. இல்லே; போலீஸ்லே கொடுத்திடுவேன் சாமான்களை!''




தரத்திற்குத்
தாயன்பே
உரைகல்...
தரமறிந்த தாயன்பின்
தங்கமான தேர்வு: டால்டா
அரவணைத்து வளர்க்கும் அருள்வடிவே ... அகமகிழ வைக்கும் ஆரமுதே... அவள் படைக்கும் ஒவ்வொரு உணவும்... உரைக்குதம்மா எல்லையில்லா அன்பின் சுவை... நல்லநல்ல பண்டங்களின் நயம்... டால்டா வனஸ்பதியின் திறம். ஆம். வளரும் கண்மணிகளுக்கு ஊட்டமளிக்கும், வைட்டமின்கள் செறிந்த டால்டா... என்றுமே புதுமை மாறாத தூய்மையோடு, ஸீலிட்ட டப்பாக்களில் மட்டுமே கிட்டும் டால்டா... எல்லா உணவுகளுக்கும் சொல்லொணாத சுவையூட்டும் டால்டா.
டால்டா வனஸ்பதி: தூய்மையான தனிப்பெரும் சமையல் சாதனம்.
DALDA

சேர்வராயன் அளிக்கும் செல்வம்!



காவேரி அணைக்கும், மின்சார உற்பத்திக்கும் புகழ்பெற்ற மேட்டூர் கடந்த இரண்டாம் தேதி வெள்ளியன்று திருவிழாக் கோலம் பூண்டிருந்தது. அலங்கார வாயில்களும் தோரணங்களும் வீதியை நிரப்பின. சுற்றுப்புற வட்டாரத்திலிருந்தும், தொலைதூரத்திலிருந்தும் திரளான மக்கள் குழுமியிருந்தனர். ''மதராஸ் அலுமினியத் தொழிற்சாலைத் திறப்புவிழா,'' ''மால்கோ தொடக்க விழா,'' என்ற தோரணங்கள் எங்கும் பளிச்சிட்டன. சென்னையிலிருந்து 'மால்கோ ஸ்பெஷல்' என்று ஒரு தனி ரயிலே இவ்விழாவுக்காகப் பல பிரமுகர்களையும் கம்பெனிப் பங்குதாரர்களையும், பத்திரிகையாளர்களையும் அழைத்துச் சென்றது. மேட்டூருக்கே இது ஒரு நன்னாள். இந்திய ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் அன்று மதராஸ் அலுமினியத் தொழிற்சாலை உற்பத்தியைச் சம்பிரதாய முறையில் வேத கோஷங்களுடனும் மங்கள இசையுடனும் தொடங்கி வைத்து ஆசி கூறினர்.!

தமிழகத்தின் சிறப்புச் சின்னமான ஆலயக் கோபுரத்தையே நுழை வாயிலாக அமைத்திருந்தனர் இக் கம்பெனியார். வாயிலின் இருபுறத்திலும் சிற்பக் கலைச் செல்வங்களின் ஓவியங்கள் கண்கவர் வண்ணங்களுடன் அழகாகத் தீட்டப்பட்டிருந்தன. விஸ்தாரமான அலங்காரப் பந்தலில் நுழைந்ததும் மேடையின்மீது தொடக்க விழாவுக்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பெட்டி வடிவத்தில் அமைந்த ஒரு சாதனத்தின் ஒரு மூலையில் பொருத்தப்பட்டிருந்த பெய்குழியில் இரண்டு ஸ்பூன் ''பாக்ஸைட்'' தூள்களை ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் போட்டவுடன் மணியோசை கேட்டது. உடனே வேத கோஷம் ஒரு நிமிடத்துக்குத் தொடர்ந்தது. பக்கத்தில் அமைக்கப்பட்டிருந்த விமானத்தில் வெளித்திரை அகன்றது. தொழிற்சாலையின் தோற்றம் செதுக்கப்பட்ட பலகையில் வர்ண விளக்குகள் பளிச்சிட்டன. இமே வைக்கப்பட்டிருந்த சரஸ்வதி தேவியின் பிம்பத்தின் முன் தேங்காய் உடைந்தது; கற்பூரமும் எரிந்தது. எல்லாம் ஒன்றரை நிமிஷ நேரத்துக்குள் மின்சாரத்தினால் தானாகவே நிகழ்ந்தன. முடிவை அறிவிக்க மற்றொரு மங்கள மணியோசை. பெட்டியின் மறு பக்கத்திலிருந்து ஜனாதிபதியின் கையில் ஓர் அலுமினியக் கட்டி — சற்று முன் போட்ட பாக்ஸைட் தூள்கள் படிப்படியாக உருமாறி அலுமினியமாகி விழுந்தது!

மேஜை மீது மிகவும் எளிமையாகத் தோற்றுவிக்கப்பட்ட அலுமினிய உற்பத்தி முறைதான் சுமார் 600 ஏக்கர் நிலப் பரப்பில் 14 கோடி ரூபாய் முதலீடு செய்து, நான்





காண்டுகளாகப் பல என்ஜினீயர்களின் தளரா முயற்சியினாலும் ஊக்கத்தினாலும் எழுப்பப் பட்ட எல்லா நவீன வசதிகளுடனும் அமைந்துள்ள தொழிற்சாலையில் நடைபெறுகிறது. இவ்வளவு பெரிய அளவில் செயலாற்றும் தொழிற்சாலை தமிழகத்திலே மற்றொன்று இல்லை. இதனால் தமிழகத்துக்குத் தனிப் பெருமை. அலுமினிய உற்பத்தியில் தமிழகத்துக்கும் சிறப்பு இடம் உண்டு என்பதை நாட்டுக்கு அறிவிக்கும் தொழிற்சாலை இது.

அலுமினிய உற்பத்திக்குத் தேவைப்படும் மூலப்பொருள் ''பாக்ஸைட்''. சேலம் மாவட்டத்தில் உள்ள சேர்வராயன் மலையில் இது ஏராளமாகக் கிடைக்கிறது. பல ஆண்டுகளுக்கு முன்பு இதைப் பற்றிய விவரம் தெரிந்திருந்தும் அலுமினிய உற்பத்திக்கான முயற்சி எடுக்கப்படவில்லை. உற்பத்திமுறை சிக்கலானது. மின்சார விநியோகம் ஏராளமாகத் தேவைப்படுகிறது. மூலதனமும் பெருமளவில் வேண்டும். இவற்றைச் சமாளிக்க யாருக்கும் தைரியமில்லை. பத்தாண்டுகளுக்கு முன்புதான் இத்தத்துறையில் அதிக கவனம் செலுத்தப்பட்டுச் சென்னை அரசாங்கம் அளித்த உறுதிமொழி, உற்சாகங்களாலும், இத்தாலிய நாட்டுப் பிரபல மான்டிகாடினி ஸ்தாபனத்தின் கூட்டுறவினாலும், உற்பத்தித் துறையில் ஈடுபடலாம் என்ற நம்பிக்கை உதித்தது. இதன் விளைவாகத் தோன்றியது மதராஸ் அலுமினியக் கம்பெனி. 1961ம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இதற்குக் காரணமாக இருப்பவர்களில் பிரபல கோவைத் தொழிலதிபர் திரு ஆர். வேங்கடசாமி நாயுடுவை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும்.

''பாக்ஸைட்'' கனிப் பொருளை அலுமினியமாக மாற்றும் தொழில் மூன்று கட்டங்களில் நிகழ்கிறது. சேர்வராயன் மலை உச்சியில் ஆறு குன்றுகளில் வெட்டி எடுக்கப்படும் பாக்ஸைட் கனிப் பொருளை ஸ்தலத்திலேயே பரிசோதித்துத் தரம் பிரித்து லாரிகள் மூலம் மேட்டூர் தொழிற்சாலைக்கு அனுப்பிவைப்பது முதல் வேலை. நாள் ஒன்றுக்குச் சுமார் இருநூறு டன் மூலப்பொருள் இவ்வாறு கொண்டு சேர்க்கப்படுகிறது. இங்குள்ள கனிப்பொருள் சுமார் நாற்பது ஆண்டுகளுக்குத் தொழிற்சாலை இயங்க உதவுமாம்.

தொழிற்சாலையில் முதல் கட்டத்தில் இவையனைத்தும் ராக்ஷஸ யந்திரங்களால் தூளாக்கிச் சலிக்கப்படுகின்றன. சலித்த சன்னத் தூள்கள் காஸ்டிக் சோடா என்னும் சோடா காரத்துடன் கலக்கப்பட்டு அலுமினியமல்லாத இதர அசுத்தங்கள் அகற்றப்படுகின்றன. அசுத்தங்களைப் போக்கி, அதற்காகக் கலந்த சோடாக் காரத்தையும் அகற்றிப் பிரிக்கும்போது அலுமினா என்ற பொருள் கிடைக்கிறது. இது இரண்டாவது கட்ட நிகழ்ச்சி. அலுமினியத்துக்கு முந்திய நிலை அலுமினா. இதுவும் திரவ வடிவத்திலேயே வைக்கப்படுகிறது.

அலுமினாவை அலுமினியமாக மாற்றுவது அடுத்த கட்டம். மின்சாரத்தின் உதவியால் ''எலக்ட்ராலிடிக் பாட்ஸ்'' என்ற உலையில் இது நிகழ்கிறது. ஒவ்வோர் உலையிலும் இரு பகுதிகள் உண்டு. ஒரு பகுதியில் பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்ட ரசாயனக் கலவை பூசப்பட்ட மின்சாரக் கம்பிகள் இருக்கின்றன. மற்றொரு பகுதியில் அலுமினா திரவம் பாய்ச்சப்படும். மின்சார இயக்கத்தாலும் ரசாயனப் பூச்சின் சம்பந்தத்தாலும் அலுமினா அலுமினியமாகத் திரவ வடிவத்தில் தனித்துத் தங்கி விடும். இதைக் குளிர்வித்துக் கட்டிகளாக செய்து அலுமினியக் கட்டிகள் தயாரிக்கிறார்கள். இவ்விதம் தயாராகும் அலுமினியம் தரத்தில் 99.5 சத அளவுக்குச் சுத்தமாக இருக்கிறது என்று இத்தாலிய நிபுணர்கள் கூறுகின்றனர். எந்த அளவுக் கலவையாக வேண்டுமானாலும் செய்துகொள்ள இங்கே வசதி உண்டு. ஆண்டுக்கு 10.000 டன் அலுமினியக் கட்டிகள் இங்கே உற்பத்தியாகும். உற்பத்தி அளவை 20,000 டன்னுக்கு உயர்த்த இக் கம்பெனிக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.

சென்னை மாநிலத் தொழில் வளர்ச்சியில் மால்கோ — மதராஸ் அலுமினியக் கம்பெனியின் சுருக்குப் பெயர் — கணிசமான பங்கு பெற அதன் வருங்காலம் வளமுள்ளதாக ஆகுக! —எம். எஸ். சிவஸ்வாமி

விடை :

மத்திய சர்க்கார் மந்திரிகளது இல்லங்களில் அரசினரால் பொருத்தப்பட்டிருக்கும் உபகரணங்களின் (மேசை, நாற்காலி, சோபா குளிர் சாதனங்கள், மின் சாதனங்கள் இவைகளின்) ரூபாய் மதிப்புத்தான் அந்த எண்கள்.

மகிஷேசுவரி

ஆமிலன்



''மற்ற ஒரு வரிசையில் நின்று வாங்கும் சாமான்களுக்கும், இங்கே வாங்கும் சாமான்களுக்கும் வித்தியாசம் உண்டு. இங்கே வாங்கப் போவதை நாம் தின்றுதான் உயிர் வாழ வேண்டுமென்பதில்லை'' என்றாள் மாதங்கி.

''ஆமாம், ஆமாம். ஆனால் சிலர் அதன் ஓரத்தில் தடவியிருக்கும் கோந்தை நாக்கால் நக்கி ருசி பார்க்கிறார்கள், கடிதத்தை ஒட்டும் போது'' என்றான் வசந்தன்.

அவர்கள் இருவரும் பத்து பைசா 'உள்நாட்டுத் தபால்' காகிதங்கள் வாங்குவதற்காகப் பெரிய தபாலாபீசுக்கு வந்திருந்தார்கள். ஒரு வரிசை மிகவும் நீளமாயிருந்ததால் அவர்கள் ஓர் ஒதுக்குப்புறமாய்ச் சென்று பேசிக்கொண்டிருந்தனர்.

''அன்று ஏதோ மகிஷேசுவரி பற்றிக் கதை ஆரம்பித்தீர்களே!'' என்றாள் மாதங்கி.

''ஆமாம், அதைச் சொல்லாமல் யார் விடப் போகிறார்கள்? அந்தக் கதைதானே இன்றையக் கியூவில் நிற்கிறது?'' என்று தொடங்கினான் வசந்தன்: ''தர்மராஜனின் மனைவி தர்மாம்பாளுக்குக் காப்பி என்றால் பிராணன். அது சாதாரணமாயிருந்தால் போதாது. கள்ளிச் சொட்டு மாதிரி இருக்க வேண்டும். நல்ல பால் வாங்குவதற்காக அவன் பால்காரர்களுக்கு நிறைய முன் பணம் கொடுத்து வீட்டில் கண்ணெதிரில் கறக்கச் சொல்லிப் பார்த்தான். அப்படியும் பால் தண்ணீராக இருந்தது. அரசாங்கப் பால் பண்ணையிலிருந்து வாங்கிப் பார்த்தால் நாளடைவில் அதுவும் சரியாகக் கிடைக்கவில்லை. கிடைத்ததும் தண்ணீர்ப் பால்.

கிராமத்திலிருந்த தர்மாம்பாளின் தாய்க்குத் தன் பெண் பாலுக்காகப் படும் கஷ்டம் தெரிய வந்தது. அவள் ஒரு நல்ல எருமை மாடாக வாங்கி அனுப்பினாள். தர்மாம்பாளுக்கு நல்ல பால் கவலை தீர்ந்தது. ஆனால், மாட்டைக் கவனிக்க வேண்டிய பொறுப்பும் சிரமமும் ஏற்பட்டன. அது நல்ல எருமை. கன்றில்லாததை மறந்து பால் கறக்கும் போதும் தகராறு செய்யாதிருந்தது.

மாடு வந்ததிலிருந்து அவளுக்கு அதைக் கவனிப்பதற்கே சரியாக இருந்தது. அதற்கு உழைத்து உழைத்து அவள் உடம்பு மங்களூர் ஓடாகப் போய்விட்டது. ஒரு நாள் அவள் தன் கணவன் மீது சீறி விழுந்தாள். ''எங்க அம்மா ஆசையாக எனக்கு ஒரு மாடு அனுப்பியிருக்கிறாளே, அதைக் கவனித்துக் கொண்டால் என்னவாம்? ஊரிலே எங்கப்பாதானே மாடுகளையெல்லாம் கவனித்துக் கொள்கிறார். நீங்கள் பார்த்துக் கொள்கிறதென்றால் மாடு இருக்கட்டும். இல்லாவிட்டால் ஒன்று அதை ஊருக்கு அனுப்பிவிடுகிறேன்; அல்லது விற்றுவிடுகிறேன்'' என்றாள்.

தர்மராஜனுக்கும் காப்பி என்றால் உயிர். தவிர, பால் டெப்போவுக்குப் பால் வாங்கப் போவதைப் பற்றி நினைத்தால் நடுக்கம்.

அவர் பதில் சொல்லாமலிருந்ததைக் கவனித்த தர்மாம்பாள் நேரே புறக்கடைப் பக்கம் சென்றாள். மறு கணம் பொத்து. பொத்தென்று கழியால் அடிக்கும் சத்தம் தர்மராஜனுக்குக் கேட்டது. தம்மை அடிப்பதற்குப் பதிலாகத் தம் தர்மபத்தினி மாட்டை அடிக்கிறாள் என்று அவர் ஊகித்தார். அவரும் புறக்கடைக்குப் போனார்.

''உன்னைத் தொலைத்துத் தலையை முழுகி விடுகிறேன்'' என்று அவள் எருமை மாட்டைப் பார்த்துச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

அடிபட்டுக் கொண்டும் வசவைக் கேட்டுக் கொண்டுமிருந்த எருமை மாடு தன் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டிருந்தது. தர்மராஜனைக் கண்டதும் தலை நிமிர்ந்தது. அதன் கண்களின் ஓரத்தில் கண்ணீர்த் துளிகள் அரும்பியிருந்தன. தர்மராஜன் அதன் பக்கத்தில் போய் நின்றதும், அது சற்று நகர்ந்து வந்து தன் உடலை அவர் மீது தேய்த்துத் தன் சந்தோஷத்தையும் அன்பையும் தெரிவித்துக் கொண்டது. தர்மராஜனுக்கு அது பிடித்துப் போய்விட்டது.

அவர் ஒரு காரியத்தில் ஈடுபட்டால் அதை நூற்றுக்கு நூறு நன்றாகச் செய்யும் வழக்கமுள்ளவர். புதிதாக மாட்டுக் கொட்டில் ஒன்று கட்டினார். அதில் உள்ள கவன் தேக்கு மரச் சட்டங்களாலானது. கீழே நல்ல சிமெண்ட் தரை. ஜலம் முதலியவை கீழே வழிந்து ஓடும்படி தளத்தின் மேல் மட்டத்தை அமைத்திருந்தார்.

எள்ளுப் பிண்ணாக்கு, கடலைப் பிண்ணாக்கு, தானியப் பொட்டுகள் முதலியன மூட்டை மூட்டையாய் வாங்கிப் போட்டார்.

காலையில் நான்கு மணிக்கே எழுந்துபோய் மாட்டைக் கவனிக்க ஆரம்பித்து விடுவார். இரவு படுத்துக்கொள்ளப் போகும் வரை கொட்டிலில்தான் அவருக்கு வேலை. அதன் பலனாக, ''தர்மராஜன் இருக்கிறாரா?'' என்று யாராவது கேட்டுக் கொண்டு வந்தால், ''இருங்கள், மாட்டுக் கொட்டிலில் போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன்'' என்று தர்மாம்


பான் பதில் அளிப்பதும் சகஜமாகி விட்டது.

தர்மராஜன் மகிஷேசுவரிக்கு அடிமையாகிக் கொண்டு வந்தார். அது 'அம்மா' என்று கத்துவதற்கு முன் மாட்டுக் கொட்டியில் போய் நிற்கலானார்.

மாடுகள் சங்கீதத்தை ரசிக்கின்றன என்றும் பாட்டுக்குத் தகுந்தாற் போல் பால் கறக்கின்றனவென்றும் கேள்விப் பட்டார். ஒரு கிராம

போன் பெட்டியும், ஏராளமான இசைத் தட்டுகளும் வாங்கி வந்தார்.

இதை யெல்லாம் பார்த்த தர்மாம்பாள் பொறுமையை இழந்தாள். அவள் தன் கணவன் மகிஷேசுவரி விஷயத்தில் அளவுக்கு மீறிய சிரத்தை காண்பிப்பதைக்கண்டு பொறுமைப்படலானாள்.



ஒரு நாள்.

மாட்டுக் கொட்டியில் இருந்த அவர் எதிரில் போய் நின்று கொண்டு. ''உங்களுக்கு நான் வேண்டுமா? இந்த மாடு வேண்டுமா? இரண்டில் ஒன்று பதில் சொல்லுங்கள்!'' என்றாள்.

தர்மராஜன் இதைக் கேட்டுத் திகைத்துப் போய்ப் பதில் சொல்ல முடியாமல் நின்றார்.

''நீங்கள் இனிமேல் புருஷனாய், லட்சணமாய் உங்கள் காரியத்தைக் கவனிக்கப் போகிறீர்களா? இந்த எருமை மாட்டைக் கட்டிக் கொண்டு அழப் போகிறீர்களா?'' என்றாள்.

''அப்படியென்றால் நான் படித்துக்கொண்டும், சிநேகிதர்களுடன் பேசிக்கொண்டும் பொழுது போக்கலாமென்று சொல்!''

''என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள். இதை யார் தலையிலாவது கட்டுங்கள்'' என்றாள் தர்மாம்பாள் கடுமையான குரலில்.

மாடு கை மாறியது, அது நிறையக் கறப்பதற்கு என்ன பிரத்தியேகமான தீனி வைக்க வேண்டும் என்ற ரகசியத்தோடு. இப்போது மாதவரம் பண்ணையில் ஏராளமாகப் பால் கொடுத்து வரும் மாடு மகிஷேசுவரி ஒன்று தான்'' என்று வசந்தன் கதையை முடித்தான்.

''ஆமாம்! அது நிறையப் பால் கொடுப்பதற்குக் காரணம்?'' — மாதங்கி கேட்டாள்.

''அதான், ஸ்கிம் மில்க், அதான் பால் பௌடர் என்று இருக்கிறதே அதைக் கழு நீருடன் நிறையச் சேர்த்துக் கொடுப்பதாக இருக்கலாம்'' என்றான் வசந்தன்.


''அதான் மாதவரம் பண்ணையிலிருந்து இப்போது 'டோண்ட் மில்க்' என்ற பவுடர் பாலாகவே கொடுக்கிறார்கள் போலிருக்கிறது'' என்றாள் மாதங்கி.

''வெறுமனே இந்த ரீடு வரிசைக் கதை சொல்லிச் சொல்லி அலுத்து விட்டது. ஒரு மாறுதலுக்கு ஏதாவது பேசலாம் யாரைப் பற்றியாவது வம்பளக்கலாமா?' என்று சிரித்துக் கொண்டே கேட்டாள் மாதங்கி.

''ஓ!'' என்றான் வசந்தன்.

''ஒரு பெண்ணைப் பற்றிச் சொல்கிறேன், அவளுக்கு வயது சுமார் இருபத்தி மூன்று இருபத்து நான்கு இருக்கும். இதுவரை இரண்டு மூன்று பாடங்களில் எம். ஏ. டிகிரி பெற்றிருக்கிறாள். ஏதோ ஓர் அலுவலகத்தில் பேருக்கு வேலை பார்த்து வருகிறாள். அவளுக்கு வேலை பார்க்க வேண்டிய அவசியமில்லை. சொந்த பங்களா இருக்கிறது. தகப்பனார்

B·I



S. S. ரஜுலா

சென்னையிலிருந்து

1965 ஆகஸ்டு 7 **1965 ஆகஸ்டு 29**

சென்னையிலிருந்து பினாங்கு மற்றும் சிங்கப்பூருக்கு பிரயாணம் செய்ய விரும்பும் பிரயாணிகள் தயவுசெய்து கீழ்க்கண்ட விலாசதாரருக்கு விண்ணப்பிக்கவும்.

மெஸர்ஸ் பின்னி & கோ., லிமிடெட்

7, அரமனைக்காரத் தெரு, சென்னை 1

அல்லது கீழ்க்கண்ட கம்பெனியின் அங்கீகாரம்
பெற்ற பாஸேஜ் புரோக்கர்களுக்கு விண்ணப்பிக்கவும்

C. M. குட்டி
புரொப்ரைட்டர்: குட்டி டிராவல் சர்வீஸ்
38, அங்கப்ப நாயக்கன் தெரு
சென்னை - 1

மெஸர்ஸ் கோனா டிராவல்ஸ்
மாஸ்காட் ஹோட்டல்
திருவனந்தபுரம்

நாகப்பட்டினத்திலிருந்து

1965 ஆகஸ்டு 8 **1965 ஆகஸ்டு 30**

நாகப்பட்டினத்திலிருந்து பினாங்கு மற்றும்' சிங்கப்பூருக்குப் பிரயாணம் செய்ய விரும்பும் பிரயாணிகள் தங்களது பிரயாண டிக்கட்டுகளை கீழ்க்கண்ட விலாசத்தில் நேரிடையாகப் பெற்றுக் கொள்ளலாம்

மெஸர்ஸ். மதுரா கம்பெனி பிரைவேட் லிமிடெட்

முதல் லேன் பீச் ரோடு, நாகப்பட்டினம்

பினாங்கு, போர்ட் ஸ்வெட்டன்ஹாம், சிங்கப்பூர் முதலிய இடங்களுக்கு நேரடியாக ஏற்றிச் செல்லவும், சிங்கப்பூரில் கப்பல் மாற்றி ஆஸ்திரேலியா நியூஜிலாந்து துறைமுகங்களுக்கு அனுப்பவும் சரக்குகள் சென்னையிலிருந்தும் நாகப்பட்டினத்திலிருந்தும் ஏற்றுக் கொள்ளப்படும்.

பிரயாணிகள் மற்றும் சாமான்கள் ஏற்றும் விவரங்களுக்குத் தயவுசெய்து எழுதவும்:

பின்னி & கம்பெனி லிமிடெட்
7, அரமனைக்காரத் தெரு, சென்னை -1

மதுரா கம்பெனி பிரைவேட் லிட்.
முதல் லேன் பீச் ரோடு, நாகப்பட்டினம்

ஏஜெண்டுகள் : பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி லிமிடெட்

அனுபவ முத்துக்கள்

★ மற்றவர்களின் உள்நோக்கத்தைப் புரிந்துகொள்ள முயல்வதைவிட உன்னுடைய நடத்தைக்குரிய அடிப்படையைத் தெரிந்து கொள்வது மேலானது.

★ சென்றதைப் பற்றி எண்ணாதே. வருங்காலத்தைப் பற்றி மனக்கோட்டை கட்டாதே. வீணான சிந்தனைகளால் கடந்தது மீண்டும் வரப் போவதில்லை. கனவுகள் நனவாகப் போவதுமில்லை. கடமையைச் செய். உடனே பலனைப் பெறுவாய். இதைவிடப் பெரிய விதி எதுவும் இல்லை.

★ ஒட்டுக் கேட்காதே. நேர்ப்படச் சென்று கேள். அல்லது அவ்விடத்தை விட்டுச் சென்று விடு. — டாக் ஹாமர்ஷீல்ட்



சிதாபதி பணக்காரர். அவள் அப்பா அம்மாவுக்கு அவள் ஒரே பெண். அதனால் அவளைத் தன்னிஷ்டம்போல் எதுவும் செய்ய விட்டிருக்கிறார்கள்.

"அந்தப் பெண் நுங்கம்பாக்கம் வாய்க்கால்கரைத் தெரு எண்பத்தெட்டாம் நம்பர் வீட்டிலிருக்கிறாள். அவள் பெற்றோர்கள் அவள் இஷ்டப்பட்ட பிள்ளையை அவளுக்குக் கல்யாணம் செய்து வைக்கத் தயாராக இருக்கிறார்கள். அந்தப் பெண்ணோ எல்லாப் பையன்களையும் அயோக்கியர்கள், பெண்களுடன் மரியாதையுடனும், வெறும் சிநேகித முறையிலும் மூன்று நான்கு மாத காலம் சேர்ந்தாற்போல் அவர்களால் பழகி வர முடியாது என்று எண்ணுபவள்."

"அந்தப் பெண் பார்ப்பதற்கு எப்படி இருப்பாள்?" என்று கேட்டான் வசந்தன்.

"அழகு என்று சொல்வதற்கில்லை. கிட்டத்தட்ட என் மாதிரி இருப்பாள் என்று வைத்துக் கொள்ளுங்களேன்!" என்றாள் மாதங்கி.

"அப்படியானாலும் அந்தப் பெண்ணைப் பற்றிய வம்பு ருசிகரமாக இராது. நான் எனக்குத் தெரிந்த ஓர் ஆசாமியைப் பற்றிச் சொல்கிறேன். அவனுக்கு வயது இருபத்தெட்டு, இருபத்தொன்பது இருக்கும். அவன் ஒரு பாடத்தில்தான் டிகிரி வாங்கியிருக்கிறான். அவன் ஏதோ ஒரு கம்பெனியில் வேலை பார்க்கிறான். சுமாரான பணக்காரன். அவனுக்கு அம்மா மட்டும்தான் இருக்கிறாள். அவன் அம்மா அவனுக்குக் கல்யாணம் செய்து வைக்கத் துடித்துக்கொண்டிருக்கிறாள். ஆனால் அவன் கல்யாணம் செய்துகொள்வதற்கு அவன் பல கடுமையான நிபந்தனைகள் விதிக்கிறான். பெண்ணைத் தான் பார்க்க மாட்டானாம். பிள்ளையாகப் பார்த்து எந்தப் பெண்ணைப் பிடிக்கிறதென்று சொல்கிறாளோ, அவளைத்தான் கல்யாணம் செய்து வைப்பானாம். கல்யாணம் ஆன பிறகு அவன் காசிக்கோ, ரிஷிகேசத்துக்கோ சென்று விடுவானாம். இதோடு இருந்தால் பாதகமில்லையே. ஜாதகம் பார்க்க மாட்டேன், எதிர் ஜாமீன் என்று ஒரு பைசா வாங்க மாட்டேன் என்கிறான். பெண்ணைப் பெற்றவர்கள் இந்த இரண்டு விஷயத்திலும் விட்டுக் கொடுக்கத் தயாராயில்லை. அப்படிச் செய்து விட்டு அவமானப்படுவதா? ரௌரவாதி நரகத்தில் விழுவதா என்கிறார்கள்."

"அந்தப் பிள்ளை பார்ப்பதற்கு எப்படி இருப்பான்?" என்று மாதங்கி கேட்டாள்.

"விகாரமில்லை. கிட்டத்தட்ட என் மாதிரி இருப்பானென்று வைத்துக் கொள்ளுங்கள்!"

"ஓ!" என்றாள் மாதங்கி.

"அந்தப் பையனின் தாயார் எங்கே இருக்கிறாள்?"

"அவளா? நந்தவனம் காலனி பதினைந்தாவது குறுக்குத் தெரு. ஆறாவது நம்பர் வீட்டில் இருக்கிறாள்" என்று வசந்தன் தெரிவித்தான். பிறகு, "தாங்கள் அந்த இரண்டு டிகிரி வாங்கின பெண்ணின் பெயரைச் சொல்லவில்லையே!" என்று கேட்டான்.

"வந்து.... ஞாபகமில்லை."

"நான் சொல்கிறேன். மிஸ். மாதங்கி!" என்றான் வசந்தன்.

"அப்படியானாலும் நீங்கள் சொன்ன பிள்ளையின் பெயர் மிஸ்டர் வசந்தன்தானே!" என்றாள் மாதங்கி.

இருவரும் சிரித்தார்கள். "அது இருக்கட்டும் நீங்கள் கதை சொல்ல வேண்டிய முறையாயிற்றே. ஒன்று ஆரம்பியுங்கள்!" என்றான் வசந்தன்.

"ஊஹூம்! எனக்கு வெட்கம் பிடுங்கித் தின்கிறது."

"ஏன்? கதை கல்யாணத்தில் முடிந்துவிட்டதே என்பதற்காகவா?" என்றான் வசந்தன்.

மாதங்கி நாணிக் கோணிக் கொண்டு கதையைச் சொல்லத் தொடங்கினாள்.


"நெய்வேலி, நெய்வேலி என்று ஓர் ஊர் இருக்கிறது. அதற்கும் வெண்ணெய் காய்ச்சிய நெய்க்கும், 'ஆக்' மார்க் நெய்க்கும், ஆந்திரா 'போலி' விற்கும் நெய்க்கும் சிறிதும் சம்பந்தமில்லை. அந்த ஊருக்கும் வேலிக்கும் கூடச் சம்பந்தம் கிடையாது. அது ஒரு காலத்தில் பெரிய வனமாயிருந்தது. அதில் துர்வாச மகரிஷியின் பெரியம்மா பிள்ளை..."

இதற்குள் பஸ் வரவே, மாதங்கி "என் பஸ் வருகிறது. நான் போகிறேன், நந்தவனம் காலனியில் உள்ள அந்தப் பைத்தியக்காரத் தெய்வத்தை வந்து பார்த்து நமஸ்காரம் செய்து வர வேண்டும்!" என்று சிரித்துக் கொண்டே கூறிய வண்ணம் கிளம்பினாள்.



பம்பாய் அஸோஸியேடட் காட்டன் டிரேடர்ஸ் லிமிடெட்டைச் சார்ந்த ஸ்ரீ R. S. மணி அவர்களின் குமாரர் சிரஞ்சீவி ஜெயராமன் என்கிற ராமஸ்வாமி அவர்களுக்கும், பம்பாய் சாக்ஸன் பிரஸ்ஸைச் சார்ந்த ஸ்ரீ K. A. ராமன் அவர்களின் குமாரி சௌ. கலோசன என்கிற பாகீரதிக்கும் 5-7-65 அன்று பம்பாயில் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்!



இருட்டு விழுந்து விட்டது. சுந்தரி வீட்டுக்கு வெளியே வந்து பார்த்தாள். தெருக்கோடியில் கோபுர விளக்கு மினுக்கிற்று. நீலாவை இன்னும் காணோம். எதிர் வீட்டுக் கடிகாரம் ஏழு மணி அடித்தது.

ஒரு பெருமூச்சுடன் உள்ளே திரும்பினாள்.

தெருவில் போவோர் வருவோரின் கூட்டம் கதை கேட்க, கடையில் வாங்க, கோவிலுக்குப் போக, இப்படிப் பலவிதம். அவர்களுக்கு அதற்கெல்லாம் அவகாசம் இருந்தது; மன நிம்மதியும் இருந்தது. இரண்டும் இல்லை சுந்தரிக்கு. அவள் சில சமயங்களில் நினைப்பதுண்டு. ஏன் உணர்ச்சிகளின் அலைப்பே இல்லாத பிறவியாக நாம் பிறந்திருக்கக் கூடாதென்று.

"ஏன் இப்படி அலைபாய்கிறாய்? தன்னால் வருகிறாள்" என்றான் ராஜம்.

"மணி ஏழு ராஜம்!"

"ஆனால் என்ன? வேலைக்குப் போய் வருகிறதென்றால் சும்மாவா? இருட்டுவதற்குள் திரும்பிவிட வேண்டும் என்றுதான் நினைக்கிறோம். பஸ் கிடைக்க வேண்டும். காரியாலயத்தில் கடைசி நிமிஷம் வரை வேலை வந்து குவியாமல் இருக்க வேண்டும். வழியில் யாராவது தெரிந்தவர்கள் பிடித்துக் கொண்டு பேச ஆரம்பிக்காமல் இருக்க வேண்டும்."

"தெரிந்தவர்களா?"

"ஆமாம். அவளோடு படித்தவர் வேலை பார்க்கிறவர்கள், எத்தனை பேர் இல்லை?"

"அந்தச் சிநேகம் எல்லாம் தேவை இல்லை என்று நான் சொல்லி யிருக்கிறேன், ராஜம்!"

"நீ சொல்லி விட்டால் உன்னைப் போல் இருக்க முடியுமா?"

அவளைப் போல இருக்க முடியுமா? இருக்க வேண்டாம். நீலா வேறு விதமாகவே இருக்கட்டும். அவள் கஷ்டங்கள் தலைமுறையாக இறங்க வேண்டியதில்லை.

ராஜம் ஒரு பத்திரிகையைப் பிரித்துக் கொண்டு விளக்கடியில் உட்கார்ந்து விட்டான். சுந்தரி வாசலில் படியில் உட்கார்ந்து கொண்டாள்.

வீணை போல் போர்த்திய உறையை எடுத்ததும் தந்திகள் அசைந்து எழும் ஒலியைப் போல, அந்தப் பேச்சு மனத்தில் மீட்டிய நினைவுகள்.

உலகம் தெரியாத கிராமத்துப் பெண்ணாக வளர்ந்து கொண்டிருந்தவள் மனத்தில் துளித் துளியாக, படிப் படியாக, ஆனால் நிச்சயமாகக் கன்னிப் பெண்மையின் சாயல் விழத் தொடங்கிவிட்ட பருவம். வீட்டில் கண் தெரியாத அத்தையைத் தவிர வேறு யாருமில்லை. சொற்ப வரும்படியில் மானமாய் வாழப் போராடிக் கொண்டிருந்த நாட்கள். வீட்டுக் காரியம் அவ்வளவையும் சுந்தரியேதான் துடியாகச் செய்வாள். வெளியே இறங்கினால் அவளுடன் பார்வை வட்டங்கள், புன்னகை வளையங்கள், சுற்றி வரும். ஆனால் அவள் தலை நிமிரமாட்டாள்.

அப்படி இருந்தவள் கண்ணில்தான், புதிதாய் வந்த பட்டணத்துப் பையன் பட்டு விட்டான். ஒற்றை நாடித் தேகம். நெருப்புச் சிவப்பு. காற்றில் மிதப்பது போல நடை. மடிப்புக் கலையாத உடையில், அலை சுருளும் தலைமயிரில், அருவிக் குளிர்ச்சியாய்ச் சிரிப்பில், ஒரு லாகவம். ஒளி ஊடுருவும் கத்திப் பார்வை. முதல் தடவை அதை நிமிர்ந்து பார்த்த போது, மார்பில் ஏதோ செருகியது போல அவள் அதிர்ந்து போனாள்.

முதலில் விளையாட்டுக்காக; அப்புறம் அந்தந்த நேரங்களில்; பிறகு அந்தச் சமயத்து

நெஞ்சுப் படபடப்புக்காக; இப்படிச் சந்திப்புகள் நேர்ந்தன. புதுப் பழக்கம்; புது உணர்ச்சிகள்: இன்பத்தின் புதுமை; புதுமையின் இன்பம்.

ஒரு நாள் காலையில் அவளைக் காணோம்.

சுந்தரி தூக்கத்தில் நடப்பவளாகி விட்டாள். தென்னந் தோப்பைத் தாண்டி ஆற்றங்கரைக்குப் போவாள். தனியே அமர்ந்து தன்னையே குனிந்து பார்த்து மதிப்பிட்டுக் கொள்ள முயலுவாள். ஓடும் நீரில் சிந்தும் கண்ணீரைப் பார்த்தபடி நிலை அசையாது — எத்தனை நாழியோ?

அவள் ஓர் உதிரும் நட்சத்திரம். எட்டாத உயரத்தில் கம்பீரமாக மினுக்கியாயிற்று. இப்பொழுது நழுவிக் கீழே கீழே போய்க் கொண்டே இருக்கிறாள். மிஞ்சப் போவது கரித்துண்டு.

இன்று போல நினைவிருக்கிறது. விடியாத் தீயாரத்தில் அத்தை கண்ணை மூடி விட்டாள். ஊரில் இருக்க முடியாமல், வெளியே வந்தாகி விட்டது. அவளை ஏற்றுக் கொண்டு, அப்புறம் குழந்தையையும் காப்பாற்றி வளர்த்தவள் ராஜம்தான். அந்த நம்பிக்கை தவறவில்லை. பச்சை மண்ணாய்க் குழந்தையை மடியில் கிடத்திக் கொண்டு ராஜத்தின் முகத்தைப் பார்த்துத்தான் சொன்னது மறக்கவில்லை.

"இது உன் குழந்தை. நான் அவளை வளர்ப்பதோடு சரி. நீதான் அவள் தாய். என்றைக்கும் யாரிடமும் நீ என்னைப் பற்றிச் சொல்லி விடக் கூடாது."

அந்தச் சம்மதத்தின் பேரில்தான் சுந்தரி அந்த வீட்டில் நிலைத்தாள். ராஜத்துக்குக் குழந்தைகள் இல்லை. சிலை உயிர் பெற்றது போல உடலமைப்பு. எதற்கும் இளகும் கனிந்த மனம். ஆனால் வயிறு கல்லாகத்தான் இருந்தது. பத்து வருஷங்கள் தாம்பத்தியம் நடத்திய பிறகும்.

நினைத்துக் கொண்டு திடீர் திடீரென்று சுந்தரி ஒதுங்கி விடுவாள். இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை கதவை அடைத்துக் கொண்டு, சரிந்தாற் போல, தன்னை இழந்து சுருங்கி விடுவாள். சோறு, குளி, ஒன்றும் கிடையாது. அவளைக் கவ்விய மனச் சோர்வு விடும் வரை, ராஜம் அவள் வழிக்குப் போக மாட்டாள். இன்னும் முற்றிலும் அழியாத அழகின் சிற்றம், அவள் மேல் சாம்பலில் நெருப்பில் பொன் உருகி நெளிவது போல, தன் வேதனையின் தூய்மையில், தானே புடமிட்டுக் கொண்டு நிற்பாள் சுந்தரி.

அந்த அழகை, அதன் நிழலாய் வளர்ந்து வரும் நீலாவை, ஒருவரை யொருவர் அறியாமலே அவர்கள் இணையும் அன்பின்பிடிப்பை, உணரும் போது ராஜத்தின் மனத்தில் இலேசாய் ஒரு தாங்கல் படியும். ஆனால் மறுகணமே அதனின்று தன்னை விடுவித்துக்கொள்வாள். அப்போது இன்னும் ஒரு படி அதிகமாய் அவள் மனம் இளகும். நீலாவிடம் காட்டும் பரிவு கொஞ்சம் பூரித்து நிற்கும். ஆனால் அந்த அநுதாபமும், சற்றுப் பெருகிய பச்சாத்தாபமும் கூடச் சுந்தரிக்குக் கஷ்டமாகத்தான் இருக்கும். தன் நிலையைச் சுட்டிக் காட்டுவது போலத் தோன்றும் அந்தச் செயலின் மிகைப்பட்ட செயற்கை. இலேசான காற்று பட்டாலும் வேதனை வெம்பும் ஆற மறுக்கும் புண் அது.

நீலா வளர்ந்து வரும்போதே ராஜத்தின் கணவர் கண்ணை மூடி விட்டார். இரண்டு முதிர்ந்த பெண்களின் நடுவே தனியாய் வளரத் தொடங்கினாள் நீலா. அவர்கள் செய்கை ஒவ்வொன்றிலும் பேச்சு எதிலுமே ஓர் அளவு கடந்த எச்சரிக்கைதான் தொனிக்கும். அதன் பொருள் விளங்காது அவள் குழந்தை மனத்துக்கு.

இளம் பருவத்துக் கனவுகளின் நடுவே மலரும் பெண்மை. அதன் துடிப்பேறி நின்ற பார்வை. நடையின் மிடுக்கில், பேச்சின் துள்ளலில் காரியங்களின் அவசரத்தில், தன் முற்றுப் பெறாத வாழ்க்கையையே கண்டாள் ராஜம். மலரத் துடிக்கும் இளமையில் பயமறியாத சுபாவத்தில், தவறிப் போய்ச் சரிந்துவிட்ட தன் நிலையையே பார்த்தாள் சுந்தரி. செழுமையான மண்ணில் ஊன்றிக்கொள்ள முயலும் செடிக்கு, வெய்யிலாகவும் மழையாகவும் இருந்தன அவர்களின் கருத்துத் தோய்ந்த கவனிப்பு. சில சமயம் வேதனைப்பட்டு உட்கார்ந்து விடும்போது மழையின் தன்மையாய் ராஜத்தின் அன்பு அவள் மீது சொரியும்.

"அம்மா!, அத்தை ஏன் இப்படி இருக்கிறாள்? அவளால் ஏன் என்னைப் புரிந்து கொள்ள முடியவில்லை?" என்று கேட்பாள்.

"அப்படி ஒன்றும் இல்லையே!"

"நீ மறைக்க வேண்டாம். உன்னைப்போல் என்னை அவள் புரிந்து கொள்வதில்லை. இன்னும் அவளுடைய கர்நாடக மனப்பான்மை மாறவில்லை."

ராஜம் சட்டென்று அவள் வாயை அழுத்தி மூடுவாள். கதவோரம் சுந்தரியின் நிழல் ஒரு கணம் நின்று விலகும்.

"நீ இப்படியெல்லாம் பேசக் கூடாது. அவள் வருத்தப்படுவாள்."

"நான் வருத்தப்பட அவள் விடலாமா, அம்மா?"

இரவு நேரத்தில், நீலா கண்ணயர்ந்த பிறகு, தூங்காமல் புரண்டுகொண்டிருக்கும் சுந்தரியிடம் ராஜம் சொல்வாள். "அவள் சொல்வதையெல்லாம் நீ காதில் போட்டுக் கொள்ளாதே."

"இல்லை....ஆனால் நீ அவளிடம் எதுவும் சொல்லவேண்டாம். அவள் என்னை ஒரு கர்நாடகமான அத்தை என்று நினைத்துக்கொண்டிருப்பதே தேவலை."

"ஓ!" என்று முணு முணுத்தபடி நிறுத்திக் கொள்வாள் ராஜம். அவள் நினைவு ஒரு கணம் சுந்தரியின் மனத்தை, உள்ளாழத்தைத் தொட்டது. அந்தத் தனிமையில் அவள் எந்நேரமும் பாதுகாத்து வரும் உண்மை தெரிந்த போது உடலில் ஒரு சிலிர்ப்பு ஓடிற்று. சுந்தரிக்கும் தெரிந்தது அது.

சுந்தரி எப்போதுமே அப்படித்தான். மனத்தை இலேசில் உடைத்துவிடமாட்டாள்.

பம்பாய்த் தமிழ்ச் சங்கம்

சயான் ரோடு :: பம்பாய்-22

வெள்ளி விழா நாடகப் போட்டி

முதல் பரிசு	...	ரூ.	1500
இரண்டாம் பரிசு	...	ரூ.	1000
மூன்றும் பரிசு	...	ரூ.	500


நாடகம் அனுப்ப வேண்டிய கடைசி தேதி 30-9-65 வரை நீடிக்கப்பட்டுள்ளது

முகவரி : செயலாளர், பம்பாய்த் தமிழ்ச் சங்கம், சயான் ரோடு, பம்பாய்-22

தமிழ் நாடக மேடைக்குச் சிறந்த நாடகங்கள் கிடைக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தப் போட்டியில் தமிழ் எழுத்தாளர்கள் பங்கு கொண்டு இம் முயற்சியை வெற்றியடையச் செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம்.

விதிகள்

1. மொழிபெயர்ப்பாகவோ, தழுவலாகவோ இல்லாத சொந்தக் கற்பனையில் சித்தரிக்கப்பட்ட இலக்கிய, சரித்திர, சமூக நாடகங்களாக இருக்க வேண்டும்.
2. சுமார் 3 மணி நேரம் மேடையேற்றத்தக்கதாக அமைய வேண்டும்.
3. வெள்ளைக் காகிதத்தின் ஒரு பக்கத்தில் மையினால் தெளிவாக எழுதப்பட்டோ அல்லது ''டைப்'' செய்யப்பட்டோ அனுப்பப்படும் நாடகங்களுக்கு எழுத்தாளர்கள் ஒரு நகல் வைத்துக் கொள்ள வேண்டும்.
4. தமிழ்ச் சங்கம் அமைக்கும் பரிசீலனைக் குழு பரிசுக்குரிய நாடகங்களைத் தேர்ந்தெடுக்கும். பரிசீலனைக் குழுவின் முடிவே இறுதியானது.
5. நாடகங்களை பம்பாய் மாநிலத்தில் நடிக்கும் உரிமையும் முதன்முறையாக புத்தகமாக வெளியிடும் உரிமையும் சங்கத்தைச் சேர்ந்தவை. **மற்ற எல்லா உரிமைகளும் எழுத்தாளர்களைச் சேர்ந்தவை.**
6. நாடகத்தின் பெயர், பக்கங்கள், ஆசிரியரின் பெயர் முகவரி முதலியவற்றைத் தனித் தாளில் எழுதி நாடகப் பிரதியுடன் அனுப்ப வேண்டும்.
7. போட்டி பற்றிய எல்லா விஷயங்களிலும் பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தின் தீர்ப்பே முடிவானது.
8. நாடகம் எழுதியனுப்புகிறவர்கள் தனியாக இருபத்தைந்திலிருந்து முப்பது வரிக்குள் நாடகக் கதையின் சுருக்கம் ஒன்றையும் எழுதியனுப்ப வேண்டும்.



OFF-ON-VOLUME
TONE
WAVE BAND



வேதனை எப்போதும் உள்ளே அழுந்தியே கிடக்கும். அவள் இயல்பே அப்படியா? அல்லது அநுபவம் அவளை அப்படி இறுக்கிவிட்டதா?

நீலா அதிகம் படிப்பதில்கூட அவளுக்கு இஷ்டமில்லை. அதுவும் ஏறுத்தின் பெரிசுதான். படித்து வீணுகாமல் இரண்டொரு வருஷங்கள் வேலை பார்க்கலாம் என அமர்ந்துவிட்டாள்.

அப்புறம் இன்னும் இந்தக் கவலைதான்.

காலையில் எழுந்ததுமே அவளை வெளியே அனுப்புகிற நினைவு வந்துவிடும். மாலையில் வீடு திரும்பும்வரை இருப்புக் கொள்ளாது.



''நான், யார் முன்னாலும் கை நீட்டி லஞ்சம் வாங்குறதில்லைங்க!''

செருப்புச் சத்தம் ஒலிக்க நீலா உள்ளே நுழைந்துவிட்டாள். மணி எட்டு அடித்து விட்டது. சுந்தரி பேசவில்லை. சட்டென்று விடிந்த ஓர் ஆறுதலின் அயர்வே அவளை மேலே நினைக்கவொட்டாமல் நிறுத்திவிட்டது. ராஜம் மட்டும் ''ஏன் இவ்வளவு நேரம்?'' என்று கடிகாரத்தைப் பார்த்தபடி கேட்டான்.

''இன்றைக்கு ஆபீஸில் ஒரு பார்ட்டி. மானேஜருக்கு மாற்றல்.''

''காலையில் சொல்லியிருக்கலாமே?''

''அவசரத்தில் மறந்து போனேன்'' என்று சிரித்துக்கொண்டே உடைகளைக் களையத் தொடங்கினாள். சுந்தரியின் புறம் சட்டென்று திரும்பினான் ராஜம். அவள் முகம் வெளுத்திருந்தது.

முகம் கழுவிக்கொண்டு வர நீலா பின்னும் தோளைத் தொட்டுத் திருப்பினான் ராஜம்.

''உன் பெண்ணிடம் உனக்கு ஏன் நம்பிக்கை இல்லை?''

''அவளை என் பெண் என்று வைத்துக் கண்டிக்க முடியாததால்தான்.''

''அவள் முகத்தைப் பார்த்தால், பேச்சைக் கேட்டால் எனக்கு நம்பத் தோன்றவில்லையே?''

''என்னுடைய அத்தையும் கூட என்னை அப்படித்தான் நம்பியிருப்பாள்.''

ராஜம் அசைவற்று நின்றான். அந்தப் பேச்சு சுட்டது. எரிமலையிலிருந்து பொங்கும் பிழம்பைப் போல. ஆனால் அணைந்து போன எரிமலை. என்றோ பொங்கிய அக்னியின் மிச்சம்தான் அது.

''என்னுடைய தவறுகளுக்கு என் பெண் பதில் சொல்ல நேர்ந்துவிடக் கூடாது.''

ஒரு மாதம் ஆகியிருக்கும். மாலை நேரம். இன்னும் நீலா திரும்பப் பொழுதாகவில்லை. ராஜம் சுந்தரியோடு கோவிலிலிருந்து திரும்பிக் கொண்டிருந்தான். பூக்கடை வரிசைகளுக்கு நடுவே நடந்து கொண்டிருந்தபோது சட்டென்று அவனைத் தொட்டு நிறுத்தினாள் சுந்தரி.

''அங்கே பார்.''

கடைக் கடையின் முன் நீலா நின்றுகொண்டிருந்தாள். பக்கத்தில் நின்ற ஒரு வாலிபன் அவளுடன், சிரித்துப் பேசிக் கொண்டே வாங்கிய பூவைத் தலையில் வைத்துக்கொண்டிருந்தாள். சரி செய்தபடி அவனுடன் அங்கிருந்து நகர்ந்தாள் நீலா.

சுந்தரியின் முகத்தைப் பார்க்கப் பயமாக இருந்தது. கால்கள் இறுகி விட்டன. ராஜம் அவளை ஒரு ரிக்ஷாவில் ஏற்றி வீட்டுக்குக் கொண்டு வந்து சேர்த்தான். சிறிது நேரம் இருவரும் பேசவில்லை. அவர்கள் வந்ததுமே நீலாவும் திரும்பி விட்டாள். அவளிடமும் எதையும் கேட்கவில்லை.

மறுநாள் அவள் புறப்பட்டுப் போன பிறகு சாப்பிடத் தோன்றாமல் உட்கார்ந்திருந்தாள் சுந்தரி.

''என்னுடைய பொறுப்பை நான் ஏற்றுக் கொள்ள வேண்டிய வேளை வந்துவிட்டது ராஜம்... நீ எங்களுக்கு எவ்வளவோ செய்திருக்கிறாய். ஆனால் நீ என்ன செய்ய முடியும்? நாங்கள் போய்விடுவதுதான் நல்லது!''

''போய்விடுவதா''

''ஆமாம். எனக்கு நன்றியில்லை என்று நினைக்காதே. என் குழந்தையை அன்று நீ காப்பாற்றினாய். என்னால் மறக்க முடியுமா அதை? இப்போது என்னுடைய முறை—அவள் அடி சறுக்கி விடாமல் காப்பாற்றுவதற்கு. அவள் இங்கிருந்து கிளம்பிவிட வேண்டும். செயற்கையான சூழ்நிலையில் அவள் வாழ்ந்தது போதும். அதுவே உண்மை என்று அவள் நம்பி விடக் கூடாது.''

''செயற்கையா?''

''ஆமாம். பின்னே இது வேறு என்ன? மேல் பூச்சாய் இந்தப் படிப்பு தந்த நாகரிகம், சொகுசான உள்ளங்கை அழுக்குப் படாத வாழ்க்கை என்று நம்பி அவள் மற்றவருடன் பழகும் தாராளம், அவளிடம் சிரித்துப் பேசிப் பழகும், ஆனால் மணந்து கொள்ளத் துணிவில்லாத வாலிபர்களின் பழக்கம். இவைகளில் எது இயற்கை உண்மை? எதை அவள் நம்பிக் காலை அழுந்த வைக்கட்டும் என்று விட்டுவிடச் சொல்கிறாய்?''

ராஜம் பேசவில்லை. என்றோ ஒரு நாள் வழி தவறி விட்டு, அழுது கொண்டே ஊரெல்லாம் அலைந்த பிறகு, யாரோ ஒருவர் நீலாவை வீட்டுக்குக் கொண்டு வந்து சேர்த்த ஞாபகம் வந்தது. வளர்ந்துவிட்ட அந்தக் குழந்தைக்கு இன்று யார் துணை?

''சுந்தரி! என்னைப் பார். உன்னை நான் தடுக்க வில்லை. ஆனாலும் வேறு வழி எதுவும் இல்லையா என்று யோசித்துச் செய். நீ இங்

இருந்து போவதானாலும், ஒரு முடிவுக்கு வந்தாக வேண்டும். அப்போதுதான் நீலா உன்னோடு வரச் சம்மதிக்கலாம்.''

''என்ன முடிவு?''

''நீ யார் என்று நீலாவுக்குத் தெரிந்தாக வேண்டும் –''

சுந்தரி ஒரு கணம் பின்வாங்கினாள். ''ஆகட்டும். என் குழந்தையைக் காப்பாற்றுவதுதான் முக்கியம்...... அதற்காக என்னைப் பற்றிய உண்மையைச் சொல்லிவிட வேண்டியதானாலும்கூட!'' என்றாள் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு.

சுந்தரி அதை எதிர்பார்க்கவில்லை; ராஜும் நிலங்களை விற்று நீலாவின் கலியாணத்துக்கு ஏற்பாடு செய்து விட்டான். உள்ளூரிலேயே பையன். ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தன.

''நீலா எங்கே?'' என்றான் ராஜும்.

''உள்ளே படுத்துக் கொள்ளப் போயிருக்கிறாள்'' என்றாள் சுந்தரி.

ராஜும் திரும்பிப் பார்த்தான். கதவு சாத்தியிருந்தது. இன்னும் அறையின் விளக்கு அணையவில்லை.

''நாளைக்குக் காலையிலிருந்தே ஒரே கும்மாளமாக இருக்கும். நீலாவோடு பேச அவகாசம் இருக்காது. அவளிடம் கொஞ்ச நேரம் பேசப் போகிறேன்.''

''எதைப் பற்றி?''

அவன் முகம் சிவந்தது. ''அவள் கலியாணம் செய்து கொள்ளப் போகிற பெண். ஒரு தாய் பெண்ணுக்குச் சொல்ல வேண்டியவை, அவள் தெரிந்து கொண்டிருந்திருக்கக்கூடியதானாலும்கூடக் கடமைக்காகக் கூற வேண்டியவை — ஏன் — இந்தச் சமயத்தில் சொல்லுவதுதானே சரி?''

அறையை நோக்கி நகர ஆரம்பித்தான் ராஜும். பின்னாலிருந்து சுந்தரி கூப்பிட்ட குரல் அவனைத் தடுத்து நிறுத்திற்று.

''என்னைப் புரிந்து கொள் ராஜும்..... நீ இப்போது நீலாவின் அறைக்குப் போக வேண்டாம்.''

ராஜும் திகைத்துப் போனான். ''ஏன்? என்ன சங்கடம் சுந்தரி இதில்? மணமாகப் போகும் பெண் தன் தாயிடம் இப்படிச் சில புத்திமதிகளைக் கேட்டுக் கொள்வதில்?''

''எனக்குப் புரிகிறது ராஜும். ஆனால் அந்தத் தாய் யார்?''

''ஏன்? நீ சொல்வது—'' என்று தடுமாறினான் ராஜும்.

''ஆமாம். இந்தக் கேள்வியை நான் கேட்பது இது முதல் தடவை இல்லை. எனக்குள்ளேயே எத்தனையோ தடவைகள் கேட்டுக் கொண்டதுதான். ஆனால் எனக்குச் சமாதானம் ஆகவில்லை. எல்லாவற்றையும் நான் அவைகள் வந்தவிதமாக ஏற்றுக் கொண்டாயிற்று. ஆனால் இன்று என்னால் தாங்க முடியவில்லை. இன்று.... இன்றிரவு மட்டுமாவது நீலாவுக்கு நான்தான் தாய்.''

''நீ பேசுவது நன்றாக இல்லை. அதுவும் இந்தச் சமயத்தில்—''

''இதுதான் சமயம். என்னை வெளியிட்டுக் கொள்வதற்கு வேறு சமயம் கிடைக்காது. இருபது வருஷச் சிறையிலிருந்து இன்று ஒரு நாள் வெளியே வந்து பார்க்கத்தான் போகிறேன். என் குழந்தைக்குப் பிடிக்காத அத்தையாக நான் இத்தனை நாள் இருந்தாயிற்று. இன்று நான் தாயாக இருந்து அவளிடம் பேசப் போகிறேன். இத்தனை நாளும், நான் அவளைத் தாயென்று உரிமையோடு அணுக முடியாமலிருந்ததற்குக் காரணம் நீதான்.''

அவளது உணர்ச்சி பொங்கிய எழுச்சியில் ராஜும் திக்பிரமித்து நின்றான்.

சுந்தரி சொன்னது உண்மைதான். அவள் பதற்றத்தோடு கொட்டி விட்டாலும் அதில் அவள் இதயத் துடிப்பைக் கண்டு கொள்ளாமல் எப்படி இருக்க முடியும்? அந்த இரவு மண நாளின் சமீப இரவு, நீலாவின் மனத்தில் எத்தனையோ குதூகலமான கனவுகள் நிறைந்திருக்கும்? அதோ அறையில் அவள் அதில்தான் ஆழ்ந்து படுத்திருக்கிறாள். தூங்கி இருக்க மாட்டாள். தூங்க முடியாது அவளால்.

''சுந்தரி. எழுந்திரு. நீயே நீலாவிடம் போய்ப் பேசி விட்டு வா.''

கிழே படுத்திருந்தவளின் முதுகைப் புரட்டிச் சொல்லிவிட்டு ராஜும் வாசலுக்குப் போய் விட்டான்.

அரை மணி நேரம் ஆகி இருக்கும். யாரோ பின்புறம் வந்து நின்றது போல உணர்ந்து திரும்பினான். சுந்தரி நின்று கொண்டிருந்தாள்.

''ராஜும்! உள்ளே போய்விட்டு வா. நீலா இன்னும் தூங்கவில்லை.''

''நீ பேசியாயிற்றா சுந்தரி?''

''இல்லை. அரை மணி நேரமாகக் கதவுக்கு வெளியே நின்று கொண்டிருந்தேன்..... உள்ளே போகும் துணிச்சல் வரவில்லை.''

''ஏன் அப்படிச் சொல்கிறாய் சுந்தரி?''

''வேண்டாம் ராஜும். என்னுடைய ஆசை பலிக்காது. நான் முயன்று பயனில்லை...... அரை மணி நேரமாகக் கதவுக்கு வெளியே நின்று யோசித்துப் பார்த்தேன். குழந்தைக்குப் புத்திமதி சொல்ல எனக்கு என்ன யோக்கியதை? குடும்ப வாழ்க்கை புனிதமானது. அந்தப் புனிதத் தன்மையை நான் அறியவில்லை. நான் அறிந்தது சொல்வதற்கு அருகதை இல்லாதது.''

''சுந்தரி! மனத்தைத் தேற்றிக் கொள். நீ உள்ளே போய் வா.''

''வேண்டாம். நீயே போய் வா. நான் அவளைப் பத்து மாதம்தான் சுமந்தேன். நீயோ அவளை இருபது வருஷங்களாய்ச் சுமந்திருக்கிறாய். உன் அன்பைக் கொட்டி வளர்த்திருக்கிறாய். நீதான் அவளுடைய தாய். நீலாவின் நினைவில் என்றும் நீ அப்படியே இரு. உன்னைப் பார்த்து உன்னைப் போன்று ஒரு நல்ல வாழ்க்கையை அவள் அமைத்துக் கொண்டால் போதும். அதைப் பார்த்துத் திருப்தி அடைந்து நான் அத்தையாகத் தூரவே நின்று கொண்டிருப்பேன்.''

ராஜும் எழுந்து உள்ளே போகத் தொடங்கினான். சுந்தரி திகைத்து உட்கார்ந்தபடி, அவர்கள் பேசப் போவதைக் கற்பனை செய்ய ஆரம்பித்தாள்.



மேன்மையான தயாரிப்பு - நாள்பட உழைக்கும் - விலையிலும் சிக்கனமானது! டுவின் டஸ்கர் பாப்ளின் பார்வைக்குப் பகட்டானது - உழைப்பில் நீடித்தது. எவ்வளவு சலவை செய்தாலும் அதன் நெசவின் நேர்த்தியை இழக்காதது.

டுவின் டஸ்கர் பாப்ளின் இரண்டு வகைகளில் கிடைக்கிறது.

மதுரை மில்ஸ் கம்பெனி லிமிடெட், மதுரை

உயர்ந்த ரக நூல்களுக்கு உலகப் பிரசித்தி பெற்றது

மானேஜிங் ஏஜண்டுகள் : ஏ. &. எப். ஹார்வி லிமிடெட்

ஹார்வி

டுவின் டஸ்கர்

பாப்ளின் - டிரில் - கேம்பிரிக்

மதுரையைச் சேர்ந்த ஹார்விஸ்

சிறப்புச் சிறுகதை

யாரைத் தெரியும்?

மெதுவாகக் கதவைத் திறந்து உள்ளே நுழைந்தபோது அவள் படுத்திருந்தாள். வாத்தியார் சற்றுத் திகைத்து நின்றார். உடன் முகத்தை வேறு பக்கமாகத் திருப்பிக் கொண்டார்.

"வந்து......"

உள்ளே அவள் சட்டென்று சமாளித்து எழும் சப்தம் கேட்டது. கையில் வளையல்கள் ஜலதரங்கமாய்ச் சரிந்து கொண்டன. இருட்டின் ஒதுக்கத்தில் அவள் நிமிர்ந்து நிலையாய் நின்று விட்டாள்.

"ஒரு காரியமாய்த் திம்மராஜபுரம் வரையில் போய் வரேன்; ராத்திரி எட்டு மணிக்குள்ளே வந்து விடுவேன்!"

"சரி."

வாத்தியார் அவளை ஒரு தரம் பார்த்து விட்டுத் திரும்பிக் கொண்டார். இருட்டிலும், பால் வெளி போல் அவள் உருவம் தெரிந்தது. "எல்லாம் பிராப்



சிறப்புச் சிறுகதை

எளிய வார்த்தைகளைத் தான் பொறுக்கிப் போடுகிறார். எனினும் அவற்றுக்கு எத்தனை அழுத்தம்? அவரது எழுத்து நடை அழகுக்கு ஓர் சான்று 'யாரைத் தெரியும்?' என்கிற இக்கதை.

''அந்தப் பெண்ணை ஊர் தூற்றி விட்டது. அவள் 'தைத்திரீயம்' சொல்கிறதை ஒரு நாள் கேட்டேன். வேதகால மைத்ரேயி வந்து விட்டது போல் தோன்றியது....''

'அவளை அவன் அடைய வேண்டுமானால் ஒரு பிரளயமே நடந்தாகணும்' என்று கூறினார் 'அந்த வைதீகர், ஏன்? எதற்காக? கதையைத் தொடர்ந்து படியுங்கள்.

தம்!'' என்று வாய் முணுமுணுத்துக் கொண்டது. கிணற்றடியில் வந்து நின்றார். 'கொட கொட' என்று ராட்டையைச் சுழல விட்டார். தாழ்வாரத்திலிருக்கும் பானையில் நீரை ஊற்றினார். சற்று ஒதுக்குப்புறமாய், சாக்குப் படுதாவுக்குப் பின்புறம் ஒரு வெண்கலப் பானையும், அதன்மீது அலுமினியப் பாத்திரங்களும் அடுக்கப்பட்டிருந்தன. அவன் சாப்பிடுவதற்கு எல்லாம் தயாராக இருந்தன.

ஓலைக் குடையைக் கையில் எடுத்துக் கொண்டு விசிறியையும், சஞ்சியையும் கையில் இடுக்கிக் கொண்டு புறப்பட்டார். பெருமாள் கோவிலுக்கு இடைவழியில் நுழைந்து பெரிய பாட்டையை அணுகியாகி விட்டது. நிலவை விரித்துப் பரப்பியிருப்பது போல் வெண்கலச் சாலை வெளிறி விடுகிறது. 'சரக் சரக்'கென்று செருப்புக்களைத் தேய்த்துக்கொண்டு தம் பருத்த சரீரத்தைத் தூக்கித் தள்ளியவாறு நடந்தார். ''ம்... யார் கர்மம் யாரை விட்டது?'' மனம் முணுமுணுத்தது. அவளது தோற்றம் கண் முன் வந்தது. வடித்துவிட்டாற்போல் துல்லியமான சௌந்தரியம்! ஆயிரம் சந்திரன் விரிந்தது போல் முகத்தில் தேஜஸ் வீசுகிறது. அவளை நினைக்கும்போதே மனத்தில் இரக்கம் சுரக்கிறது.

அவனுக்காகச் சமைத்து வைத்தது நினைவுக்கு வருகிறது. ''அரைக்கீரையை வேக வைத்து வெழுமையாய் மசித்துக் கற்சட்டியில் வைத்திருக்கிறது. குடுவையில் பருப்பு வெந்திருக்கிறது. போகிணியில் வெண்டைக்காய்க் குழம்பு சாதம்! சுட்ட அப்பளம் இரண்டு!'' அவருக்குச் சட்டென்று நினைவு ஓடியது. 'அடடா! காய்ச்சிய பால் அப்படியே அடுப்பில் இருக்கிறது. புரை குத்தவில்லையே! புரை குத்தினால்லவா இரவில் மோருக்குச் சரியாக இருக்கும்... இப்போது இவ்வளவு தூரம் எப்படித் திரும்பிப் போவது.....!'

அவர் யோசித்து நின்றார். கொத்தாழி ஆலமரத்துத் திருப்பத்தில் யாரோ வருவது தெரிந்தது. நெற்றி மேல் கைவைத்து நிழல் பிடித்துக் கவனித்தார். ''நம்ப சாம்புவாக இருக்குமோ?''

கிட்ட வரவரச் சாம்புவின் உருவம் நன்றாகத் தெரிந்துவிட்டது. வழித்த மண்டையில் வெய்யில் தெறிக்க விறுவிறுவென்று நடைபோட்டு வந்து கொண்டிருந்தான். நெற்றியில் வெள்ளியைத் தடவியது போல் விபூதி! மேலே மசியான முண்டு. கையில் ரெந்தப் புத்தகம். உடம்பெல்லாம் பதித்த வெள்ளரிப் பிஞ்சுபோல் இளமை தளதளக்கிறது.

''சாம்பு! உனக்கு ஆயுசு நூறு! ஒரு காரியமா இம்மாராஜபுரம்வரை போய் வரேன். அதற்கிடையே நீ ஒரு காரியம் செய்யணும்!''

''சொல்லுங்கோ மாமா!''

''ஆத்திலே புரை குத்தாமல் பால் உருளியிலே இருக்கு. சிரமத்தைப் பார்க்காமல் போய்ப் புரைகுத்தி வைக்கணும். இன்றைக்கு அத்யயனம் வேண்டாம். இன்னொரு நாள் வைச்சுக்கலாம்.''

''சரிதான் மாமா!''

''நான் சொன்னதைச் செஞ்சிட்டு அப்புறம் உன் காரியமாய்ப் போய்க்கோ!'' வாத்தியார் சரக்சரக்கென்று செருப்பைத் தேய்த்தவாறு நடக்கலானார். சாம்பு ஊர்த் தெருவை நோக்கி நடக்கலானான்.

இரண்டு மாதங்களாகத்தான் வாத்தியாருக்கு இந்த அலைச்சல்கள். அவருக்கு என்ன நேர்ந்திருக்கிறது என்று அவனுக்குத் தெரியாது. அதற்காகக் கவலைப்படவும் இல்லை. வாத்தியாரது எல்லாச் செய்கைகளிலும் அவனுக்கு அபார நம்பிக்கை! அவற்றில் தெய்வத் தன்மை இருப்பதாக அவனுக்குத் தோன்றியது.

தெருவில் நுழைந்து வாத்தியாரது வீட்டை அணுகிவிட்டான். ஒருக்களித்த கதவைச் சற்றுத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தான். சமையலறையில் நுழைந்து பால் உருளியைக் கீழே இறக்கி வைத்தான். உருளியின் மேலே உள்ள அலுமினிய மூடி வழுவித் தரையில் வட்டமிட்டு விழுந்தது.

''யார் அங்கே?'' அவள் குரல் முற்றத்துத் தாழ்வாரத்திலிருந்து கேட்டது.

''நான்தான்!'' அதற்குப் பிறகு பல கணங்கள் மௌனம். புரைகுத்திவிட்டுப் பாத்திரத்தை மீண்டும் மூடி வைத்துவிட்டான். பிறகு கைகளைக் கழுவுவதற்குக் கிணற்றடி வந்து சேர்ந்தான்.

தாழ்வாரத்துச் சாக்குப் படுதா பின்புறத்தில் நின்றுகொண்டு அவள் பார்ப்பது தெரிந்தது. அவள் தலையைக் குனிந்துகொண்டே

கைகளைக் கழுவிக் கொண்டான். பிறகு எங்கேயோ பார்த்துப் பேசுவது போல் ''பாலே உனை குத்தி இங்கே வைச்சிருக்கேன்!'' என்று கூறிவிட்டு விறுவிறுவென்று வெளியேறலானான்.

கீழச் சந்நிதியுள்ள சிவன் கோவில் நந்தவனத்துக்கு இரண்டு வாளி நீர் இறைத்து விடுவது அவன் வழக்கம். தலையில் துண்டைக் கட்டிக்கொண்டு துலாக்கோலைப் பற்றி இழுத்து வாளியை நீருள் அழுத்த ஆரம்பித்தான். 'ஏல் ஏல்' என்ற ஏக்கக் குரலுடன் துலா முனகிக்கொண்டே மேலெழுந்தது.

''என்ன சின்ன வாத்தியாரே!''

தலையை நிமிர்த்தினான். நாணு மாமா பல்லில் குச்சியை இடுக்கியவாறு நின்று கொண்டிருந்தார். ''என்னடா ஒரே குஷி? தலைகால் புரியல்லே! பெரிய வாத்தியார் சௌக்கியமாடா?''

''சௌக்கியந்தான்!''

''அந்தக் குட்டியும் சௌக்கியந்தானேடா?''

''யார்?''

''அதான்டா! உங்க வாத்தியார் ஒரு புதுச் சரக்கு பிடிச்சுண்டு வந்திருக்காரே!''

சாம்புவுக்குப் புரிந்துவிட்டது. நாணு மாமாவின் நமட்டுச் சிரிப்பும் புரிந்துவிட்டது. ''அதெல்லாம் எனக்குத் தெரியாது மாமா!'' என்று கூறிக்கொண்டே வாளி நீரை வடிகாலில் பாய்ச்சினான். சிலுசிலுவென்ற ஓசையோடு நீர் பாய ஆரம்பித்தது. ஒன்று, இரண்டு, என்று பத்து வாளிகள் எடுத்து விட்டான். பிறகு அங்கிருந்து அவன் நகர்ந்து விட்டான்.

இன்றைக்கு 'அத்யயனம்' இல்லையென்று ஆகிவிட்டது. உடன் ஊருக்குத் திரும்பி விடவும் அவனுக்கு விருப்பமில்லை. வாத்தியாரது கிராமத்திலிருந்து நான்கு பர்லாங் தொலைவில் அவனது கிராமம். முக்கால்வாசிப் போது இந்த ஊரில்தான் பொழுது போக்கு.

மறுநாள் பொது விடிகிறது. காலையில் எழும்போதே வாத்தியாரது நினைவு அவனுக்கு வந்துவிட்டது. அவர்மீது அவனுக்கு ஓர் அலாதி அன்பு. தந்தையைவிட அவரிடம் என்ன வசீகரமென்று அவனுக்கே புரியவில்லை.

காலை ஒளி சற்றுக் கூடும்போது அவன் கிழக்கு நோக்கி நடக்க ஆரம்பித்தான். கிழக்கே அரை மைல் தொலைவில் நத்தம் கிராமம் தெரிகிறது. ஆற்றின் கரையில் மொய்த்த வீடுகளாய்க் கிராமம் தோற்றமளிக்கிறது. அங்கங்கே துவஜ ஸ்தம்பங்கள் போல் தென்னைகள் உயரே போய்க் கப்புகளை விரித்திருக்கின்றன.

வாத்தியார் வீட்டை அணுகியபோது அவன் திடுக்கிட்டு விட்டான். வாத்தியார் பெரிய அம்பாரம் குவித்தாற்போல் திண்ணையில் உட்கார்ந்திருந்தார். இன்னும் குளிக்கவில்லைபோலிருக்கிறது. நெற்றியில் நீறு பூசியிருக்கவில்லை.

''மாமா!''

அவர் கண்களை விரித்தார். கண்களில் குளமாய் நீர் கட்டியிருந்தது. எதிர்பாராத அவர் கண்ணீரைக் கண்டதும் அவன் திகைத்து நின்று விட்டான்.

''இன்னும் குளிக்கப் போகவில்லையா?''

''ம்ஹூம்!''

மேலே கேள்வியில்லை. நியமங்களில் அவர் அணுவளவும் காலம் பிசகாதவர். சாம்பு ஆச்சரியத்தோடு நின்றான்.

''சாம்பு! இது ஒரு விரதம்டா! ஈசுவரி மேலே கோபப்பட்டு நான் கொண்டுள்ள விரதம்! ஈசுவரி என்னைச் சோதனை செய்கிறாள்.'' அவர் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

''உட்கார்ந்துக்கோ, சாம்பு! ஊரிலே எல்லோரும் பேசிக்கிறது உன் காதிலே விழுந்ததோ இல்லையோ?''

சாம்பு மௌனமாய் நின்றான். பிறகு ''ஊரிலே யார் எதைப்பேசினால் எனக்கென்ன? நான் எதையும் கவனிப்பதில்லை!'' என்றான்.

''நீ கவனிக்காவிட்டாலும் நான் உன்னிடம் சொல்லித்தான் ஆகவேண்டும். எதுவும் மனசிலே பாரமாக நிற்கக் கூடாது. நான் இப்போது சொல்கிறது முப்பது வருஷங்களுக்கு முன்னாடி நடந்தது. எனக்கு ஒரு தம்பி. மகா கெட்டிக்காரன். துணிச்சல்காரன் கூட. அவனையும் என்னோடு வைதீகத்திலே சேர்க்க என் தகப்பனார் தீர்மானித்தார். தம்பிக்கு இது பிடிக்கவில்லை. தற்காலப் பழக்க வழக்கங்களிலே அவனுக்கு அப்படியே மோஹ்

சம் பற்று. அப்பாவும் பின்னேயும் சண்டை போட்டுக்கொண்டார். ஒருநாள் தம்பி வீட்டை விட்டுக் கிளம்பிப் போனுன். அப்புறம் திரும்பி வரவேயில்லே.''

வாத்தியார் தொண்டை கரகரத்தது. இரண்டு தடவைகள் தும்மிக் கொண்டார்.

''எல்லோரும் அவனுக்கு முழுக்குப் போட்டுட்டோம்! ஆள் மறைஞ்சு நினைவு மறைஞ்சு வருஷக் கணக்காயிப் போச்சு. அஹ... போன இரண்டாவது மாசத்திலே திடீர்னு எனக்கு ஒரு கடிதம் வந்தது. அதைப் படித்ததுமே மனசு புரண்டு வந்தது. என் தம்பிதான் எழுதியிருந்தான். பாண்டிச்சேரியிலிருந்து எழுதியிருந்தான். ''படுத்த படுக்கையாயிருக்கேன். என்னே அவசியமா வந்து பார்க்கணும்னு எழுதியிருந்தான். போய்ப் பார்த்தேன். இழந்தது கிடைச்ச மாதிரி எனக்கு சந்தோஷம். ஆனுல் அது அற்ப சந்தோஷம்தான். அவன் ஆள் இளைக்கத் துரும்பாய்ப் போயிருந்தான். இப்பவோ அப்பவோன்னு உசிரு! அன்று மணியிலே அதுவும் இக்குன்னு போயிடுத்து! போறதுக்கு முன்னுலே ஒரு காரியம் செஞ்சுட்டுத்தான் செத்துப் போனுன். இந்தப் பெண்ணே தம்பி வீட்டிலே இப்போ இருந்திண்டிருக்கிறளே — அவளே என் கையிலே ஒப்படைச்சுட்டுக் கண்ணே மூடினுன். அவன் அருமையாய் வளர்த்த ஒரு பெண். இரண்டு வருஷங்களுக்கு முன்னுலே அம்மா போயிட்டாளாம். அவள் கண்ணேக் கசக்காமல் வளர்க்கணும்னு கேட்டுக் கொண்டான். ஏற்றுக் கொண்டேன். வேறு வழியில்லே!''

வாத்தியார் மௌனமானுர். அவர் குரல் இப்போது வெகுவாகக் கம்மிவிட்டது.

''தம்பி யாரைக் கல்யாணம் பண்ணிக் கொண்டான், அவா குலம் என்ன, கோத்திரம் என்ன என்றுகூட நான் தெரிஞ்சுக்கலே. அதுக்கு இஷ்டமும் படலே. அவன் நிம்மதியாய்ப் போயிட்டான். இங்கே இந்தப் பெண்ணேப் பார்த்தால் அவள் நடை, உடை பாவனேகள் எல்லாமே வித்தியாசமாக இருக்கு. யார்—யார்க்கு என்னவெல்லாமோ நடக்கிறது. வைதீகத்திலே பிறந்து வைதீகத்திலே வளர்ந்த எனக்கு இந்த மாதிரி ஒரு பந்தத்தை உண்டுபண்ணி விட்டான் ஈசுவரன். இந்தப் பெண்ணு மேலே எனக்கு வெறுப்போ, துவேஷமோ இல்லே. இருந்தாலும் என் தொழிலுக்கு வேண்டிய ஆசாரத்துக்கு ஒத்து வராதென்னு இந்த வீட்டிலே நான் ஒரு பகுதியிலேயும், அவள் ஒரு பகுதியிலேயுமா வாழ்ந்து வரோம். எப்படி வாழ்ந்தால் என்ன, நாங்கள் ஊர் வாயைக் கட்ட முடியுமோ?''

இதற்குப் பிறகு வாத்தியார் சிறிது நேரம் பெருமூச்சு விட்டு உட்கார்ந்து கொண்டிருந்தார். பிறகு ''சாம்பு! எனக்கு நேற்றிலிருந்து இரண்டு வாளி ஜலம் இழுத்துவிடு. குளிச்சுவிடறேன். ஆற்றங்கரைக்குப் போக முடியாது போலிருக்கு!''

சாம்பு உள்ளே போனுன். கீழே வளைய மடித்திருக்கும் தாம்புக் கயிற்றை ராட்டையில் விட்டு இழுக்கிறன். கீழே அண்டா நிரம்பித் தலையாட்டிப் பொம்மை போல் ஆடுகிறது: அவன் அங்கே நின்று கொண்டிருக்கிறன். தலையைக் கோதிக் கொண்டு ஒயிலாய் நிற்கும் அவளது அழகின் உக்கிரம் அவனேத் தாக்கி நடுங்கச் செய்கிறது. கண்டிராத சௌந்தரியத்தைக் கண்டதும் கண்கள் கலங்கி நீர் ததும்பி விடுகிறது. கைகள் ஏனே தானுகவே கூம்ப முயல்கின்றன. யாவும் ஒரு கணத்துள் நடந்து விட்டன. மறுகணம் அவன் வாசலே நோக்கி நடக்க ஆரம்பித்து விட்டான்.

அன்று காலையில் சிறு தூறல் விழுகிறது. சிறிது நேரம் சத்தமே இல்லாது விழுந்து விட்டு உடன் தணிந்து விடுகிறது. வந்த வேகம் போலவே உச்சி மேகம் கரைந்துவிடுகிறது. மீண்டும் சூரிய வெளிச்சம் கண்ணேப் பறித்துக் கொண்டு வெளி வருகிறது.

கிட்டத்தட்ட உச்சி வேளே நெருங்கும் போது சாம்பு நத்தத்துக்குப் புறப்பட்டான். தெருவில் நுழைந்து வாத்தியாரது வீட்டை அணுகியபோது அவரைத் திண்ணேயில் காணவில்லே. வீட்டுக் கதவு ஒருக்களித்திருக்கிறது. உள்ளே இருப்பாரோ என்ற சந்தேகம் மனத்துள் சிறுத்தது. அல்லது திரும்பிப் போய் விட்டாரா?

''இருக்காருங்கள்!'' குரல் கேட்டுத் அவன் திரும்பினுன். பரந்த கடல்கள்போல் கண்கள் விரிந்து நிற்க அவள் நின்று கொண்டிருந்தாள்.

''அவருக்கு உடம்பு சரியில்லே. உள்ளே கொஞ்சம் வந்துவிட்டுப் போங்கள்.''

சாம்பு உள்ளே நுழைந்தான். அவன் கண நேரத்துள் இருளில் மறைந்து போனுன். ரேழியில் கோரைப் பாயில் வாத்தியார் படுத்திருந்தார். மேலேயெல்லாம் போர்த்தியிருந்தார். உடலில் ஜுரம் தகித்துக் கொண்டிருந்தது.

''மாமா!'' அவர் கண் திறக்கவில்லே. அவன் மெதுவாக அவரை உலுப்பி எழுப்பினுன். வாத்தியார் கண்ணேத் திறந்தார்.

''யார், சாம்புவா? நாழிகை என்ன இருக்கும்?''

''மத்தியானம் ஆகிவிட்டது.''

''அடாடா, நியம நிஷ்டை இல்லாமல் படுத்துக் கொண்டு இருக்கிறேனு?'' அவர் எழுந்திருக்க முயன்ருர்.

''இது என்ன மாமா இது?'' அவன் அவரைப் பிடித்துக் கீழே அமர்த்தினுன். ''இந்தக் காய்ச்சலிலே உங்களுக்கு என்ன நியமம் வேண்டியிருக்கிறது?''

''பூஜை பண்ண வேண்டாமா?''

''நான் பண்ணிக் கொள்கிறேன்.''

பூஜைக்குத் தயார் செய்ய ஆரம்பித்தான். குடலேயைத் தூக்கிக் கொண்டு புழக்கடைக்குப் போனுன். கதவைத் திறந்ததும் கண்கள் நிலேகொள்ளாமல் தவித்தன. வெள்ளரளிச் செடிகளிடையே அவள் நின்று கொண்டிருந்தாள். கைகளை நீட்டி இரு விரல்களால் அரளிப் பூக்களேக் காம்போடு கிள்ளி அவள் ஒரு தட்டில் போட்டுக் கொண்டிருந்தாள். தட்டு முழுவதும் வெள்ளே கொழித்துப் பொங்கிக் கொண்டிருந்தது. சாம்பு தூரத்தி

வேலையே நின்றுகொண்டான். அவள் ஒருதரம் திரும்பினாள். கண்கள் இருநீல வானங்களாய் விரிந்தன. ஒரு தரம் புன்னகையை இலேசாகப் படரவிட்டு மீண்டும் தன் வேலையைத் தொடங்கினாள்.

"எனக்குக் கொஞ்சம் மீதி வைத்திருங்கள்" என்றான் அவன்.

"உங்கள் பூஜைக்காகத்தான் பறிக்கிறேன்!" அவள் இசைத்து நின்றாள். அவள் கண்கள் நீல விளக்குகளாய் மாறிச் சுடர் சிந்தின. "ஏன் நான் பறித்துத் தரக் கூடாதா?" என்றாள் அவள்.

"இல்லை; பூஜை விஷயம்! ஆசாரம் அவசியம்!" என்றான் அவன்.

"ஏன் நான் சுத்தத்தில் குறைந்தவளா?" அவள் அவனை ஏறிட்டுப் பார்த்தாள். இப்போது அவள் கண்களில் நீல ஒளி மறைந்து இரண்டு தீக்கொழுந்துகள் ஜொலித்துக் கொண்டிருந்தன. உயர்ந்து வளைந்த புருவங்கள் இந்த உலகத்தையே அளாவி வளைந்திருப்பன போல் தோன்றியது. அந்தத் தீவிரத்தை அவனால் தாங்க இயலவில்லை. அவன் பார்வை வடிந்துபோய்த் தரையில் விழுந்து தத்தளிக்கிறது.

அவள் தட்டை நீட்டுகிறாள். "நான் பறித்ததென்று மாமாவுக்கு மட்டும் தெரிய வேண்டாம்... அவர் ஏற்றுக்கொள்ள மாட்டார். ஆனால் நீங்கள்...."

அவன் பெற்றுக் கொள்கிறான். பிறகு வீட்டுக்குள் நுழைகிறான். பூஜை ஆரம்பமாகிறது. அம்பாள் படத்தின் முன் தீபச் சுடர்கள் அந்தரத்தில் தொங்கும் பொட்டுக்களாய்த் தெரிகின்றன. பிங்கான் யானைத் துதிக்கையிலிருந்து ஊதுவத்திப் புகைகள் சுழன்று வாயிலி உண்டதுபோல் மாயமாய்ச் சுழன்று மறைகின்றன. அவன் பத்மாசனத்தில் அமர்ந்திருக்கிறான்.

பூக்கள் தண்ணென்று குளிர்கின்றன. ஒவ்வொரு பூவும் ஒவ்வொரு சுடராய்த் தெறித்து அம்பாளது பாதங்களில் விழுகின்றன. அவளது கண்களின் சுடர்கள்தான் அப்படி விழுவன போல் தோன்றுகிறது. பூஜை முடிகிறது.

அவன் புறப்படுகிறான். செவிக்கு ஓரத்தில் ஓர் அரளி மலரைச் செருகியிருக்கிறான். வெளியே போகுமுன் கதவை ஒருக்களிக்கும்போது அவள் முற்றத்திலிருந்து அவனைப் பார்ப்பது தெரிகிறது. அவளது புன்னகை நெருப்பாக மாறிப் பூத்துப் பிறகு தணிந்து விடுகிறது.

அடுத்த ஒரு வாரத்துக்கு அத்யயனம் இல்லை. வாத்தியார் படுத்த படுக்கையாகவே யிருந்தார். பூஜை செய்ய வேண்டிய வேலை சாம்புவுக்கே வந்தது. தினமும் அவன் பூப்பறித்து வந்தான். அவை மீது 'ப்ரோக்ஷணம்' செய்த பின்னர்தான் எடுத்துக் கொள்வது வழக்கம்.

அன்று காலை அவன் தோட்டத்துக்குள் நுழைந்தபோது அங்கே அவளைக் காணவில்லை. செடிகளைப் பார்க்கும்போது பூக்கள் அப்படியே கொழித்துத் தெரிந்தன. அவற்றை ஒருவரும் இன்னும் பறிக்கவில்லை. அவன் ஆச்சரியத்தோடு கண்களை அங்குமிங்கும் அலைய விட்டான்.

அவள் ஒரு கல் மீது அமர்ந்திருப்பது தெரிந்தது. மெதுவாக அருகில் வந்தான். அவள் கையை முகத்தில் அழுத்தித் தாங்கியிருந்தாள்.

"இன்னும் பூப்பறிக்கவில்லையா?"

"நீங்கள் பறித்துக் கொள்ளுங்கள். நான் பறித்தால் உங்களுக்குப் பிடிப்பதில்லையே!"

சாம்பு பதில் பேசவில்லை. தானே பூக்களைப் பறிக்க ஆரம்பித்தான். அவன் வாய் புருஷஸூக்தத்தை முனக ஆரம்பித்தது. சிறிது நேரத்துக்குள் அவன் பின்புறத்தில் ஒரு குறுகுறுப்புத் தோன்றியது. சட்டென்று திரும்பினான். அவள் அங்கே நின்று கொண்டிருந்தாள். அவள் கண்கள் அசையாது அவனையே நோக்கிக் கொண்டிருந்தன. அதன் தீவிரத்தைத் தாங்க முடியாது அவன் இதயம் நடுங்கி விட்டது.

"நானே பறித்துக் கொள்வதில் உங்களுக்கு வருத்தமா?"

அவன் சிரித்தான். அவள் கண்களில் இப்போது நீல மணிகள் குளுமையாய்ச் சுழல விட்டன. சிறிது நேரம் பதில் பேசாமல் இருந்தான். பிறகு, "ஈ, எறும்பு, பூச்சியெல்லாம் இந்தப் பூக்களில் எத்தனை தடவை ஏறி இறங்குகின்றன. அவைகளை விட என் கைகள் அசுத்தமா என்ன?"

அவள் சட்டென்று தன் உள்ளங் கைகளை அவன் முன் விரித்தாள். தாமரை விரிந்தது போல் கைகள் வாகவமாய் விரிந்திருந்தன. செவ்வரிகளாக அவைமீது ரேகைகள் ஓடியிருந்தன. தங்க விளிம்பு கட்டிய வளைகள் பளபளத்த கைகள் இரண்டும், பூண் பிடித்த வெண் சங்குகள் போல் தோன்றின.

அவன் பல கணங்கள் துணுக்குற்று நின்றான். பிறகு மௌனமாய்ப் பூக்கூடையை அவள் முன்னே நீட்டினான். மீண்டும் அவள் கண்கள் மலர்ந்தன.

கோடை வளர்ந்து விட்டது. வெகு நாட்கள் இறுக்கத்துக்குப் பிறகு வானம் மூடிக்கொள்கிறது. பல நாட்கள் மேகங்கள் அடுக்கடுக்காக விதானத்தில் படுத்திருந்தன.

ஒரு நாள் மழைக்காக மூட்டம் குமைகிறது. வானம் கறுத்துப் போய்ப் பூமி இருண்டு விட்டது. சற்று நேரத்துக்கெல்லாம் 'சடசட' வென்று மழை பொழிந்துவிட்டு உடன் நின்று விடுகிறது.

சாம்பு காலையில் ஓலைக் குடையோடு வந்து சேர்ந்தான். கையில் கிளை வாங்காத தர்ப்பைப் புற்களும், சமித்துக்களும் நிறைந்து வழிகின்றன. திண்ணையில் வாத்தியார் பெரிய குவியலாய் அமர்ந்திருக்கிறார். சாம்புவைக் கண்டதும் அவர் முகத்தில் பிரகாசம் கூடிவிடுகிறது.

"வாப்பா, சாம்பு! உனக்காகக் காத்துண்டிருக்கேன்!"

சாம்பு எதிர்த் திண்ணையில் உட்கார்ந்தான். "உடம்பு சரியாய்ப் போச்சா மாமா?"


JOSHAGIAJAC 4
எதன்
காரணமாக
நார்ட்டன்
யாவரும் கோரும்
சைக்கிளாக
விளங்குகிறது?
வேலைப்பாடு
ஹிந்த் சைக்கிள்ஸ் லிமிட்., வொர்லி, பம்பாய்-18

''இப்போ நடமாடறேன். எனக்காக ஒரு காரியம் செய்யணுமே, சாம்பு.''

''சொல்லுங்கோ!''

''அத்யயனம் முடிஞ்ச பிறகு, நீ பாளை யங்கோட்டை வரை போய் வக்கீல் சாரைக் கொஞ்சம் பார்த்துவிட்டு வரணும்: அவர் கிட்டே நம்ம வீட்டுப் பெண் மாலதியைப் பற்றி ஒரு வார்த்தை சொல்லியிருக்கேன்: என்ன ஆச்சுன்னு கேட்டு வரணும்!''

''ஆகட்டும்!''

''விஷயம் காதும் காதுமாய் இருக்க வேண்டும். ஊரிலே நாலு பேர்கள் நாலு சொல்லுவா! நல்லவாளுக்கு விரோதிகள் அதிகம். தெரிஞ்சுதா?''

''ம்!''

''பகவான்தான் வழியை விடணும்: அவளுக்கு ஏதாவது வழியைக் காட்டிவிட்டால் எனக்கு மனசு நிம்மதி. அவளுக்கும் மனசு நிம்மதி!''

அத்யயனம் ஆரம்பமாகிறது: நிமிர்ந்து உட்கார்ந்து அவன் 'சந்தை' சொல்ல ஆரம்பித்தான். பாதி சொல்லிக் கொண்டிருக்கும் போது அவன் கண்கள் வெருண்டு நிற்கின்றன: உள்ளே நடைக் கதவுக்கும் திண்ணைக்கும் இடையே உள்ள இடைவெளி விண்டுபோய்ப் பெரிதாகிக் கொண்டு வருவது தெரிகிறது. அவன் உன்னிப்பாக நோக்கியபோது இருட்டுக்குள் இரண்டு நீல மணிகள் வெட்டி ஒளி வீச ஆரம்பிக்கின்றன. பிறகு இருட்டிலிருந்து அவள் வதனம் துல்லியமாய் வடிந்து வருவது தெரிகிறது. இது கனவா அல்லது பிரமையா?

''ஏன்டா, சாம்பு இக்கறது?''

சாம்பு திகைத்தான்.

''கவனம் பிசகு இருக்கக் கூடாது. இந்த வயசிலே கருத்தோடு வேதம் கத்துக்கணும்!''

''இல்...லே. சொல்றதுக்கெல்லாம் அர்த்தம் நிரகிச்சுண்டே போனேன். 'ஐ ஏவ பந்தா' என்பதற்கு மாத்திரம் அர்த்தம் எனக்கு புரியவில்லே!''

''ஐ — ஏவ — பந்தா!'' வாத்தியார் ராகமாய் இழுத்தார். ''அவன்தான் வழி'' என்று அர்த்தம். வழியும் அவனே! வழியின் முடிவும் அவனே!''

அத்யயனம் மேலே தொடர்ந்தது. அவன் கண்கள் தாமாகத் திரும்பின. அங்கே அந்த நீலமணிகளைக் காணவில்லை. மறைந்து விட்டது. அங்கே வந்து நின்றது அவள்தானா? அல்லது பிரமையா? அவன் கண்கள் முன் அவள் தோட்டத்தில் பூப்பறிப்பது போல் தோற்றம் எழுந்தது. ஒருகணத்தில் ''இதெல்லாம் எதற்கு?'' என்று மனத்தைத் தானே கண்டித்து இழுத்து விட்டுக் கொண்டான்.

அத்யயனம் முடிந்து விட்டது. எழுந்து நின்று வேஷ்டியைச் சரி செய்துகொள்ளும் போது அவன் மீண்டும் திடுக்கிட்டான்: அங்கே நடையில் அவள் நின்றுகொண்டிருப்பது தெரிந்தது. அவள் ஏதோ சமிக்ஞை செய்து கொண்டிருந்தாள். அதன் பொருள்? அவனது பார்வையை மறுபக்கம் செலுத்தி விட முடியாதபடி அவள் சைகை செய்தது தெரிந்தது.

சாம்பு புறப்பட்டான். அவள் என்ன சொல்ல விரும்புகிறாள் என்பதை உள்ளே சென்று அறிந்துகொள்ள மனமில்லை. வெளியே தெருவில் வந்ததும் சற்று யோசித்து நின்றான்: பிறகு தெருக் கோடிக்குச் சென்று புறக்கடைச் சாலை வழியாகச் செல்ல ஆரம்பித்தான். அவன் நினைத்தது சரியாக இருந்தது. தோட்டத்துச் சுவர் அருகில் அவள் நின்று கொண்டிருந்தாள். ''இங்கே வாருங்களேன், எனக்காக ஒன்று செய்வீர்களா?''

அவள் கண்களில் இப்போது இரக்கம் மழையாகப் பெய்கிறது. ஏன் அவள் கண்கள் கலங்க வேண்டும்?

''சொல்லுங்கள்!''

''உங்களை நம்புகிறேன். உங்கள் பவித்திரமான உள்ளத்தை நம்புகிறேன். எனக்கு இந்த உபகாரம் செய்யுங்கள். பாளையங்கோட்டை வக்கீல் என்ன சொன்னார், அது என்ன விஷயம் என்று என்னிடம் சொல்லிவிட்டுப் பிறகு மாமாவிடம் சொல்வீர்களா?''

அவன் மௌனமாக நின்றான்.

''நான் இந்த உபகாரத்துக்குத் தகுதியற்றவளா, சொல்லுங்கள்!'' அவள் முகம் குழைந்தது.

''எனக்கு இந்த உபகாரம் செய்வீர்களா?''

''கட்டாயம் செய்கிறேன்.''

அவன் அவளைப் பயபக்தியுடன் கும்பிட்டான். நிலவின் ஒரு கிரணம் தோட்டத்தில் வந்து இறங்கி அவன் முன் நின்று பேசுகிறதோ என்று தோன்றியது. அவன் அங்கிருந்து அகன்று விட்டான்.

பாளையங்கோட்டை விஷயத்தை முடித்துக் கொண்டு வரும்போது அந்தி நேரமாகிவிட்டது. அவன் மனத்தில் ஒரு போராட்டமே நிகழ்ந்து கொண்டிருந்தது. நடந்தவற்றையெல்லாம் அவளிடம் சொல்லலாமா, சொல்லக் கூடாதா?

தோட்டத்து நடுவில் வந்ததும் விக்கல் குரல் கேட்டது. அவன் மனம் அடித்துக்



கொண்டது. புடவைப் பந்தலிற்கு அவள் உட்கார்ந்து விம்முவது தெரிந்தது.

"ஏன் அழுகிறீர்கள்?"

அவள் விம்மல் அடங்கவில்லை. அவன் அவளை இரக்கத்தோடு பார்த்தான். அவள் விம்முவதை அடக்கச் சற்று நேரமாயிற்று.

"எங்கேயோ பட்டண வாசத்தில் எப்படி வாழ்ந்தேன்? ஆனால் இங்கே இப்படி ஒரு குக்கிராமத்தில் தன்னந்தனியாய்த் துணைக்கு மனுஷாள் இல்லாமல் இப்படி அவல வாழ்வு வாழ்கிறேன். அதை நினைத்தால் நெஞ்சம் அடைத்துக் கொள்கிறது."

அவள் பேச்சின் உச்சரிப்பிலே ஒரு மழலைக் குரல் பிரதிபலிக்கிறது. அவளுக்கே உரியதான அந்தத் தனிப் பாணியில் அவள் ராகத்தோடு பேசுவது எவ்வளவு அழகாக இருக்கிறது. சாம்பு சற்று நேரம் பேசாதிருந்தான்.

"நான் பாளையங்கோட்டையிலிருந்து நேராக இங்கு வருகிறேன்."

"நீங்கள் எனக்காக அப்படிச் செய்வீர்கள் என்பது எனக்கு நன்கு தெரியும். உங்கள் மீது எனக்கு நல்ல நம்பிக்கை."

"உங்கள் கல்யாண விஷயமாகத்தான வக்கீலிடம் வாத்தியார் பேசியிருக்கிறார். வரனும் பார்த்தார்கள்."

"வரனும் பார்த்தார்களா? யார் அது?"

சாம்பு மௌனமாய் நின்றான்.

"சொல்லுங்களேன்!"

"யாரோ ஒரு பிள்ளை. அவன் அநாதை என்று வைத்துக் கொள்ளுங்களேன். ஒரு கால் நொண்டியும் கூட!"

"அவ்வளவு தூரம் போய்விட்டாரா? இரு மனத்துக்கு என் சம்மதமே வேண்டாமா? இதற்காகத்தான் என் தந்தை என்னை இவனிடம் ஒப்புவித்தாரா?" அவள் விம்மலானாள்.

"பையனை எனக்கே பார்க்கப் பிடிக்கவில்லை. துளிக்கூட முகத்தில் லக்ஷணமில்லை. வக்கீல் வீட்டில் அவன் ஏதோ எடுபிடி வேலை செய்கிறானாம்."

"அப்படிப்பட்டவருக்கா என்னைப் பார்க்கிறார்கள்?"

"நானே வக்கீலிடம் உங்களைப் பற்றி எல்லா விஷயங்களையும் கூறி விட்டேன். அவர் வெகு நேரம் யோசித்த பிறகு 'அந்தப் பெண்ணுக்குத் தகுந்த பிள்ளை இவனில்லை. இதை விட்டு விடலாம்' என்று சொல்லிவிட்டார்."

"அப்பா!" அவள் வாயில் நிறைவோடு வார்த்தை வெளி வந்தது. அப்போதுதான் வெளிக் கிளம்பி வரும் உதய விக்கிரகம் போல் அவள் உடலெங்கும் ஒரு பிரசன்னம் தோன்றி விட்டது. கண்களைத் துடைத்துக் கொண்டாள். வார்த்தைகள் நன்றிப் பெருக்கால் திணறின. "எனக்கு இவ்வளவு தூரம் உதவி செய்கிறீர்களே! அதற்கு நான் எவ்வளவு கடமைப்பட்டிருக்கிறேன். நான் ஆதரவற்றவள். எனக்கு நீங்கள்தான் கதி. வழி! கைவிட்டு விடாதீர்கள்!"

"நான் வருகிறேன். மாமா எனக்காகக் காத்துக் கொண்டிருப்பார்" என்று அவன் நகரலானான்.

நாட்கள் நகர்கின்றன. சாம்புவின் கண்கள் குளமாய் நிறைகிறது. தனிமையில் திரும்பும்போதெல்லாம் அழுகை குமிழ்க்கிறது.

வாத்தியார் வீட்டுக்குப் போய் இரண்டு மாதங்களாகி விட்டன. அத்யயனம் நின்று விட்டது. இனி மேல் வாத்தியாரோடு உள்ள தொடர்பே நின்று விட்டது என்று சொல்லலாம். அவனுடைய தந்தைதான் அந்த உறவைத் துண்டித்து விட்டார். அவரைச் சொல்லிப் பிரயோசனமில்லை. வாத்தியார் 'விஷயங்களை'ப் பற்றி நாலு ஊரும் சிரிக்கிறது. யாரோ குலம் தெரியாத வடக்கத்திப் பெண்ணாம்! அவளை வீட்டில் சேர்த்துக் கொண்டு.......அனுசாரமாம்....

காற்றில் துணுக்குகளாக மிதந்தது இப்போது குபீரென்று பற்றி எரிகிறது. வாத்தியாரிடம் அத்யயனத்தை ஒவ்வொருவராக நிறுத்திக் கொண்டு விட்டார்கள். கடைசியாக மீந்திருந்த அவனுமே சிக்ஷையை நிறுத்திக் கொள்ள வேண்டியதாயிற்று. வாத்தியாரது புரோகிதத்தை வரவேற்கும் வீடுகளும் குறைந்து வந்தன; உண்மையில் அவர் தற்சமயம் எப்படி ஜீவனம் பண்ணுகிறார் என்பதை நினைக்கவே ஆச்சரியமாக இருந்தது.

அன்று அவனுக்கு ஒன்றுமே ஓடவில்லை; கூடத்தில் உட்கார்ந்து உபநிஷத்து படித்துக் கொண்டிருந்தான்.

"சாம்பூ......." அவன் துள்ளியெழுந்தான். அது வாத்தியாரின் குரல்தானே? இரண்டு எட்டில் வாசலுக்கு வந்து விட்டான்; வாத்தியாரது உருவத்தைக் கண்டதும் மெய் சிலிர்த்து விட்டது. "நமஸ்காரம், மாமா!"

"சாம்பூ...... சௌக்கியமாடா? ஏண்டா, ஊர்ப் பக்கமே வரவில்லை?"

சாம்பு பதில் பேசவில்லை.

"உன் மேல் இருக்கிற ஆசை எனக்குப் போயிடுமா? நானே நடந்து வந்திருக்கிறேன், பாருடா! அத்யயனம் போறும்னு முடிவு கட்டினுல்கூட ஒருதரம் இப்படி ஊர்ப் பக்கம் வந்துட்டுப் போடா!"

வாத்தியார் போய் விட்டார். அவன் கண்களில் நீர் ததும்பியது. ஊரார் எல்லோர் மீதும் அவனுக்கு ஒரு வெறுப்புத் தட்டியது.

அன்று மாலையிலேயே அவன் புறப்பட்டு விட்டான். யாராவது பார்ப்பதற்குள் தத்தம் போய் வந்துவிட வேண்டும். மெல்லிருள் சூழ்ந்து கொண்டிருந்தது. வாத்தியாரது வீட்டை நெருங்கியாகி விட்டது. திண்ணையில் அவர் உட்கார்ந்திருந்தார்.

"வாடா சாம்பு!"


அவன் பயபக்தியோடு அவர் பக்கத்தில் நின்றான்.


"சாம்பு! அத்யயனத்தை நிறுத்துன்னு உங்கப்பா சொல்லி விட்டாரென்றாலும் என்னிடம் ஒரு வார்த்தை சொல்லாமல் நின்று விடுவதா என்ன? உள்ளே வா இப்படி!" அவர் அவனை அழைத்துக் கொண்டு ரேழியுள் நுழைந்தார். உள்ளே அறையிலிருந்து ஒரு பழைய புத்தகக் கட்டை எடுத்து அவன் முன்னே நீட்டினார்.


"இதெல்லாம் என்ன மாமா?"

"எல்லாம் கிரந்தப் புத்தகங்கள்! இதெல்லாம் உனக்கே இருக்கட்டும். படிக்கிறவர்களுக்குத்தான் புத்தகம். என் சொத்து இவைதான். உனக்குக் கொடுக்கிறதிலே எனக்கு எவ்வளவு சந்தோஷம் தெரியுமா?"









சாம்புவின் கண்கள் நீரில் மிதந்து விட்டன. இரு கைகளாலும் புத்தகங்களைக் கண்களில் ஒற்றிக் கொண்டான். பிறகு புறப்பட்டு விட்டான். கால்கள் மாத்திரம் சற்றுத் தயக்கத்தோடு இழுத்தன. வாயிற்படி வந்ததும் சிந்தனையோடு சற்று நின்றான். "சாம்பூ!" என்று அவர் மீண்டும் அழைப்பது தெரிந்தது: அவன் உள் நோக்கித் திரும்பினான்:

"பின்கட்டிலே அவள் ஜுரத்தோடு படுத்துக் கொண்டிருக்கா. போர்வை வேணும் போல இருக்கு. நான் போய் விழுப்பைத் தொட வேண்டாம். கொஞ்சம் போர்வையை எடுத்து அவளுக்குக் கொடுத்து விட்டுப் போ!"

போர்வையை எடுத்துக் கொண்டு அவன் பின்புறம் சென்றான். அங்கே பட்டாசாலை அருகில் அவள் படுத்திருந்தாள். இலேசாக முனகல்: துவண்டு கிடக்கும் அவள் உடலைக் கண்டதும் அவன் திடுக்கிட்டான்.

"இந்தாங்கோ!"

இரண்டு குரலுக்குப் பிறகு அவள் மெள்ள அசைந்து கொடுத்தாள். அவனைக் கண்டதும் கண்கள் மலர்ந்து விட்டன. உடன் எழுந்திருக்க முயன்றாள்.

"நீங்கள் படுத்திருங்கள். நான் இந்தப் போர்வையைப் போர்த்தி விடுகிறேன்."

அவள் கேட்கவில்லை. எழுந்திருந்து உட்கார்ந்தாள். தலை பிசிறுகளாகப் பறந்திருந்தது. முகம் வெளிறி வாடியிருந்தது.

"நீங்கள் இவ்வளவு நாட்களும் எங்கிருந்தீர்கள்?"

"எங்கள் ஊரிலேயே தங்கி விட்டேன்!"

"ஏன் இங்கே வரவில்லை?"

அவன் மௌனமானான். "போர்த்தி விட்டுமா?" என்றான் மீண்டும்.

"என் மீது உங்களுக்கு ஏன் அக்கறை? நான் எல்லோருக்குமே வேண்டாதவளாகி விட்டேன்." அவள் ஏறிட்டுப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"உலகத்தில் வேண்டாதது என்று ஒன்றுமேயில்லை!"

"நான் வேண்டாதவள்தான். நான் இங்கே இருப்பதே சிறைதான்!"

அவன் மீண்டும் மௌனமாகி விட்டான். "உங்களுக்கு உடம்பு எப்படி இருக்கிறது?" என்றான் அவன்.

"ஜுரம் இன்னும் இருக்கிறது!"

"நாளை நான் பாளையங்கோட்டையிலிருந்து மருந்து வாங்கி வரட்டுமா?"

"எனக்கா....? உங்களுக்கு அவ்வளவு கரிசனம் இருக்கிறதா?"

அவள் விழிகளில் இப்போது நீலம் ததும்பி விட்டது. அதன் குளுமை அவன் உடலைச் சில்லிடச் செய்தது. மேலே பேச முடியாமல் குரல் அடைத்துக் கொண்டது. "வருகிறேன்" என்று கூறி விடைபெற்றான்.

மறு நாள் அவன் வரும்போது அதே அந்தி நேரமாகி விட்டது. வெளி வாயிலில் வாத்தியாரைக் காண வில்லை. மெதுவாகக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான். உள்ளே கணீரென்ற குரலில் மந்திர அத்யயனம் கேட்டதும் திடுக்கிட்டான். இது யார்? அவள் குரலா?

தாழ்வாரத்து அருகில் அவள்தான் மந்திரங்களை இசையோடு உச்சரித்துக் கொண்டிருந்தாள். அவனைக் கண்டதும் சட்டென்று நிறுத்தி விட்டு எழுந்திருக்க முயன்றாள்.

"இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரிய வந்தது?"

"நீங்கள் சிக்ஷை சொல்லும்போது அது என் மனத்திலும் பட்டு உரு ஏறி விட்டது!"

அவன் அவளை உற்று நோக்கினான். அவள் கண்களில் இன்று ஓர் உயிரும் தெம்பும் ஏறி விட்டன: அவன் மருந்து சீசாவை அவள் முன் வைத்தான். "உங்கள் உச்சரிப்பு வெகு அழகாக இருக்கிறது!" என்று கூறி விட்டுத் தலையைக் குனிந்து கொண்டான்.

"நீங்கள் இனி இங்கே வரமாட்டீர்களா?"

"வருவதற்கில்லை!"

"ஏன்?"

"ஊரெல்லாம் வாத்தியாருக்கு எதிரிகளாய் மாறி விட்டார்கள். அதிலே எங்க அப்பாவும் ஒருவர். நானும் ஊரை அனுசரிக்க வேண்டியிருக்கிறது!"

"நான் இங்கு இருப்பதனால்தானே மாமாவுக்கு இவ்வளவு துன்பம்?" அவள் விசித்துக் கொண்டாள்.

"அவர் இதை ஒரு பொருட்டாகக் கருத மாட்டார். தெய்வத்துக்கும், உண்மைக்கும் தான் அவர் அடி பணிந்தார். பிற ஒன்றுக்கும் பயப்பட மாட்டார். யாருக்காகவும் பயந்து உங்களைக் கைவிட்டுவிட மாட்டார். கல்யாண முயற்சி இல்லை என்று ஆன பிறகு உங்களை ஹாஸ்டலில் சேர்த்துப் படிக்க வைக்கப் பிரயாசைப்படுகிறார். கையில் பணமில்லை. உபகாரச் சம்பளத்துக்கு அலையாய் அலைகிறார்!"

"அப்படியா? என்னிடம் ஒரு வார்த்தை சொல்லக்கூட அவரால் முடியவில்லை: முற்றத்தில் நின்று பேசிவிட்டு அப்படியே போய் விடுகிறார்."

"அவர் வைதீகத்தில் வாழ்பவர். அதனுள் சில சட்டதிட்டங்களுக்கு அவர் உட்பட வேண்டியிருக்கிறது.

அவள் முகத்தில் ஒரு தெளிவு பிறக்கிறது:

"இனி மேல் நீங்கள் எப்போது வருவீர்கள். சொல்லுங்கள்! உங்கள் சிக்ஷைக் குரல் கேட்கா விட்டால் இந்த வீடே சோபிப்பதில்லை." அவள் குரல் கனிகிறது.

"நிஜமாகவா?"

"ஆமாம்; உங்கள் குரலுக்கே ஓர் அலாதி ஜீவன் இருக்கிறது!"

அவன் இலேசாகச் சிரித்தான்.

"சொல்லுங்கள்! நீங்கள் எப்போது வருவீர்கள்?"

"எப்போதாவது வருவேன்."

அவள் கண்கள் தயங்கி நிற்கின்றன; அதன் நீலமணிகளின் ஒளி சற்றுக் கனிகிறது.

"நான் வருகிறேன். உடம்பைப் பார்த்துக் கொள்ளுங்கள்!" என்கிறான் அவன்: அவன் செல்லும் வழியைப் பார்த்து நிற்கிறாள் அவள்.

ஊர்த் தோப்புக்கள் வழியாகச் சாம்பு நடந்து வந்து கொண்டிருக்கிறான். கழனிகளையும், தோட்டங்களையும் பார்க்கப் பார்க்க மனம் வெதும்புகிறது: கண்களில் நீர் பெருகுகிறது. இன்னும் எத்தனை நாட்கள் இந்த ஊர் வாழ்வு? ஒரு வாரமா? அவ்வளவு தானே! புறப்படும்போது வாத்தியாரிடம் தெரிவித்தால் போதுமில்லையா?

அவன் கண்களில் நீர் துளித்து விடுகிறது:

டில்லிக்குப் போக வேண்டுமாம்! ஏற்பாடாகி விட்டது. டில்லியில் யாரோ தூரத்து உறவுக்காரர்கள் இருந்தார்கள். அங்கே புரோகிதம் பண்ணுவதற்கு ஆள் தேவை என்று எழுதிவிட்டார்கள். டில்லி அதிகாரிகள் வீடுகளில் கொள்ளை கொள்ளையாகச் சம்பாதிக்கலாமாம்! அப்பாவும் உத்தரவு போட்டு விட்டார்! வேறு வழியில்லை; டில்லிக்குப் போக வேண்டியதுதான்! இந்தக் கிராம வாழ்வு இதோடு அவ்வளவுதான்!

புறப்படுவதற்கு முந்தியதினம் வாத்தியாரிடம் விடைபெற்றுக் கொள்ள அவன் புறப்பட்டு விட்டான். கிராமத்தை நெருங்க நெருங்க மனம் துடித்துக் கொள்கிறது.

வாத்தியார் வீட்டுத் திண்ணையில் அவரைக் காணவில்லை. கதவு ஒருக்களித்திருந்தது. திறந்ததும் ஒரு கணம் அவன் பிரமித்தான். அங்கே அவள் நின்று கொண்டிருந்தாள். அவனைக் கண்டதும் அவள் சிரிப்பில் மலர்ந்து விட்டாள்.

"வாத்தியார் எங்கே?"

"வெளியூர் போயிருக்கிறார். இப்போது கூட வரும் நேரந்தான்!"

சிறிது நேரம் அவன் மௌனமாக நின்றான்.

"நான் நாளைக்கு ஊருக்குப் போகிறேன்...!"

"எந்த ஊருக்கு?"

"டில்லிக்கு!"

"டில்லிக்கா?"

"ஆமாம்! நாளைக் காலை ஐந்து மணிக்கு வண்டி! தாழையூத்து போய் ரயில் ஏறுகிறேன்."

"அப்புறம்?" அவள் குரல் கம்மி விட்டது. அவள் கண்களில் உள்ள நீல ஒளிகள் குன்றி விட்டன.

"டில்லியிலேயே தங்க வேண்டியதுதான்! புரோகிதந்தான் என் தொழில்."

அவள் தலை குனிந்தாள். அவளது கண் விளிம்புகள் கொட்டிக் கொள்வதை அவன் காண முடிந்தது.

"கடைசியில் எனக்குத்தான் யாருமில்லை!" அவள் குரல் கரகரத்தது.

"உங்களுக்கும் ஒரு வழி ஏற்படும்!"

"வழியா? ஒரு தரம், 'ஸ ஏவ பந்தா' என்று சொல்லும் போது நீங்கள், நினைவிருக்கிறதா? 'அவர்தான் வழி!' என்று மாமா அர்த்தம் கூறினார். அன்றிலிருந்து அந்த வாக்கியம் என் மனத்தில் பதிந்து விட்டது. எனக்கு......" அவள் தயங்கினாள்: "நீங்களே வழியாகத் தோன்றி விட்டீர்கள்!"

"நாணு! நம் எல்லோருக்கும் அவன்தான் வழி....!"

அவன் அவளை இரக்கத்தோடும், கனிவோடும் பார்ப்பது தெரிந்தது.

"நான் வரட்டுமா?" என்றான் அவன்.

அவள் பதில் பேசவில்லை. தலையைக் குனிந்து கொண்டாள். "என்னை மறந்துவிட மாட்டீர்களே?" என்றாள்.

"நாணு?"

அவள் கண்களில் இரண்டு தீபங்கள் குதித்தெழுந்து அவனை உக்கிரத்தோடு பார்ப்பது போலிருந்தது. 'நாணு?' என்று அவன் கேட்ட கேள்வியின் ரீங்காரம் மனத்தை ஏதோ செய்வது போலிருந்தது.

"வருகிறேன்" என்று கூறி அங்கிருந்து அவன் நடக்கலானான்.

அன்று இரவில் உறக்கமே வரவில்லை: பொழுது விடிந்தால் பயணம் கிளம்ப வேண்டும்! ஊரை விட்டுப் போவதே எவ்வளவு துன்பமாக இருக்கிறது? அதுவும் வாத்தியாரிடம் நேரில் விடைபெற முடியாமல் போய்விட்டது:

இரவின் ஜாமங்கள் ஓடிக் கொண்டிருந்தன. நான்கு மணிக்கு எழுந்து விட்டான்: உடனேயே கிணற்றில் குளித்து விட்டுப் புறப்படத் தயாரானான்: ஒரு பெட்டியும் பையுமாகத் தெருக் கோடி வரை அப்பா வந்து வழி அனுப்பினார்.

இன்னும் இருள் கலையவில்லை: எங்கும் ஒரே அமைதி! அவன் கண்களில் ஒரே நீர்! சாலை வாத்தர் கம்பம் அருகில் வரும் போது அங்கே வாத்தியார் நிற்பது தெரிந்தது. அவன் மனம் சிலிர்த்து விட்டது.

"மாமா!"

"வாப்பா சாம்பு! உனக்காகக் காத்துண்டிருக்கேன். ஊருக்குப் போறியாம்! சொல்லிக் கொள்வதற்காக வீட்டு வரை வந்திருந்தாயாம்!"

"ஆமாம், மாமா! டில்லிக்குப் போறேன். எல்லாம் புரோகிதம் பண்ணி வைக்கத்தான்! அப்பா உத்தரவு ஆசீர்வாதம் பண்ணுங்கோ!"

சோம்பேறியின் மாப்பிள்ளை



வியட்நாமியக் கிராமமொன்றில் ஒரு குடியானவன் இருந்தான். அவன் மகா சோம்பேறி. அவனுக்கு அழகான ஒரு மகள் இருந்தாள். அவளிடம் பெண் கேட்டுப் பல இளைஞர்கள் வந்தனர். ஆனால் அவனோ, "என்னைவிட மிகவும் சோம்பேறியான ஒருவனுக்கே என் மகளை மனைவியாக்குவேன்" என்று கூறி அவர்களைத் திருப்பி அனுப்பிவிட்டான்.

ஒரு நாள் இளைஞன் ஒருவன் முதுகுப் பக்கமாக நடந்தபடி சாலையில் வருவதைக் குடியானவனும் அவன் மகளும் கண்டனர். அந்த இளைஞன் குடியானவனிடம் வந்து நின்று உன் மகளைக் கல்யாணம் செய்துகொள்ள வந்திருக்கிறேன் என்றான்.

குடியானவன், "அதிருக்கட்டும். நீ ஏன் பின் பக்கமாக நடந்து வந்தாய்?" என்று விசாரித்தான்.

"நீங்கள் எனக்குப் பெண் கொடுக்கச் சம்மதிக்காவிட்டால் நான் திரும்பிப் போக வேண்டுமல்லவா? திரும்புகிற சிரமத்தை விலக்குவதற்காக நான் பின் பக்கமாகவே நடந்து வந்தேன்."

இந்தப் பதிலைக் கேட்டு, இவனே என் பெண்ணுக்குத் தகுந்த சரியான மாப்பிள்ளை என்று மகிழ்ந்து மகளை அவனுக்கு மணம் முடித்து வைத்தான்.

—இரா. சண்முகம்

"க்ஷேமமாய்ப் போய் வா! தொழிலிலே நல்ல அபிவிருத்தியோடு வாழு!" அவர் குரல் கூடக் கம்மி விட்டது.

"உன்னை எப்படியும் கண்டு வழியனுப் பணும்னுதான் காலங் கார்த்தாலே எழுந்து வந்துவிட்டேன்." அவர் கண்களைத் துடைத் துக் கொண்டார்.

"மாமா! எனக்கு இந்த ஊரை விட்டுப் போக உண்மையிலே பிடிக்கலே மாமா! அதுவும் உங்களை விட்டுப் போக மனமில்லே!"

"அப்படிச் சொல்லப்படாது, சாம்பு! நாலு இடத்தைப் போய்ப் பார்த்தால்தான் அறிவு விருத்தியாகும்; எனக்கே தோன்று கிறது. நாலு இடத்தைப் பார்த்து நாலு விஷயம் தெரிஞ்சுக்காததனாலே என் வாழ்க் கையே பாழானதாய்த் தோணுறது!"

"உங்கள் வாழ்க்கையா, மாமா? நீங்களும் உங்கள் ஆசாரமும்......."

"ஆசாரமா, சாம்பு! மனிதத் தன்மைக்கு ஒவ்வாத ஆசாரத்திலே எனக்கு நம்பிக்கை குறைஞ்சு போச்சு! என் சுத்தமே எனக்குச் சோறு போடவில்லே யென்றும் எனக்கு நம் பிக்கை தளரத்தானே செய்யும்!"

வாத்தியார் முகத்தைத் துடைத்துக் கொண்டார்;

"அந்தப் பெண்ணை ஊர் தூற்றிவிட்டது. அவள் 'தைத்திரீயம்' சொல்றதை ஒரு நாள் கேட்டேன். வேதகால மைத்ரேயி வந்து விட்டது போல் தோன்றியது. அவள் அறிவையும் சாதுர்யத்தையும் பார்க்கும் போது... அவளது தாயார் யாரானும் என்ன என்றுதான் தோன்றுகிறது!"

"எனக்குக்கூட அவள் பவித்திரத்தன்மை யில் நம்பிக்கை, மாமா!"

"நான் இன்னும்கூட நினைச்சேன். என் நினைவுகள் அளவாயிருந்தால் சுத்தம்! வாய் திறந்து சொல்லி விட்டால் அசுத்தமாகி விடும். அதனாலே நான் முழுசாச் சொல்ல முடியாது. இந்தக் கிராமத்திலே இந்தச் சூழ்நிலையிலே நான் நினைச்சது நடக்காது; அந்த நினைவு அப்படிப்பட்ட நினைவு! அந்த நினைவின் பாதியை அவள் அடைந்துக் கொண்டிருந்தாள். மறு பாதியை நீ அடைந் துக் கொண்டிருந்தாய்!"

"நானு?"

"ஆமாம், சாம்பு! நான் நினைச்சது என்னன்னு கேட்காதே! அது நடக்கிறபடி தான் நடக்கும்! உன்னையும் இழுக்க நினைச் சது சுவராளுக்கே பொறுக்க முடியவில்லே போல இருக்கு! உன்னையும் டில்லிக்கு அனுப்பி விடுறார்!"

"நீங்கள் சொல்வது......" சாம்பு குழறினான்.

"என் நினைப்பு என் மனசிலே உருவா கிறதுக்கு என் அந்தரங்கத்திலே ஒரு புரட்சி நடந்தது. அதை நான் வெளியிலே சொல்லி நடத்தி வைக்கிறதுன்னு அதற்கு ஒரு பிரளயமே நடந்தாகணும். அதற்கெல்லாம் எனக்குச் சக்தி?"

சாம்பு பிரமித்து நின்றான். மனத்தில் பளிச் சென ஏதோ புலப்பட்டு விட்டது.

"உனக்கு நேரமாகிறது சாம்பு! க்ஷேம மாய்ப் போய் வா! நான் இங்கேயே நின்று விடுகிறேன்."

அவன் அவர் பாதங்களைத் தொட்டு ஒத்திக் கொண்டான்.

வாத்தியார் சொன்ன சங்கேத மொழி திடீரெனப் பெரிய உருவாய் அவன் முன் முட்டித்து. "அவள் பாதி, நான் பாதி!" அவன் முணுமுணுத்தான். உண்மை வெளிச்சமாயிற்று.

வாத்தியார் அதைத்தான் நினைத்தாரா? அவன் மனம் கொந்தளித்தது. வைதிக வாழ்வின் சிறு வட்டத்தில் இருந்து கொண்டு, அதன் இயக்கங்களில் மாத்திரம் தன்னை உட் படுத்திக் கொண்டு, இத்தனை நாட்களும் அந்த நினைவின் நுனியைக்கூடத் தொட்டறி யாத அவனுக்கு, மனத்தில் இப்போது ஓர் எண்ணக் கோல் கண்டதும்........

"நீங்கள்தான் வழி." அவள் கூறியது காதில் ஒலித்தது. அதன் உண்மைப் பொருள் இப்போது மனத்தில் தட்டுப்பட்டு விட்டது. உடலெல்லாம் சிலிர்த்து வழிந்தது. "அவள் அப்படியா நினைத்தாள்?"

மனத்தில் இன்ப அலைகள் புரண்டு கொண் டன. அதன் சக்தி அவனைத் திக்குமுக்காடச் செய்தது. "அவள் அப்படியா நினைத்தாள்?" அதை நினைக்கும்போதே மனம் எங்கேயோ நீந்திப் போகிறது.

வாத்தியார் நினைத்து விட்டால் போதுமா? அவள் நினைத்து விட்டால் போதுமா? பாதி யும் பாதியும் இணைய வேண்டுமானால் இன் னும் எத்தனை பேர் நினைக்க வேண்டும்?

"அதற்கு ஒரு பிரளயமே நடந்தாகணும்!" வாத்தியார் கூறியது நினைவுக்கு வருகிறது. ஊர் முழுதும் திரண்டு அவனுக்கு எதிரே நிற்பது தெரிகிறது. "ஆமாம்! வாத்தியார் சொன்னது சரிதான்! பிரளயந்தான் நடந் தாகணும்!" அவன் அழுகையோடு தலை யசைக்கிறான்.

ரயிலடியை அடைந்தாகி விட்டது. பிளாட்பாரத்தில் சில மனிதர்கள்! ஐந்து ஐந்துக்கு ரயில் வருகிறது. ஏறி உட்காரு கிறான். ரயில் புறப்பட்டது. இருள் இன்னும் விலகவில்லை. வாத்தியாரது கிராமம் தொலை வில் நிழலோடு நிழலாய்த் தெரிகிறது. அவன் கண்கள் நிறைந்து விட்டன.

கண்களைத் துடைத்துக் கொண்டான். நெஞ்சம் ஒரு தரம் விம்மி அமிழ்ந்தது. துடைத்துக் கொண்டே பார்வையைப் பெட் டிக்குள் திருப்பினான். உடன் கண்கள் திடுக் கிட்டு விட்டன. உடலெல்லாம் சிலிர்த்து விட்டது. இதயம் ஒரு கணம் நின்று விட்டுப் பிறகு பலமாக அடித்துக் கொண்டது. வண்டி யின் எதிர்ப் பலகையில் அவள் அமர்ந்திருந் தாள். கண்களில் நீர் ஒளிகள் நிதானமாய் எரிந்து கொண்டிருக்க, ஒரு தேவதை போல் கம்பீரமாய் அவள் உட்கார்ந்திருந்தாள்.

"நீங்களா?" அவன் நாக்கு குழறியது.

"ஆமாம்!"

"எங்கே போகிறீர்கள்?"

"டில்லிக்கு!"

"அங்கே யாரையேனும் தெரியுமா?"

"தெரியும்!"

"யாரைத் தெரியும்?"

"உங்களைத்தான்!"

Edited printed & published by T. Sadasivam on behalf of Messrs. Bharathan Publications Private Ltd., at the Kalki Press, Kilpauk, Madras-10



REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

